விலை : 20.00
பக்கங்கள் : இருபது
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 சித்திரை 20 சனிக்கிழமை (03.05.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 135

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001 சான்றிதழ் பெற்றுள்ள ஒரே சீமெந்து ராம்கோ

## குற்றச்செயல்களுக்கு தண்டனை விதித்தல்

# இலங்கையின் நடவடிக்கைகளில் திருப்தியில்லை - அமெரிக்கா



(வாஷிங்டன்)

குற்றச் செயல்களுக்கு தண்டனை விதித்தல் குறித்த இலங்கையின் முனைப்பு திருப்தியளிக்கவில்லை என அமெரிக்கா குற்றம் சுமத்தியுள்ளது. நல்லிணக்கத்தை ஏற்படுத்தவும், குற்றச் செயல்களுக்கு தண்டனை விதிக்கவும் அரசாங்கம் காத்திரமான நடவடிக்கை எடுக்கத் தவறியுள்ளதாக தென் மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான அமெரிக்கத் துணை இராஜாங்கச் செயலாளர் நிஷா பிஸ்வால் தெரிவித்துள்ளார். (20ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.தே.க. அம்பாந்தோட்டையில் இன்று சத்தியாக்கிரக போராட்டம்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி, இன்றைய தினம் அம்பாந்தோட்டை பொலிஸ் நிலையத்திற்கு எதிரில் சத்தியாக்கிரகப் போராட்டம் ஒன்றை நடத்த தீர்மானித்துள்ளது.

மத்தள விமான நிலையம் மற்றும் அம்பாந்தோட்டை துறைமுகம் ஆகிய இடங்களில் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மீது தாக்குதல் நடத்தி, 19 ஆம் பக்கம் பார்க்க..

## அப்பனுக்கு உதவியவர் அனுராதபுரத்தில் கைது

(வவுனியா)

விடுதலைப் புலிகள் மீள ஒருங்கிணைய உதவி செய்ததாக கூறப்படும் ஒருவர் அனுராதபுரம் பிரதேசத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

அனுராதபுரம் பொலிஸாருக்கு கிடைத்த தகவல் ஒன்றை அடுத்து மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் பின்னர், இந்த நபர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட் 19 ஆம் பக்கம் பார்க்க..

## கஷ்ட பிரதேசங்களில் கடமையாற்றாத ஆசிரியர்களுக்கு விரைவில் இடமாற்றம்

### யூன் முதலாம் திகதி புதிய சேவை என்கிறார் சத்தியசீலன்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் யாழ்ப்பாணம், வலிகாமம், தென்மராட்சி, வடமராட்சி கல்வி வலயங்களைச் சேர்ந்த கஷ்ட பிரதேசங்களில் கடமையாற்றாத ஆசிரியர்களுக்கு நிபந்தனை அடிப்படையில் இடமாற்றங்கள் வழங்கப்படவுள்ளதாகவும் இடமாற்றம் வழங்கப்படவுள்ள ஆசிரியர்கள் யூன் முதலாம் திகதி முதல் புதிய சேவை நிலையங்களுக்கு செல்லவுள்ளனர் என்று வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஆசிரிய பயற்சி கலாசாலைகளிலிருந்தும் தேசிய கல்வியியற்கல்லூரியிலிருந்தும் வெளியேறும் ஆசிரியர்களின் பெயர் பட்டியல் இம்மாத இறுதிக்குள் கிடைக்கும் என்றும் ஆசிரியர் பற்றாக்குறையுள்ள வலயங்களுக்கு அவர்கள் நியமிக்கப்படவுள்ளதாகவும் 19 ஆம் பக்கம் பார்க்க..



## சட்ட விரோத பயணம் ; 54 பேர் கைது



(மெல்பேர்ன்)

அவுஸ்திரேலியாவுக்கு செல்ல முயற்சித்த 54 பேர் முல்லைத்தீவில் நேற்றுக் கைது செய்யப்பட்டதாக கடற்படையின் பேச்சாளர் கோசல வர்ணகுலசூரிய தெரிவித்தார்.

முல்லைத்தீவு கடற்பரப்பில் கைது செயயப்பட்ட இந்த புகலிட கோரிக்கையாளர்களில் 11 பெண்கள், 13 சிறு 19 ஆம் பக்கம் பார்க்க..

## ராஜபக்ஷக்களுக்கு எதிராக யுத்தம் செய்யும் காலம்

### நெருங்கி வந்துவிட்டது என்கிறது ஜே.வி.பி.

(கொழும்பு)

மக்களின் எதிர்ப்புகள் வரும்போது அதனைத் தடுத்து தொடர்ந்து ஆட்சியை தக்கவைத்துக்கொள்ளும் ஆயுதமாக இனவாதத்தை பயன்படுத்த அரசாங்கம் முயற்சிப்பதாகத் தெரிவித்துள்ள மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி.) தலைவர் அனுர குமார திஸாநாயக்க, தமது கட்சி அரசியலில் இருக்கும் வரைக்கும் நாட்டில் இனவாத மோதல் ஏற்படுவதற்கு இடமளிக்கப்போவதில்லை யெனவும் தெரிவித்தார்.

நாரஹேன்பிட்டியிலுள்ள பீ. ஆர். சி. மைதானத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற ஜே.வி.பி.யின் செம் மே தினக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அனுர குமார திஸாநாயக்க இவ்வாறு தெரிவித்தார்.

ஜே.வி.பி.யின் அரசியல் குழு உறுப்பினரும் தொழிற்சங்கங்களின் மத்திய நிலையத்தின் தலைவருமான லால்காந்த தலைமையில் நடைபெற்ற இந்த செம்மே தினக் கூட்டத்தில் கட்சித் தலைவர் அனுர 19 ஆம் பக்கம் பார்க்க..

## கலாசார சீரழிவுகளுக்கு பின்னால் வெளியார் உள்ளீடல்களே காரணம்

### முதலமைச்சர் ஆதங்கம்

(யாழ்ப்பாணம்)

எமது சகல சமூகச் சீரழிவுகளுக்கும் பின்னால் வெளியார் உள்ளீடல்களே காரணமாக இருக்கின்றன. இதனை வெளியார் உணர்ந்தால் அவர்களை வெளியனுப்புவது இலகுவாகி விடும். இவ்வாறு முதலமைச்சர் விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

நேற்றுக் கொக்குவில் பொதுச் சந்தைத் தொகுதியை திறந்து வைதது்ப் பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நல்லூர் பிரதேச சபையினால் சுமார் 19.5 மில்லியன் ரூபாய் செலவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கொக்குவில் புதிய சந்தைக் கட்டிடத் தொகுதி நேற்றுக் காலை 8.00 மணியளவில் வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜாவினாலும் திறந்து வைக்கப்பட்டது.

நல்லூர் பிரதேச சபையின் தலைவர் ப.வசந்தகுமார் தலைமையில நடைபெற்ற இந்நிகழ்வில் பெயர்ப் பலகையை பாராளுமன்ற உறுப்பினரான சிறிதரன் திறந்து வைக்க, நினைவுக்கல்லை யாழ்மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் திரை நீக்கம் செய்து வைத்தார்.

இந்நிகழ்வில் வட மாகாண சபை உறுப்பினர்களான அனந்தி சசிதரன், கஜதீபன், அனோலட் மற்றும் வலி.வடக்கு, வலி.தென் மேற்கு, வலி.மேற்கு, சாவகச்சேரி பிரதேச சபைகளின் தலைவர்கள், உள்ளூராட்சி உதவி ஆணையாளர், யாழ மாவட்ட உதவி ஆணையாளர் உட்பட மற்றும் பொது மக்கள் அரச அதி 19 ஆம் பக்கம் பார்க்க..

## படை வீரர்களை நினைவுகூரும் மாதம்

(கொழும்பு)

படை வீரர்களை நினைவு கூரும் மாதத்தை பிரகடனப்படுத்தும் நிகழ்வு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நேற்று வெள்ளிக்கிழமை அலரி மாளிகையில் நடைபெற்றது.

இது தொடர்பிலான கொடி விற்பனையும் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது. முதலாவது கொடி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு அணிவிக்கப்பட்டது.

இந்தநினைவு மாதம் எதிர்வரும 19 ஆம் பக்கம் பார்க்க..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருநகர் யுவதி உயிரிழப்பு; காரணம் கண்டறிய நாளாகும்

## யாழ்.பொலிஸார் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

பொலிஸ் புலனாய்வுப்பிரிவு உயிரிழந்தவரின் சடலத்தை கண்டுபிடிக்குமாயினும் அதற்கான காரணத்தைக் கண்டறிய நாளாகும் என யாழ். பொலிஸார் தெரிவித்தனர்.

குருநகரில் உள்ள கிணறு ஒன்றில் அண்மையில் சடலமாக மீட்கப்பட்ட ஜெறோமி கொன்சலீற்றா எனும் யுவதியின் மரணம் தொடர்பில் பொலிஸார் மேற்கொண்ட விசாரணை பற்றி கேட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

குறித்த சந்திப்பில் பதிலளித்த யாழ் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் விமலசேன மேலும் தெரிவிக்கையில்,

உயிரிழந்த பெண்ணின் சடலத்தை கண்டுபிடித்தோம். பெண் யார் என கண்டுபிடித்தோம். இவை எல்லாம் புலனாய்வு மூலம் தான் கண்டுபிடிக்கப்பட்டது என்றார்.

சடலம் கிடந்த கிணற்றினையும் புலனாய்வு மூலமா கண்டறிந்தீர்கள் என கேட்ட ஊடகவியலாளர் ஒருவர் பொலிஸாரின் புலனாய்வு இவற்றினை மட்டுமா கண்டறியும் என கேள்வி எழுப்பினார்.

மேலும் சடலம் கிடந்ததனை யார் தெரியப்படுத்தியது? பெண் எப்போது காணாமல் போனார்? எப்போது கிணற்றுக்குள் வீழ்ந்தார்? அல்லது வீழ்த்தப்பட்டார்? எனப் பல கேள்விகளுக்கு பொலிஸார் பதில் தெரியாமல் முளித்தனர். (செ-2-4)

# இராட்சத கொம்புத் திருக்கை மீனவர்களின் வலையில் சிக்கியது




சுமார் 400 கிலோ நிறையுடைய இராட்சத கொம்புத் திருக்கை மீன் ஏறாவூர் சவுக்கடியில் ஆழ்கடல் மீன்பிடியாளர்களின் வலையில் நேற்று சிக்கியுள்ளது.

நீண்ட இறகுகளையும் இரு கொம்புகளையும் கொண்ட இம்மீனை மீனவர்கள் கரைக்குக் கொண்டு வந்து சேர்க்க சிரமப்பட்டதாக தெரிவித்துள்ளனர்.

கடற்கரைச் சந்தை விலையின்படி சுமார் 80 ஆயிரம் ரூபாவுக்கு இந்த ஒரு கொம்புத் திருக்கை மீன் விலை போகலாம் என்று மீனவர்கள் கூறினர். (செ-11)

# யாழ்.வீடொன்றின் பகுதி தீயினால் எரிந்து சேதம்

## தீயணைப்பு பிரிவினர் அறிவித்தும் வரவில்லை



(யாழ்ப்பாணம் )

யாழ்ப்பாணம் தட்டாதெரு பகுதியிலுள்ள வீடொன்றின் பகுதி நேற்று வெள்ளிக்கிழமை தீயினால் எரிந்து சேதமடைந்துள்ளது.

தீ குறித்து அறிவித்தும் அவ்விடத்திற்கு மாநகர சபை தீயணைப்புப் பிரிவினர் வருகை தரவில்லையென தெரிவிக்கப்படுகின்றது.

வீட்டில் இருந்தவர்கள் வெளியில் சென்றிருந்த போது, வீட்டின் கூரை வழியே பெருமளவு புகை வருவதினை அவதானித்த அயலவர்கள் உடனடியாகச் சென்று தீயினைக் கட்டுபாட்டுக்குள் கொண்டு வர முயற்சித்துள்ளனர்.


இருந்தும் வீட்டிலிருந்த மின்சாதனப் பொருட்கள், தளபாடங்கள் மற்றும் ஆவணங்கள என்பன தீயினால் முற்றாக அழிவடைந்துள்ளன.

இத் தீவிபத்து குறித்து அறிவித்தும் மாநகர சபையின் தீயணைப்புப் பிரிவு வருகை தராமை குறித்து, தீயணைப்பு பகுதியின் பொறுப்பதிகாரி ஞானப்பிரகாசம் அன்ரனிடம் தொடர்பு கொண்டு கேட்டபொழுது,

மேற்படி சம்பவம் தொடர்பாக தொலைபேசி அழைப்பின் மூலம் தகவல் கிடைக்கப்பெற்றமை உண்மை. இருந்தும், மாநகர சபையின் குடிநீர வழங்கல் பிரிவினர் குருநகர்ப் பகுதிக்கு குடிநீர் வழங்குவதற்காக எமது நீர்த் தாங்கி வண்டியினை எடுத்துச் சென்றமையினால் தீ அனர்த்தம் ஏற்பட்ட பகுதிக்கு எம்மால் செல்ல முடியவில்லை எனக் கூறினார்.(செ-6)

# சர்ச்சைக்குரிய பேச்சு; முதலமைச்சர் விளக்கம்

(யாழ்ப்பாணம்)



நேற்று முன்தினம் சாவகச்சேரியில் நடந்த மே தினக்கூட்டத்தில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் ஆற்றிய உரையில் சர்ச்சைக்குரிய கருத்துக்கள் இருந்ததாக ஊடகங்களில் வெளிவந்த செய்தி தொடர்பில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் விளக்கக் குறிப்பொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

என் பேச்சின் சர்ச்சைக்குரிய பகுதி பற்றிய எனது விளக்கம் என்று தெரிவித்து முதலமைச்சர வெளியிட்ட விளக்கக் குறிப்பு வருமாறு,

அலெக்சாண்டர் ஒரு மகாவீரன். அதற்காக அவன் அதிகாரங்கள் அனைத்தையும் தன்வசம வைத்திருக்கவில்லை என்று கூற முடியாது.

பிரபாகரன் ஒரு மகா வீரன் என்று சரத் பொன்சேகா கூட அண்மையில் கூறியிருநதார். அதற்காக அவர் அதிகாரங்கள் அனைத்தையும தன்வசம் வைத்திருக்கவில்லை என்று கூற முடியாது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச 18-வது திருத்தச் சட்டத்தின் பின் அதிகாரங்கள் அனைத்தையும் தன்வசமே வைத்திருக்கின்றார். இன்று கேட்பாரின்றி அதிகாரத்தில் இருக்கின்றார். இவை எவ்வளவு காலத்திற்கு என்பதைப் பற்றி ஜனாதிபதி சிந்திக்க வேண்டும் என்றே மேற்கண்டவாறு கூறினேன்.

தங்கை அனந்தி அவர்கள் நான் கூறியதன அர்த்தம் புரியவில்லை என்றும் ஆனால் முதலமைச்சர் காரணமில்லாமல் எதுவும் கூறியிருக்க மாட்டார் என்றும் கூறியதாக அறிந்தேன். அப்படிக் கூறியிருந்தால் அவருக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும் நான் பேச்சு முடிந்து மண்டபத்தில் இருந்து வெளியே வந்தபோது எவருமே என்னை அண்டி எதுவும் கேட்கவில்லை, கேட்க எத்தனிக்கவும் இல்லை. எல்லோரும் வழக்கம போல் கைகூப்பி வணக்கம் தெரிவித்தே என்னை வழியனுப்பினார்கள் என்றுள்ளது. (ந)


பிள்ளையார் இன்

வாடிக்கையாளரின் அபிமானம் பெற்ற உங்கள் பிள்ளையார் இன் இல் இன்று முதல் மாலை 3 மணி தொடக்கம் 6 மணிவரை யாழ் முறைப்படி தயாரிக்கப்பட்ட யாழ்ப்பாண பால் அப்பம் சுடச் சுட உடனடியாக வழங்கப்படும்.

(சி-7232) தொடர்புகளுக்கு:- இல.31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 0212222829



ALL OUT
Pest Control Service

கறையான் தொல்லையா?
உங்கள் கட்டடங்களை
உத்தரவாதத்துடன்
பாதுகாத்துக் கொடுக்க
நாங்கள்
இருக்கின்றோம்




(6290)

தொடர்புகளுக்கு
ந.ரூபகாந்த் : 0771515897, 0214993200


# மின்னியலாளர் இலவச பயிற்சி

(யாழ்ப்பாணம்)

தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையின் கீழ் தொழிற்சாலை மின்னியலாளர் பயிற்சி நெறிக்கு (NVQ சான்றிதழ்) யாழ்ப்பாணம் பயிற்சி நிலையத்திற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபையின் யாழ்.மாவட்ட உத்தியோகத்தர் கி.கிருஷ்ணபாலன் அறிவித்துள் ளார்.

இப் பயிற்சி நெறிக்கான கல்வித் தகைமையாக க.பொ.த (சா/த) வரை கல்வி கற்றிருத்தல் வேண்டும். விண்ணப்பதாரி 16 வயது தொடக்கம் 35 வய திற்குட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

தகுதியுடையவர்கள் தமது சுயவிபர கோவையை எதிர்வரும் 20-ம் திகதிக்கு முன்னதாக "மாவட்ட முகாமையாளர், NAITA இல.44, சோம சுந்தரம் வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்" எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (செ-2)


துயர் பகிர்வு



அமரர் சின்னையா செல்லம்மா

கடந்த 31.03.2014 அன்று அமரத்துவமடைந்த அமரர் சின்னையா செல்லம்மா அவர்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்ப உறவுகளுக்கும், விசேடமாக அன்னாரின் அன்பு மருமகன் திரு.மு.முரளிதரன் (அதிபர், யா/சன்மார்க்க மகா வித்தியாலயம், யாழ்ப்பாணம்) அவர்கட்கும் எம் அனுதாபங்களை 31-ம் நாள் நினைவு தினத்தில் சமர்ப்பிக்கின்றோம்.

கோட்டக்கல்வி அலுவலர்,
சகோதர அதிபர்கள்,
யாழ்.கல்விக்கோட்டம்,
யாழ்ப்பாணம்.

(6286)



கணினி திருத்தம்

உங்கள் கணினிகள் பழுதடைந்து விட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து திருத்தி தருகிறோம்.

அழையுங்கள் 0779086737

GUNAA BEST PC Computer Repair
52,Hospital Road,Jaffna. (C-7207)



வீடு விற்பனைக்கு

ஸ்ரான்லி வீதி சிறாம்பியடி ஒழுங்கையில் சகல வசதிகளும் கொண்ட வீடு விற்பனைக்கு உண்டு.

தொ.பே : 0779763278, 0712117168, 0775489833

தொடர்பு: ப.சிவநாதன் காளிகோயிலடி, நீர்வேலி வடக்கு, நீர்வேலி.


# உறவினர்கள் தொடர்பு கொள்க

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் இல.08 விடுதியில் தங்கியுள்ள பாலசுப்பிரமணியம் (வயது 64) என்பவரது உறவினர்களை உடன் தொடர்பு கொள்ளுமாறு யாழ்.போதனா வைத்தியசாலை பணிப்பாளர் வைத்தியர் எஸ்.சிறிபவானந்தராஜா கேட்டுள்ளார்.

குறித்த நபர் நோய்வாய்ப்பட்டு அநாதரவாக வீதியில் இருந்த வேளை வீதியில் சென்ற ஒருவரினால் கடந்த மாதம் 16-ம் திகதி யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

தற்போது இவர் குணமடைந்த நிலையில் முகவரி தெரியாததால் வீடு செல்ல முடியாதுள்ளதாகவும் ஆதலால் உறவினர்கள் வைத்தியசாலைக்கு சமூகம் தருமாறும் பணிப்பாளர் கேட்டுள்ளார். (செ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவை கலட்டி மக்களின் தேவைகள் குறித்து அமைச்சர் டக்ளஸ் ஆராய்வு

(மாவைகலட்டி)

வலி.வடக்கு பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட மாவை கலட்டிப் பகுதிக்கு நேற்று முன்தினம் விஜயம் மேற்கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அங்கு வாழும் மக்களின் அடிப்படைத் தேவைகள் உள்ளிட்ட ஏனைய விடயங்கள் தொடர்பில் நேரில் ஆராய்ந்தறிந்தார்.

இதன்போது அங்கு தற்காலிக மற்றும் இந்திய வீடமைப்புத் திட்டத்திலும் ஏனைய வீடமைப்பு திட்டங்களிலும் வாழ்ந்து வரும் மக்களின் அடிப்படைத் தேவைகள் தொடர்பிலும் மக்கள் எதிர்நோக்கி வரும் ஏனைய இடர்பாடுகள் தொடர்பிலும் அவர் கவனம் செலுத்தினார்.

இதனிடையே குறித்த பகுதியில் கல்லை அகழ்ந்தெடுக்கும் போது துறைசார்ந்தோர் எமக்கு உரிய அறிவித்தல்கள் வழங்கியதன் பின்னர் அதுகுறித்து ஆராய்ந்ததன் பின்னரே அதன் பணிகளை தொடர வேண்டுமெனவும் அதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டுமென பிரதேச செயலருக்கும் பொலிஸாருக்கும் அமைச்சர் பணிப்புரை விடுத்தார்.

அங்குள்ள பொதுக்கிணற்றை பொது இணக்கப்பாட்டுடன் சகல மக்களும் குடிநீருக்காக பயன்படுத்த வேண்டுமெனவும் இதற்காக எல்லோரும் ஒற்றுமையுடன் செயற்பட வேண்டுமெனவும் அமைச்சர் கேட்டுக் கொண்டார்.

அத்துடன் அங்கு உடனடியாக 7 குடும்பங்களுக்கு மலசல கூடங்களை அமைக்கும் வகையில் குழிகளை அமைத்துக் கொடுப்பதற்கும் இரண்டு குழாய்க் கிணறுகளை அமைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் குழாய் கிணறுகளுக்கான நீர்ப்பம்பிகளை பெற்றுக் கொள்வது தொடர்பில் நீர்வளச் சபையின் உதவியைப் பெற்றுக் கொள்வது தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டது.

இந்நிலையில் அந்தப் பகுதி மக்களுக்கு காணிகள் பகிர்ந்தளிக்கப்படும் போது முன்னுரிமை வழங்கப்பட வேண்டுமென்பதுடன் அதன்பின்னரே ஏனைய வெளிமாவட்டங்களைச் சேர்ந்த மக்களுக்கு வழங்க வேண்டுமெனவும் அமைச்சர் துறைசார்ந்தோருக்கு பணிப்புரை விடுத்தார்.

இதனிடையே தொழிற்சாலையொன்றை நிறுவி அதனூடாக அங்கு வாழும் இளைஞர், யுவதிகளுக்கு வேலை வாய்ப்பினை வழங்குவது தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டது.

அத்துடன் தற்போது மக்கள் குடியிருப்புப் பகுதியிலுள்ள கள்ளுத்தவறணையை அப்புறப்படுத்தி அதற்கென வேறு இடத்தில் நான்கு பரப்புக் காணியை பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கையை மேற்கொண்டார். (2)

## குமுறல் நூல் வெளியீடு

(கொழும்புத்துறை)

*குமுறல்* எனும் நூல் வெளியீட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நல்லூர் துர்க்கா தேவி மணி மண்டபத்தில் செங்குந்தா இந்துக் கல்லூரி ஆசிரியை திருமதி. சு.வாசுகி தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடமாகாண கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

இதன்போது இந்நூல் ஏற்புரையினை நூலாசிரியர் திருமதி. பி.சுபாசினி நிகழ்த்துவார். தொடர்ந்து நூல் வெளியீட்டுரையினை கோப்பாய் ஆசிரியர் கலாசாலை ஓய்வு நிலை விரிவுரையாளர் கலாநிதி செ.நாவுக்கரசு ஆற்றுவார்.

நூல் மதிப்பீட்டுரையினை கு.பாலசண்முகன் நிகழ்த்துவார். (2-51)

## பொலிஸ் திணைக்களத்தினால் விண்ணப்பங்கள் கோரல்

(கொழும்புத்துறை)

இலங்கை பொலிஸ் திணைக்களத்தினால் பெண் உப பரிசோதகர் மற்றும் பெண் கொஸ்தாபல் பதவிகளுக்கு இலங்கைப் பெண் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் ஆறு பாடங்கள் மற்றும் க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் மூன்று பாடங்களிலும் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

திருமணமாகாத 18 வயதுக்கும் 28 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் விண்ணப்பிக்கலாம் விண்ணப்பங்களை எதிர்வரும் ஜூன் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்க கூடியவாறு விண்ணப்பிக்கும் பதவியின் பெயரை குறிப்பிட்டு பணிப்பாளர் பொலிஸ் ஆட்சேர்ப்பு பிரிவு இல. 375 ஸ்ரீசம்புத்தத்துவ ஜெயந்தி மாவத்தை -கொழும்பு- 6 எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு இலங்கை பொலிஸ் திணைக்களம் அறிவித்துள்ளது.

மேலதிக விபரங்களை 2014.04.11 ஆம் திகதி வர்த்தமானியில் பார்வையிட முடியும் என்றும் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் யாழ். பொலிஸ்மா அதிபர் காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (2-51-29)

## தெய்வீக அன்னை ஈஸ்வரம்மா தினவிழா

தெய்வீக அன்னை ஈஸ்வரம்மா தின விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு சேர்.பொன்.இராமநாதன் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம் எனும் முகவரியிலமைந்துள்ள *சத்தியசாயி சேவா* நிலையத்தில் நடைபெறும்.

அன்றைய தினம் பாலவிகாஸ் மாணவர்களின் வில்லுப்பாட்டு, நாடகம் மற்றும் இசையும் அசைவும் நிகழ்ச்சிகளுடன் உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி. மதிவதனி விக்னராஜாவின் சிறப்புரையும் இடம்பெறவுள்ளன. எதிர்வரும் 6 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் 6 மணிவரை *ஈஸ்வரம்மா தினம்* அனுஷ்டிக்கப்படவுள்ளது. (2)

## புகையிரத விபத்தில் காயம் அடைந்தவர்களுக்கு நஷ்டஈடு

குருநாகல் - பொத்துஹெர பகுதியில் இடம்பெற்ற ரயில் விபத்தில் காயமடைந்த நபர்களுக்கு, 25 ஆயிரம் ரூபா நஷ்டஈடு வழங்கவுள்ளதாக புகையிரதத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

குறித்த விபத்தில் காயமடைந்தவர்களுக்கு நஷ்டஈடு வழங்கப்படும் என போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கம அண்மையில் குறிப்பிட்டிருந்தார்.

இதன்படி புகையிரத திணைக்களத்தின் ஊடாக குறித்த நிதி வழங்கப்படவுள்ளதாக புகையிரத வர்த்தக அதிகாரி ஜீ.டபிள்யூ. எஸ்.சிசிரகுமார குறிப்பிட்டுள்ளார்.

பொத்துஹெர புகையிரத நிலையத்திற்கு அருகில் கடந்த 29 ஆம் திகதி இரண்டு புகையிரதங்கள் நேருக்கு நேர் மோதி ஏற்பட்ட விபத்தில் 75 பேர் காயமடைந்து குருணாகல் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்து குறித்து விசாரணை நடத்த 4 பேர் கொண்ட விசேட குழுவும் நியமிக்கப்பட்டுள்ளது. (2)

## வல்லப்பட்டையுடன் சீனப் பிரஜை கைது

சிலாபம்- மத்துகம வீதியில் கீனாகொட சந்திப் பகுதியில் முச்சக்கர வண்டியில் சென்ற சீன பிரஜை ஒருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

முச்சக்கர வண்டியில் இலங்கையைச் சேர்ந்த முஸ்லிம் ஒருவருடன் இணைந்து இந்த சீனப் பிரஜை வல்லப்பட்டையை எடுத்துச் சென்ற போதே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

சீன நபருடன் சென்ற முஸ்லிம் நபரும் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் இவர்கள் சிலாபம் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்படவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்களிடம் இருந்து 5 கிலோ கிராம் வல்லப்பட்டை கைப்பற்றப்பட்டுள்ளது.

இலங்கையில் சீனா மேற்கொண்டு வரும் அபிவிருத்தித் திட்டங்களில் பணிபுரிய சீனாவில் இருந்து வந்துள்ள பெரும்பாலான சீனர்கள் இலங்கையின் பல்வேறு இடங்களில் தங்கியுள்ளனர்.

இவர்கள் நாட்டில் சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபடுவது அண்மைய காலமாக அதிகரித்துள்ளதாக கூறப்படுகிறது. (2)

## இராசி பலன்

03.05.2014

(சித்திரை 20, சனிக்கிழமை)

சூரிய உதயம் காலை 5.57 மணிக்கு
சதுர்த்தி பிற்பகல் 1.58 மணிவரை
மிருகசீரிடம் பிற்பகல் 1.45 மணிவரை
இராகுகாலம் 8.56-10.26 மணிவரை
சுபநேரம் -2.56-4.26 மணிவரை

வளவன்

**மேடம்** சவால்களை சமாளிக்ககும் நாள், உடன் பிறப்புக்கள் வழியில் உள்ளம் மகிழும் சம்பவங்கள் இடம்பெறலாம், பகையொன்று நட்பாகலாம், புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**இடபம்** உறவினர்களின் சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, வியாபார விருத்தியுண்டு, தொலைபேசி வழித் தகவல் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும்.

**மிதுனம்** உறவினர்களின் அன்புத் தொல்லைகள் ஏற்படலாம், ஒரு வகையில் சிக்கனமாக இருந் தாலும் மற்றொரு வகையில் செலவுகள் ஏற்படலாம், தொழில் நலன் கருதி புது முயற்சி எடுப்பீர்கள்.

**கடகம்** தொலைபேசிச் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், மாற்றங்களால் ஏற்றங்கள் உருவாகலாம், சயனசுகக் குறைவான நாள், தேவையற்ற தொடர்புகள் ஏற்படலாம்,

**சிம்மம்** நல்ல காரியத்துக்கு பிள்ளையார் சுழி போடும் நாள், வெளிநாட்டுத் தொடர்புகள் அனுகூலம் தரும், தொழிலில் வருமானத்தை அதிகரிக்க புதிய திட்டம் தீட்டுவீர்கள்.

**கன்னி** காலைநேரத்திலேயே காதினிக்கும் செய்திகள் வந்து சேரலாம், தொழிலில் முன்னேற்றம் பெற முயற்சிப்பீர்கள், குடும்பத்தினருடன் விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**துலாம்** ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள், சிலர் உங்களிடம் உதவிகள் கேட்டு வரலாம், வெளியூர் பயணங்களால் ஆதாயமுண்டு, புதிய பொருட்கள் சேர்க்கும் எண்ணம் உருவாகும்.

**விருச்சிகம்** எதிர்பாராத வகையில் சில மனஸ்தாபங்கள் ஏற்பட்டு உற்சாகம் குறையும், வேலைகள் உடனுக்குடன் முடியாமல் இழுத் தடிக்கப்படலாம், சஞ்சலங்கள் கூடும் நாள்.

**தனுசு** பயணங்களால் பலனுண்டு, போட்டியாக செயற்பட்டவர்கள் மனம் மாறுவர், நீண்ட நாளைய ஆசையொன்று நிறைவேறலாம், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

**மகரம்** சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள், பிரியமான சிலரின் சந்திப்புக்கள் இடம்பெறலாம், திடீர் பயணங்கள் ஏற்படலாம், பகைவர்கள் மனம் மாறுவர்.

**கும்பம்** சந்தித்தவர்களால் சந்தோசங்கள் கிடைக்கும் பிள்ளைகளின் சுப காரியங்களை நிகழ்த்த வேண்டுமென்ற எண்ணம் உருவாகும், வீட்டை அழகாக வைத்திருப்பதில் அக்கறை காட்டுவீர்கள்.

**மீனம்** அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், சுப தகவல்கள் வந்து சேரலாம், முயற்சிகளில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் உருவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலங்கார உற்சவத்தை முன்னிட்டு போட்டிகள்

அரியாலை ஸ்ரீ ஞானவைரவர் கோவில் வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த மாதம் 30 ஆம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

எதிர்வரும் 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு சங்காபிஷேகம் ஆரம்பித்து நண்பகல் 12 மணிக்கு உச்சிக்கால பூசை நடைபெறும்

அன்றையதினம் மாலை 6.30 மணிக்கு வசந்தமண்டபப்பூசை நடைபெற்று சுவாமி திருவீதியுலா எழுந்தருளுவார்.


மறுநாள் சனிக்கிழமை பகல் 11 மணிக்கு திருக்குளிர்த்தி அபிஷேகம் நடைபெறும் .

எதிர்வரும் 16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு வைரவர் சாந்தி அபிஷேகமும் உற்சவமும் நடைபெறும்.

மேற்படி அலங்கார உற்சவத்தை முன்னிட்டு அரியாலை ஸ்ரீ ஞானவைரவர் கோவில் இளைஞர் சங்கம் நடத்தும் திருமுறை மனனப் போட்டி,சமய அறிவுப்போட்டி மற்றும் பண்ணிசைப்போட்டிகள் என்பன எதிர்வரும் 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு அரியாலை அருணோதயா சனசமூக நிலையத்தில் ஆரம்பமாகும். போட்டிகள் அனைத்தும் கீழ்ப்பிரிவு, மத்திய பிரிவு, மேற்பிரிவு எனும் மூன்று பிரிவுகளாக நடத்தப்படும்.

இப்போட்டிக்கான பரிசில்கள் யாவும் எதிர் வரும் 16ஆம் திகதி வெள்ளிக்கிழமை வைரவர் சாந்தி அன்று இரவு 7 மணிக்கு வழங்கப்படும்.

இப்போட்டிக்கான மேலதிக விபரங்கள் மேற்படி ஆலய மண்டபத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன என அரியாலை ஸ்ரீ ஞான வைரவர் கோவில் இளைஞர் சங்கம் அறிவித்துள்ளது. (2)




# பொன்விழாவும் மலர் வெளியீடும்

நெல்லண்டையான் வெளியீட்டுக் கழகம் நடத்தும் சிவஸ்ரீ.தியாக சோமஸ்கந்தராஜாக் குருக்களின் பொன் விழாவும், சோமஸ்கந்த ராஜ தரிசனம்-1 எனும் மலர் வெளியீடும் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு யா/தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலய மண்டபத்தில் வடமராட்சி வலயக் கல்வி பணிப்பாளர் சிவபாதம் நந்தகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடமாகாண கலவியமைச்சர் த.குருகுலராஜா, சிறப்பு விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

கௌரவ விருந்தினராக புதிய உயர்கல்லூரி அதிபர்திருமதி. அருள் நங்கை சண்முகநாதன் கலந்து கொண்டு சிறப்பிப்பார்.

இந்நிகழ்விற்கான ஆசியுரையை வல்வை முத்துமாரியம்மன் தேவஸ்தான பிரதமகுரு சிவஸ்ரீ.சோமாஸ்கந்த தண்டாபாணிக தேசிகர் மற்றும் சீரமியர் அஞ்சலியகம் அருட்தந்தை ஆ.டேமியன் அடிகளார் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

மேலும் அறிமுக உரையினை துணுக்காய் தமிழ் ஆசிரிய ஆலோசகர் வேல் நந்தகுமார் ஆற்றுவார்.

இதன்போது சோமஸ்கந்தராஜ தரிசனம்-1, அருள்நங்கை-1, அக்கின காரியம் (சமஸ்கிருதம், தமிழ் ஆகிய மூன்று நூல்களும் வெளியிடப்படும்.

நூல் வெளியீட்டு உரையை யாழ். பல்கலைக்கழக சட்டத்துறை தலைவர் கலாநிதி த.கலாமணி ஆற்றுவார்.

இந்நூல்களுக்கானமதிப்புரைகள் முறையே சோமஸ்கந்தராஜ தரிசனம்-1 எனும் நூலுக்கு ஜப்பான் கச்சுவில் பல்கலைக்கழக வருகை விரிவுரையாளர் கலாநிதி மனோன் மணி சண்முகதாஸ், அருள் நங்கை-1 எனும் நூலுக்கு யாழ். பல்கலைக்கழக தமிழ்த் துறை முன்னாள் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா, அக்கினிகாரியம் (தமிழ், சமஸ்கிருதம்) என்ற நூலுக்கு கொம்மாந்துறை மனோன்மணி தேவஸ்தான சிவஸ்ரீ பா.பாலகிருஸ்ணக் குருக்கள் ஆகியோர் ஆற்றப்படவுள்ளனர். (2-19)




## நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

ஜீவநதி வெளியீடாக வெளிவரும் யாழ்.பல்கலைக்கழக சமூகவியல் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் இ.இராஜேஸ் கண்ணனின் இலக்கியத்தில் சமூகம்: பார்வைகளும் பதிவுகளும் எனும் நூல் வெளியீட்டு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.15 மணிக்கு வதிரி பூவற்கரைப் பிள்ளையார் ஆலய இரவீந்திரசர்மா மண்டபத்தில் வதிரி தமிழ் மன்றத்தின் தலைவர் தி.வரதராசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக சமூகவியல்துறைத் தலைவரும் முன்னால் துணைவேந்தருமான பேராசிரியர் என்.சண்முகலிங்கம் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

மேலும் ஆசியுரையினை வதிரி பூவற்கரைப் பிள்ளையார் ஆலய பரிபாலனசபைத்தலைவர் சி.க.லோகநாதனும் நூலுக்கான அறிமுகவுரையினை யாழ்.பல்கலைக்கழக சட்டத்துறை தலைவரும் கல்வியியல் சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி த.கலாமணி ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

நூல் மதிப்பீட்டுரையினை யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் ஈ.குமரன் ஆற்றுவார். (2)

# பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் நேற்று கவனயீர்ப்பு போராட்டம்



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பதில் பிரதம பாதுகாப்பு அதிகாரி கலைப்பீட மாணவர்களால் தாக்கப்பட்டதைக் கண்டித்து பாதுகாப்பு உத்தயோகத்தர்கள் நேற்றுக்காலை பல்கலைக்கழக பிரதான வாயில் முன்பாக கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுட்டனர்.

குறித்த பல்கலைக்கழக வளாகத்தினுள் நுழையும் அனைத்து மாணவர்களது துவிச்சக்கர வண்டிகள் அனைத்துக்கும் நுழைவுச்சீட்டு பாதுகாப்பு உத்தியோகத்தர்களால் வழங்கப்பட்டு வந்தன.

இந்நிலையில் கடந்த புதன் கிழமை 30 ஆம் திகதி கலைப்பீட மாணவர்கள் துவிச்சக்கர வண்டி ஒன்றின் பூட்டினை உடைக்க முற்பட்டவேளை பதில் பாதுகாப்பு உத்தியோகத்தரான வி. தூயகுமார் இதனை தடுத்து பாதுகாப்பு காரியாலயத்தில் உரிய பதிவுகளைச் செய்து வண்டியை எடுத்துச்செல்லுமாறு கூறினார். இதன்போது குறித்த மாணவர்களால் உத்தியோகத்தர் தாக்கப்பட்டார். எனவே குறித்த மாணவர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கைகை எடுக்கக்கோரி இந்த கவனயீர்ப்பு போரட்டத்தில் ஈடுபடுவதாக போரட்டத்தில் ஈடுபட்ட பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தெரிவித்தனர். (2-4-6)



வட மாகாண கல்வி அமைச்சு கேட்போர் கூடத்தில் வட மாகாணத்தில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் தலைமையில் நேற்று நடைபெற்றது. இக் கலந்துரையாடலின் போது மாகாண கல்விப் பணிப்பாளர் ப.செல்வராஜா உட்பட வலயக்கல்வி பணிப்பாளர்கள் , நிர்வாக உத்தியோகத்தர்கள் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-என்.குமார்)

# மண் அகழ்வில் ஈடுபடும் கும்பலை கைது செய்வோம்

## பொலிஸார் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

கொடிகாமத்தில் இயங்கி வருகின்ற சட்டவிரோத மண் அகழ்வு கும்பலை விரைவில் கைது செய்வோம் என யாழ்.சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் டி.டபிள்யூ.பி.விமலசேன தெரிவித்தார்.

யாழ்.பொலிஸ் நிலையத்தில் நேற்றுக்காலை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், அண்மையில் கொடிகாமம் கிளாளிப்பகுதியில் சட்ட விரோத மண் அகழ்வில் ஈடுபட்ட உழவு இயந்திரத்தின் சில்லில் துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டு பிடித்திருந்தோம்.

எனினும் உழவு இயந்திர சாரதி அதனை அங்கு விட்டு தப்பிச் சென்றுள்ளார்.

இது தொடர்பான விசாரணைகள் இடம்பெற்று வருகின்ற நிலையில் உழவு இயந்திரத்தை நீதிமன்றில் பாரப்படுத்தியுள்ளோம்.

இம் மண் அகழ்வில் ஈடுபட்டு வருகின்றனர் என்ற சந்தேகத்தின் பேரில் 10 பேர் தேடப்பட்டு வருகின்றனர்.

நீதிமன்றங்களினால் பிணை விடுவிக்கப்பட்ட நபர்கள் தான் இவ்வாறு மண் அகழ்வில் ஈடுபடுகின்றனர் என ஊடகவியலாளர்களினால் சுட்டிக்காட்டப்பட்டது.

இதற்கு சந்தேக நபர்களை நீதிமன்றில் முற்படுத்துவதே பொலிஸாரின் கடமை என பதிலளித்தார். (2-4)

# சனி, ஞாயிறு தினங்களில் நுண்கலை வகுப்புக்கள்

(கரணவாய்)

யா/உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியில் நுண்கலை வகுப்புகள் சனி ,ஞாயிறு ஆகிய விடுமுறை தினங்களில் இடம்பெற்று வருவதாக கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கமைய சங்கீதம், நடனம், மிருதங்கம், வயலின் போன்ற வகுப்புக்களே நடைபெற்று வருகின்றன.

குறித்த வகுப்புகளுக்கு பாடசாலை கற்பித்தலை நிறைவு செய்தோரும் மற்றும் நுண்கலைப்பீட குழு மாணவர்களும் இணைந்து கொள்ளலாம்.

இக்கற்கை நெறிகளை கற்க விரும்பும் மாணவர்கள் வார நாட்களில் கல்லூரி அதிபருடன் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ள முடியும்.

மேற்படி கற்கை நெறிகள் மறைந்த பேராசிரியர் அ.துரைராசாவினால் ஆரம்பித்து வைக்கப்பட்டு தற்போது 32 வருடங்கள் பூர்த்தி அடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாம் இந்தியாவுடன் இணைந்தே செயற்படுவோம்- சுமந்திரன் எம்.பி.

ஐ.நா தீர்மானத்தின் வாக்கெடுப்பின் போது நடுநிலை வகித்து விட்டது என்பதற்காக இந்தியாவை நாம் புறம் தள்ளிவிட முடியாது இந்தியாவினால் தான் தமிழருக்கு ஒரு தீர்வைப்பெற்றுத் தரமுடியும் என்று நாம் முழுமையாக நம்பு கின்றோம் என தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்று நண்பகல் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கூட்டத்தொடரின் போது இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக அமெரிக்காவினால் மூன்றாவது தடவையாக கொண்டுவரப்பட்ட தீர்மானத்தின் வாக்கெடுப்பின்போது இந்தியா நடுநிலைவகித்திருந்தது. இது குறித்து ஈழத்திலுள்ள ஒரு சில தமிழ்த்தரப்புக்கள் கடுமையான விமர்சனங்களை முன்வைத்திருந்தன.

தமிழ் மக்களுக்கு இந்தியா துரோகம் இழைத்து விட்டது மறுபடியும் ஏமாற்றிவிட்டது என்று குற்றம் சாட்டியிருந்தனர். ஆனால் எம்மைப்பொறுத்தவரை அதாவது தமிழ்த்தேசியக்கூட்டமைப்பை பொறுத்தவரை இந்தியாவை புறம்தள்ளி விட்டு தமிழர்கள் தீர்வைப்பெற்றுக்கொள்ள முடியாது என்று முழுமையாக நம்புகின்றோம். அதற்காக இந்தியா கூறுவதைத்தான் நாம் செய்கின்றோம் என்பதை ஏற்க முடியாது . இந்தியாவுடன் இணைந்து செயற்படுவோம் அதில் எந்தவிதமான மாற்றுக் கருத்துக்கும் இடமில்லை.

ஐ.நா தீர்மானத்தின் வாக்கெடுப்பின் போது இந்தியா, ஜப்பான், தென்னாபிரிக்கா போன்ற நாடுகள் நடுநிலைவகித்திருந்தன. ஏன் நான் இந்த நாடுகளை மட்டும் கூறுகின்றேன் என்றால் இந்தியாவும், தென்னாபிரிக்காவும் இலங்கைத் தமிழர்களுக்கு மிகவும் முக்கியமான நாடுகள்.

இந்த நாடுகள் ஐ.நாவின் நடுநிலை வகிப்பதற்கு முக்கிய காரணங்களும் உள்ளன. இந்தநாடுகள் ஒருநாட்டுக்கு எதிராக தனித்தீர்மானம் கொண்டு வரப்படும் போது அதற்கு ஆதரவளிப்பதை தவிர்க்கும் மரபைக்கொண்டவை எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (2-6)

# நாடாளுமன்றையும் அரசு ஏமாற்றி வருகிறது

## ஜே.வி.பி.குற்றச்சாட்டு

அரசாங்கம், நாடாளுமன்றத்தையும் மக்களையும் ஏமாற்றி பெரும் பொய்களை கூறிவருவதாக ஜே.வி.பியின் பிரசார செயலாளர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் அபிவிருத்தி என்பது கசினோ சூதாட்டம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கத்தில் இருப்பவர்கள் நாட்டின் பொருளாதார வளர்ச்சியை 7.3 வீதமாக அதிகரித்துள்ளதாக கூறுகின்றனர்.

அதேபோல் தனிநபர் வருமானம் மற்றும் வெளிநாட்டு சொத்துக்கள் அதிகரித்துள்ளதாகவும் கூறுகின்றனர்.

இலங்கை மத்திய வங்கியின் அறிக்கையை கொண்டே அரசாங்கம் இப்படி பேசி வருகிறது.

இன்றைய அரசாங்கம் மத்திய வங்கியின் அறிக்கையையும் அரசியல் விடயமாக பயன்படுத்தி தமக்கு ஏற்றவகையில் மாற்றி வருகிறது. இதனை நாங்கள் நாடாளுமன்றத்தில் சுட்டிக்காட்டினோம்.

மத்திய வங்கியின் அறிக்கையை சுட்டிக்காட்டி நாட்டின் பொருளாதார வளர்ச்சியானது 7.3 வீதம் என அரசாங்கம் கூறுகிறது. நாட்டின் தனி நபர் வருமானம் மூவாயிரம் அமெரிக்க டொலர்கள் என்றும் அரசாங்கம் கூறுகிறது.

ஆனால் மத்திய வங்கியின் அறிக்கையில் ஓரிடத்தில் இலங்கை மக்கள் தொகையில் 42 வீதமானவர்கள் நாளாந்தம் இரண்டு டொலர்களை கூட வருமானமாக பெறுவதில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அப்படியானால் நாட்டின் முழுசனத் தொகையில் பாதிப்பேருக்கு வருடாந்தம் 734 டொலர் வருமானமே வருடாந்தம் கிடைத்து வருகின்றது. இதன்மூலம் நாட்டின் பொருளாதாரத்திற்கு என்ன நடந்திருக்கின்றது என்பதை அறிந்து கொள்ள முடியும். இந்நிலையில் இலங்கையின் கசினோ சூதாட்டத்தை பரவச் செய்து நாட்டின் பொரு ளாதாரத்தை அதிகரிக்க அரசாங்கம் முயற் சித்து வருகின்றது எனவும் அவர் கூறியுள்ளார். (2)

# புதிய அர்த்தத்தை அரசாங்கம் மே தினத்தில் கற்பித்துள்ளது

## விஜயதாச எம்.பி.சுட்டிக்காட்டு

(கொழும்பு)

மே தினத்திற்கு அரசாங்கம் புதிய அர்த்தத்தை கற்பித்துள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். அரசாங்கம் இந்த மே தினத்தை அரசியலாக்கவே முயற்சித்துள்ளதாகவும் அதிகாரத்தை தக்க வைத்துக் கொள்வத ற்கான மற்றுமொரு திட்டமாக மே தினக் கூட்டத்தை அடையாளப்படுத்த முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

உலகம் முழுவதிலும் பாட்டாளி மக்களின உழைப்பையும் தியாகத்தையும் கொண்டாடி புகழ்ந்து பாராட்டுவதற்கு இந்த உன்னத நாளை பயன்படுத்திக் கொள்வோம். எனினும், இலங்கை அரசாங்கம் மே தினத்தை அரசியல் பிரசார நடவடிக்கைகளுக்காக பயன்படுத்துகிறது.

தொழிற்சங்கத் தலைவர்களாக தங்களை அடையாளப்படுத்திக் கொள்ளும் பலர், தொழிலாளர்களை சுரண்டி வருகின்றனர். பெரும் எண்ணிக்கையிலான தொழிலாளர்கள் பாரிய நெருக்கடிகளை எதிர்நோக்கி வரும் இந்த தருணத்தில், மே தினத்தை கொண்டாடுவது நகைப்பிற்குரியது என்றார். (2)

# இந்தியாவுக்கு செல்ல முயன்ற நால்வர் மன்னாரில் கைது

(கொழும்பு)

சட்டவிரோதமாக படகு மூலம் இந்தியாவுக்கு செல்ல முற்பட்ட நால்வர் மன்னாரில் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

படகு மூலம் சட்டவிரோதமான முறையில் மன்னாரிலிருந்து இந்தியாவுக்குப் புறப்படத் தயாராகவிருந்த நான்கு பேர் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டிருப்பதாக பொலிஸ் ஊடகப் பிரிவு நேற்று முன்தினம் தெரிவித்தது.

மன்னார் கடற்கரைப் பகுதியில் வைத்து கடந்த வியாழக்கிழமை இரவு கைது செய்யப்பட்ட இந்த நால்வரும் சட்டவிரோதமான முறையில் இந்தியாவுக்குச் செல்வதற்குத் தயாராக இருந்ததாகவும் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

வவுனியா பம்மைமடு பகுதியைச் சேர்ந்த இந்த நால்வரும் மேலதிக விசாரணைகளுக்காக பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். நால்வரும் மன்னர் நீதவான் முன்பாக ஆஜர் செய்யப்படுவார்கள் என பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

மன்னார் - ஓலத்தொடுவாய் கடற்பகுதியில் வைத்து, கடற்படையினரால் கைது செய்யப்பட்ட இவர்கள் மன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (2)

# மேதின நிகழ்வை அமைச்சர் வீரவன்ச புறக்கணித்தார்

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முக்கிய கூட்டணி கட்சியான விமல் வீரவன்சவின் தேசிய சுதந்திர முன்னணி, இம்முறை மே தினக கூட்டத்தையோ ஊர்வலத்தையோ நடத்தவில்லை.

ஆளும் கட்சியுடன் இணைந்து மே தினக் கூட்டங்களை நடத்தி வந்த குறித்த கட்சி 2013 ஆம் ஆண்டு பிரிவினைவாத அதிகாரங்களுடன் வடக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்தாதே என்ற கருப்பொருளில் மே தினக் கூட்டத்தை தனியாக நடத்தியது.

எனினும் இம்முறை அந்த கட்சி எவ்விதமான கூட்டங்களையும் ஊர்வலங்களையும் நடத்த ஏற்பாடுகளை செய்யவில்லை.

இந்நிலையில், அமைச்சர் விமல் வீரவன்ச, ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் மே தினக் கூட்டத்தில் கலந்து கொள்வார் என எதிர்பார்க்கப்பட்டது.

எவ்வாறாயினும் தேசிய சுதந்திர முன்னணி, இந்த வாரம் எடுத்த தீர்மானம் ஒன்றுக்கு அமைய அமைச்சர் வீரவன்ச, மே தினக் கூட்டத்தில் பங்கேற்கவில்லை எனக் கூறப்படுகிறது.

அமைச்சர் விமல் வீரவன்சவின் தேசிய சுதந்திர முன்னணி முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு கொண்டு வந்த மூலோபாய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் ஹோட்டல்களை நிர்மாணிக்கும் வர்த்தமானி அறிவித்தல் தொடர்பாக நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்பட்ட வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை.

அத்துடன் அரசாங்கத்தின் ஆதரவுடன் இயங்குவதாக கூறப்படும் பொதுபலசேனா அமைப்பின் செயற்பாடுகளையும் வீரவன்ச கடுமையாக எதிர்த்து வருகிறார்.


இந்நிலையில், அரசுக்கும் வீரவன்சவுக்கும் இடையில் முரண்பாடுகள் ஏற்பட்டிருக்கலாமோ என்ற சந்தேகங்கள் எழுப்பப்பட்டு வருகின்றன. (2)

இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா: 54.75<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: கலைப்பட்டதாரி / அரச தொழில்<br>தொ.இ: B/3081 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: அத்தம் 3<br>கி.பா: 34.25 செவ் 7 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: A/L, BA – Following<br>தொ.இ: G/3080 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: மகம் 1<br>கி.பா: 26.5<br>உயரம்: 6'2"<br>தகைமை/தொழில்: A/L / தனியார் வேலை (கனடா)<br>தொ.இ: B/3084 | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை 3<br>கி.பா: 30<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: BSc – Final Year<br>தொ.இ: G/3082 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: மூலம் 1<br>கி.பா: 20.25<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: வங்கி (சுவிஸ்)<br>தொ.இ: B/3086 | பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம் 4<br>கி.பா: 49<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: BA / பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>தொ.இ: G/3083 |
| பிறப்பு: 1969 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை 4<br>கி.பா: 37<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: O/L / மேற்பார்வையாளர் (அவுஸ்திரேலியா)<br>தொ.இ: B/3087 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: உத்திரட்டாதி 4<br>கி.பா: 13.5<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: A/L / கணக்காய்வு அலுவலர்<br>எதிர்பார்ப்பு: PR உள்ளவர்<br>தொ.இ: G/3085 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அவை–47 ஆவது நிகழ்வு அல்வாய் கலையகத்தில் அண்மையில் நடைபெற்றபோது திசைகாட்டி பிறைவேட் லிமிட்ரெட் குழுமத்தின் சிரேஷ்ட உறுப்பினர் சி.சுபசீலன் **யாழ்ப்பாணத்தில் வணிக முன்னெடுப்பும் நவீன விளம்பர இலக்கியமும்** எனும் தலைப்பில் கருத்துரையாற்றுவதையும் அருகில் திசைகாட்டியின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஏ.இந்துஜர் அமர்ந்திருப்பதையும் **கடவுளின் கைபேசி எண்** எனும் சிறுகதை நூல் வெளியீடு இடம்பெறுவதையும் மூத்த எழுத்தாளர் தெணியான் தலைமை உரை நிகழ்த்துவதையும் படங்களில் காணலாம்.

# வாகன விபத்து; இளைஞன் உயிரிழப்பு!

## ஐவர் படுகாயம்

வாகன விபத்தில் இளைஞன் உயிரிழந்துள்ளார். ஐவர் படுகாயம்' அடைந்தனர்.

முந்தல் புகையிரத நிலையச் சந்தியில் நேற்று முன்தினம் அதிகாலை இடம்பெற்றுள்ள வாகன விபத்தில் மாரவில முதுகட்டுவ பிரதேசத்தைச் சேர்ந்த 23 வயதுடைய நபர் மரணமடைந்துள்ளதுடன், ஐவர் படுகாயமடைந்துள்ளதாக முந்தல் பொலிஸார் தெரிவித்தனர்.

மாரவிலவிலிருந்து புத்தளத்திற்கு பயணித்துக்கொண்டிருந்த பஜிரோ ரக வண்டியும் புத்தளத்திலிருந்து பயணித்துக்கொண்டிருந்த கப் ரக வாகனமும் நேருக்குநேர் மோதி விபத்திற்குள்ளானதாக பொலிஸார் கூறினர்.

இவ்விபத்தில் காயமடைந்தவர்கள் உடனடியாக முந்தல் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். பின்னர் இவர்களில் மூவர் மேலதிக சிகிச்சைக்காக சிலாபம் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

பஜிரோ ரக வண்டியில் பயணித்த இளைஞரே விபத்தில் மரணமடைந்துள்ளார்.

இரு வாகனங்களின் சாரதிகளையும் கைதுசெய்த முந்தல் பொலிஸார், விபத்திற்குள்ளான இருவாகனங்களையும் பொலிஸ்நிலையத்திற்கு எடுத்துச் சென்றுள்ளனர்.

இவ்விபத்து தொடர்பில் பொலிஸார் விரிவான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (2)

# மேதினத்தில் கலந்து கொண்டவர்களுக்கு சிறைக் கைதிகளின் உணவு பகிர்ந்தளிப்பு

## மறுக்கிறார் சிறைச்சாலை ஆணையாளர்

(கொழும்பு)

கொழும்பில் இடம்பெற்ற மேதின ஊர்வலத்தில் கலந்து கொள்ள வந்தவர்களுக்கு, 650 பகல் உணவுப் பொதிகள் இலவசமாக பெறப்பட்டதாக வெளியான தகவலை சிறைச்சாலைகள் ஆணையாளர் சந்திரரத்ன பல்லேகம நிராகரித்துள்ளார்.

மாத்தறை பகுதியில் இருந்து வந்தவர்களுக்கு, சிறைக்கைதிகளுக்காக வழங்கப்பட்ட உணவை பகிர்ந்தளித்ததாக வெளியான தகவல் தொடர்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

எது எவ்வாறு இருப்பினும் கொழும்புக்கு வந்த மக்களுக்கு உணவு பெற்றுக் கொடுக்க வெலிகடை சிறைச்சாலையின் சிற்றுண்டிச்சாலை திறந்து வைக்கப்பட்டிருந்ததாக அவர் கூறினார்.

அதில் 3 ஆயிரம் உணவுப் பொதிகள் விற்கப்பட்டதாகவும் சந்திரரத்ன பல்லேகம சுட்டிக்காட்டியுள்ளார். (2)

# எனது தந்தை வெளிநாட்டு அழுத்தங்களுக்கு அடிபணியவில்லை

## சஜித் எம்.பி. எடுத்துரைப்பு

போர் முடிவுக்கு வந்த பின்னர் நாடு பல பிரச்சினைகளை எதிர்கொள்கின்ற போதிலும், அவற்றைத் தீர்த்து வைப்பதற்கு வெளிநாட்டு உதவிகள் எதுவும் இலங்கைக்குத் தேவையில்லை என ஐ.தே.கவின் முன்னாள் பிரதித் தலைவரும் அம்பாந்தோட்டை மாவட்ட ஐ.தே.க. எம்.பியுமான சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

படுகொலை செய்யப்பட்ட முன்னாள் ஜனாதிபதி ஆர்.பிரேமதாசவின் 21 ஆவது நினைவு தினக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

கொழும்பு வாழைத் தோட்டப் பகுதியில் அமைந்துள்ள பிரேமதாசவின் உருவச் சிலைக்கு மாலை அணிவித்து அஞ்சலி செலு த்திய பின்னர் இடம்பெற்ற பொதுக் கூட்டத்தில் அவர் உரையாற்றினார்.

ஜனாதிபதி பிரேமதாச வெளிநாட்டு அழுத்தங்களுக்கு ஒரு போதும் அடிபணியவும் இல்லை, உள்நாட்டுப் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கு சர்வதேசத்தின் உதவியை நாடியதும் இல்லை எனவும் தெரிவித்த சஜித் பிரேமதாச, அரசியல் நலன்களைப் பெற்றுக் கொள்வதற்காக இந்தப்பிரச்சினையை சர்வதேச அரங்கிற்கு அவர் கொண்டு செல்லவும் இல்லை எனவும் குறிப்பிட்டார்.

முடிந்தளவு தனக்கு எதிராக சேறுபூசும் பிரசாரங்களை முன்னெடுக்குமாறு சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

எனது தந்தை நாட்டை உண்மையாக நேசித்து நாட்டை உண்மையாகவே அபிவிருத்தி செய்தார்.

நான் மக்களுக்கு சேவையாற்றும் போது பல்வேறு தரப்பினர் எனக்கு எதிராக சேறுபூசும் பிரசாரங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

முடிந்தளவு எனக்கு எதிராக சேறுபூசும் பிரசாரங்களை முன்னெடுக்குமாறு கேட்டுக் கொள்வதாகவும் சஜித் பிரேமதாச குறிப்பிட்டுள்ளார்.


கடந்த 1993 ஆம் ஆண்டு மே முதலாம் திகதி மே தின ஊர்வலத்தில் கலந்து கொண்டிருந்த போது கொழும்பு ஆமர் வீதியில் தற்கொலை குண்டுதாரியின் தாக்குதலுக்கு இலக்காகி முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (2)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 40 |
| உருளைக்கிழங்கு | 80 | 90 |
| பச்சைமிளகாய் | 80 | 100 |
| தக்காளி | 60 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 |
| கோவா | 30 | 40 |
| கரட் | 80 | 100 |
| பூசணி | 30 | 40 |
| புடோல் | 60 | 50 |
| வாழைக்காய் | 25 | 40 |
| சின்ன வெங்காயம் | 100 | 100 |
| பெரிய வெங்காயம் | 90 | 100 |
| பாகற்காய் | 100 | 100 |
| வெண்டிக்காய் | 50 | 50 |
| கருணைக் கிழங்கு | 20 | 60 |
| பயற்றங்காய் | 40 | 40 |
| லீக்ஸ் | 60 | 80 |
| பீற்றூட் | 40 | 60 |
| கறிமிளகாய் | 60 | 80 |
| முருங்கைக்காய் | 40-60 | 120 |
| போஞ்சி | 150 | 160 |
| கத்தரிதம்புள்ள | — | — |
| கீரை - 1 பிடி | 10 | 20 |
| தேசிக்காய் | 70-110 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 15-50 | 30--40 |
| இராசவள்ளி | 100 | 70 |

## facebook (f) பேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like

சுந்தரம் சுதன்




Like.Comment...

சாளினி கனகரட்னம்

வாழ்க்கை பிடிக்கவில்லை என்றால்
தற்கொலை செய்து கொள்..... ஆனால்,
தற்கொலை செய்துகொள்ளும் அளவிற்கு
துணிச்சல் இருந்தால்.....
வாழ்ந்து பார்....!
(அலெக்சாண்டர்)

Like.Comment...

கந்தையா ராஜீவன்



Like.Comment...

பாலசந்திரன் துசியந்தினி




Like.Comment...

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri எனும் தளத்தில் பதிவுசெய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## படகு மூலம் அவுஸ்.பெண் தமிழகம் சென்றடைவு

(கொழும்பு)

இலங்கையில் இருந்து 46 வயதுடைய அவுஸ்திரேலிய பெண் ஒருவர் படகு மூலம் தமிழகம், அரிச்சல்முனை பகுதியைச் சென்றடைந்துள்ளார்.

உலகின் அனைத்து நாடுகளுக்கும் விஜயம் செய்யும் தமது பயணத்தின் ஒரு கட்டமாக இந்த விஜயம் அமைந்துள்ளது.

சென்ரோ ரொப்சன் ஹெயா என்ற குறித்த பெண் இதுவரையில் 12 நாடுகளுக்கு விஜயம் செய்துள்ளார்.


இதில் ஜேர்மனி,எகிப்து போன்ற நாடுகளும் உள்ளடங்கும்.

கின்னஸ் உலக சாதனை புத்தகத்தில் சாதனையை பதிவு செய்யும் வகையிலேயே தாம் இந்த முயற்சியை மேற்கொண்டிருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

அவர இன்று மண்டபம் பகுதியில் இருந்து மும்பைக்கு படகு மூலம் சவாரி செய்யவுள்ளார். (2)

# தேர்தலை நடத்தினால் ஆட்சியாளர்கள் தப்பியோட வேண்டிய நிலை ஏற்படும்

## மே தினக்கூட்டத்தில் பொன்சேகா தெரிவிப்பு



(கொழும்பு)

**நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலொன்று நடைபெறுமானால் தற்போதைய ஆட்சியாளர்கள் நாட்டை விட்டு தப்பியோட வேண்டிய நிலைவரும் பீரங்கிகளைத் தொட்டு சுட்டுப்பழகியவர்கள் நாம். விளையாட்டு துப்பாக்கிகளுக்கு அஞ்சப்போவதில்லை என ஜனநாயகக் கட்சியின் தலைவரும் முன்னாள் இராணுவத் தளபதியுமான சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.**

பத்தரமுல்லை புத்ததாஸ மைதானத்தில் ஜனநாயகக் கட்சியின் இரண்டாவது மேதினக் கூட்டம் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய முன்னாள் இராணுவத்தளபதியும் ஜனநாயகக் கட்சித் தலைவருமான சரத் பொன்சேகாவே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

ஜனாதிபதித் தேர்தலை மிக விரைவில் நடத்துவதற்கு நாட்டின் ஆட்சியாளர் தீர்மானித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. அத்துடன் இத்தேர்தலில் பொது வேட்பாளராக சரத் பொன்சேகாவை போட்டியிட விடமாட்டேன் என அவர தெரிவித்துள்ளார்.

இம் முறை ஆட்சியாளர் என்னைக் கொல்ல தயாராகிறார். நாட்டினை அதள பாதாளத்தில் தள்ளிய ஆட்சியாளரின் அச்சுறுத்தலுக்கு நாம் ஒரு போதும் அஞ்சப் போவதில்லை.

ஜனநாயகத்தைப் பாதுகாக்கும் வகையில் சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தலை நடத்துங்கள்.

அரசியல் களத்தில் நேருக்கு நேர் போட்டியிடுவோம். அவ்வாறானதொரு தேர்தலை நடத்தினால் தற்போதைய ஆட்சியாளர் நாட்டை விடடு தப்பியோட வேண்டிய நிலை ஏற்படும்.

அத்துடன் நாட்டில் ஏற்பட்டுள்ள பல்வேறு பிரச்சினைகளுக்கு நாட்டின் ஆட்சியாளரும் அவரது எடுபிடி அமைச்சரவையும் பொறுப்புக்கூற வேண்டும்.

நாட்டிற்கு வருகின்ற வெளிநாடடவர்கள் கொல்லப்படுகின்றனர். மக்களுக்காக செயற்படும் அரச அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கைகள் எடுக்கப்படுகிறது.

அண்மையில் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட நடவடிகைகைகளைப் போல பொலிஸ் திணைக்களத்தில் நூற்றுக்கு 90 சதவீத மானவர்கள் நியாயமாக செயற்பட்டுவருகின்ற போதும் ஊழல் மோசடிகளுடன் சம்பந்தப்பட்ட 10 சதவத்தினரை திணைக்களத்திற்குள் நுழைத்து இவ்வரசாங்கம் அத்திணைக்களத்தை மிகவும் மோசமான நிலைக்குத் தள்ளியுள்ளது.

இன்று மக்களுக்காக செயற்பட வேண்டிய நீதிமன்றங்கள் ஆட்சியாளரின் பழிவாங்கல் நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்கின்றன. அண்மையில் அம்பாந்தோட்டைக்குச் சென்றிருந்த ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களை விளையாட்டு துப்பாக்கிகளைக் காட்டி அச்சுறுத்திய சம்பவமொன்று இடம்பெற்றது. இச்சம்பவத்தையடுத்து மொரட்டுவ பகுதியிலுள்ள ஆளும் தரப்பு உறுப்பினர்கள் சரத் பொன்சேகாவோ அல்லது மக்கள் விடுதலை முன்னணியினரோ வந்தால் நடப்பதை பார்த்துக் கொள்ளலாம் என அச்சுறுத்தி வருகின்றனர.

நாம் பீரங்கிகளைத் தொட்டு சுட்டுப்பழகியவர்கள். விளையாட்டு துப்பாக்கிகளுக்கு நாம் ஒருபோதும் அஞ்சப்போவதில்லை.

இந்து சமுத்திரத்தில் முத்தாக விளங்கிய இலங்கையை இன்று போதைப்பொருட்களின் மையமாக இந்த அரசு மாற்றியுள்ளது. 2015 ஆம் ஆண்டுக்குள் இந்த நாட்டை மீண்டும் இந்து சமுத்திரத்தின் முத்தாக மாற்றுவோம் எனவும் தெரிவித்தார். (2)

# பரிந்துரைகள் அமுலாவதை கோத்தபாய தடுக்கிறார்

## அமைச்சர் வாசு குற்றச்சாட்டு

(கொழும்பு)

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் இறுதி அறிக்கைப் பரிந்துரைகளை அமுல்படுத்தும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் முயற்சியை, பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தடுத்து வருவதாக தேசிய மொழிகள மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் இறுதி அறிக்கைப் பரிந்துரைகளை அமுல்படுத்தல், அரசியல் தீர்வுத் திட்ட மொன்றை முன்வைத்தல் உள் ளிட்ட சில யோசனைத் திட்டங்கள் அமைச்சர்களினால் முன்வைக்கப்பட்டது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

தாம் உள்ளிட்ட சில அமைச்சர்களினால் அரசாங்கத்திடம் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டதாகவும் அரசாங்கம் அதனை நிராகரித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்புச் செயலாளரின் கருத்துக்களுக்கு ஜனாதிபதி கூடுதல் முக்கியத்துவம் அளித்து வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளதாக ஆங்கில ஊடகமொன்று தகவல் வெளியிட்டுள்ளது. (2)

# நீதியான தேர்தல் நடத்தப்பட வேண்டும்

## கரு ஜெயசூரிய கோரிக்கை

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் சவாலை ஐக்கிய தேசியக் கட்சி ஏற்றுக்கொண்டுள்ளது

ஐக்கிய தேசியக் கட்சியின் மே தினக் கூட்டம் கிழக்கு மாகாணம் அம்பாறையில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டாா.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

முன்கூட்டியே தேர்தல் நடாத்த வேண்டுமாயின் அரசாங்கத்திடம் எதிர்க்கட்சிகள் கோரிக்கை விடுக்க முடியும் என அண்மையில் ஜனாதிபதி சவால் விடுத்திருந்தார் என தலைமைத்துவ பேரவையின் தலைவர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

இந்த சவாலை ஐக்கிய தேசியக் கட்சி ஏற்றுக்கொண்டுள்ளது.

இந்தக் கூட்டத்தில் உரையாற்றிய தலைமைத்துவ பேரவையின் தலைவர் கரு ஜயசூரிய முன்கூட்டியே தேர்தல்களை நடத்துமாறு ஜனாதிபதி மஹிந்தவிடம் கோரியுள்ளார.

எவ்வாறெனினும் தேர்தல்கள் சுயாதீனமானதும், நீதியானதுமான முறையில் நடத்தப்பட வேண்டுமென ஜனாதிபதியிடம் கோருவதாகத் தெரிவித்துள்ளார். (2)

# மக்கள் அணி திரள்வதால் அரசாங்கம் அச்சம் கொள்கிறது

## கருணாரட்ன தெரிவிப்பு

மக்கள் திரள்வதனால் அரசாங்கம் பீதியடைந்துள்ளதாக புதிய இடதுசாரி கட்சியின் தலைவர் கலாநிதி விக்ரமபாகு கருணாரட்ன தெரிவித்துள்ளார்.மே தினக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித் துள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

இந்த அரசாங்கத்தின் வீழ்ச்சி ஆரம்பமாகியுள்ளது.

கடந்த மாகாணசபைத் தேர்தலில அரசாங்கம் பின்னடைவை எதிர்நோக்கியது.

மக்கள் அணி திரண்டு அரசாங்கத்திற்கு எதிராக செயற்படுவதனால், அரசாங்கம் அச்சமடை ந்துள்ளது.

உழைக்கும் மக்கள் பொதுவான எதிர்க்கட்சி ஒன்றுடன் இணைந்து போராட்டத்தை முன்னெடுக்க வேண்டும்.

பொதுவான ஜனாதிபதி வேட்பாளர் ஒருவரை நிறுத்தி அரசாங்கத்தை தோற்கடிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென விக்ரமபாகு தெரிவித்துள்ளார். (2)

# பிரிவுத்துயர் பகிர்வு

### பஸ்தியாம்பிள்ளை றஞ்சன்



மன்னார் பறப்பாங் கண்டலைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸ், லண்டன் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட பஸ்தியாம்பிள்ளை றஞ்சன் கடந்த 24 ஆம் திகதி வியாழக்கிழமை அகால மரணமானார்.

அன்னாரின் திருப்பலி எதிர்வரும் 10 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு St Gregorys Catholic Church 306 Garratt Ln London SW18 4EH,UK என்னும் முகவரியில் ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.

### திருமதி கந்தவனம் பொன்னுக்கண்டு



வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தவனம் பொன்னுக்கண்டு கடந்த 30 ஆம் திகதி புதன்கிழமை காலமானார்.

அன்னாரின் பூதவுடல் இன்று சனிக்கிழமை வல்வெட்டித்துறை ஊறணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.


### திருமதி சிவம் மனோன்மணிதேவி



இணுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவம் மனோன்மணிதேவி நேற்று முன்தினம் வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

### கனகசபை நாகேந்திரன்



கடைத்தெரு முல்லைத்தீவைப் பிறப்பிடமாகவும் முதலாம் கட்டை ஒழுங்கை புலோலி வடகிழக்கு பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபை நாகேந்திரன் (ஓய்வு பெற்ற சிறைச்சாலைப் பொறுப்பதிகாரி) கடந்த 30 ஆம் திகதி புதன்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று காலை 8.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஆனைவிழுந்தான் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

### முரளிதரன் வேர்னிகா



பிரான்சைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முரளிதரன் வேர்னிகா கடந்த 29 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு Cimetiere Ancien De Nanterre,111 Rue De Courberoie, 92 000 Nanterre என்னும் முகவரியில் நடைபெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

794




## எந்நாளும் உற்சாகம்

எத்தனையோ சிந்தித்துப் பார்த்தும் ஒரு விடயம் காமேஷ்"க்கு விளங்கவில்லை. எல்லாவற்றிலும் அவன் ரமேஷ்"க்கு சமமாக இருந்தும், ரமேஷ் மட்டும் எவ்வாறு எந்நாளும் மகிழ்ச்சியுடனும், உற்சாகத்துடனும் இருக்கிறான் என்பதுதான் அவனை வாட்டி வதைத்தது. எப்படியாவது அவனை துக்கத்தில் ஆழ்த்த வேண்டும் என்று துடியாய்த் துடித்தான்.

ஒருநாள், இமயமலையில் தவம் செய்து கொண்டிருக்கும் ஒரு யோகி அந்த கிராமத்திற்கு வந்தார். மக்களுடைய எந்த ஒரு பிரச்சினையையும் தீர்த்து வைப்பதில் வல்லவராக இருந்த அந்த யோகி, சிலருக்கு, அவர்கள் விரும்பியதை வரமாகவும் அளிக்கும் ஆற்றலும் பெற்றிருந்தார். முதல் வேலையாக, அந்த யோகியை தன் வீட்டிற்கு அழைத்த காமேஷ் அவர் மனம் மகிழுமாறு விருந்தளித்தான். பிறகு, அவரிடம் தான் விரும்பியதை அளிக்குமாறு வரம் வேண்டினான். புன்னகை புரிந்த யோகி, "உன்னுடைய வரத்தால் மற்றவர்களுக்கு இடைஞ்சல் ஏற்படாத வண்ணம் வரம் கேள்!" என்றார்.

உடனே காமேஷ், "எல்லா விடயங்களிலும் என் பக்கத்து வீட்டு ரமேஷை விட நான் சிறந்து விளங்க வேண்டும்! அவனுக்கு அதிகமாகப் பிரச்சினைகள் ஏற்பட்டு மகிழ்ச்சி என்பதே அவன் வாழ்வில் இருந்து மறையட்டும்! இதுவே நான் விரும்பும் வரம்!" என்றான்.



புருவங்களை நெரித்த யோகி, "நீ கேட்கும் வரம் மற்றவர்களுக்குத் துன்பம் தருவதாக இருக்கக்கூடாது என்று நான் ஆரம்பத்திலேயே சொன்னேனே! இத்தகைய வரத்தை நான் தர முடியாது!" என்றார்.

அதற்கு காமேஷ், "போகட்டும்! விடுங்கள்! நான் அவனைவிட செல்வம், அதிர்ஷ்டம், புகழ் யாவற்றிலும் சிறந்து விளங்க வேண்டும்! அவனை விட மகிழ்ச்சியாக இருக்க வேண்டும்! இதுவாவது தர முடியுமா?" என்று கேட்டான்.

"மீண்டும் மிகவும் சுயநலமான வரமாகக் கேட்கிறாய்! பரவாயில்லை! இந்த வரத்தை நான் உனக்கு அளிக்கிறேன்" என்றார். ஏதோ இந்த மட்டும் வரம் தந்தாரே என்று காமேஷ் திருப்தி அடைந்தான்.


மறுநாள் காலையில் ரமேஷ் தன் தோட்டத்தைத் தோண்டிக் கொண்டு இருக்கையில் ஒரு வெள்ளிச் செம்பு கிடைத்தது. அதற்குள் ஆயிரம் பொற்காசுகள் இருந்தன. இந்த விடயமறிந்து கிராமத்தினர் ரமேஷை வாழ்த்தினர். வழக்கமாக ரமேஷைக் கண்டு பொறாமை அடையும் காமேஷ் இந்த முறை ரமேஷின் அதிர்ஷ்டத்தை எண்ணிப் பொறாமை கொள்ளவில்லை.

யோகி கொடுத்த வரத்தின்படி, தனக்கு இதைவிட அதிகமாக அதிர்ஷ்டம் அடிக்கும் என்று அவன் உறுதியாக இருந்தான்.

அதேபோல் அன்று மாலை, காமேஷ் தன் தோட்டத்தைத் தோண்ட, அவனுக்கு ஒரு வெள்ளிக் குடமே கிடைத்தது. அதனுள் பதினாராயிரம் பொற்காசுகள் இருந்தன. கிராமத்து மக்கள் திரளாகக்கூடி காமேஷின் அதிர்ஷ்டத்தைப் புகழ்ந்து வாழ்த்திவிட்டு, "நீ எங்களுக்கு ஒரு விருந்தளிக்க வேண்டும்!" என்றனர்.

மகிழ்ச்சிக் கடலில் மூழ்கியிருந்த காமேஷ் உடனே அதற்கு ஒப்புக் கொண்டான். அந்த விருந்தில் ரமேஷ்"ம் கலந்து கொண்டான். தன்னைவிட பெரிய அதிர்ஷ்டம் காமேஷ்"க்குக் கிட்டியதைக் குறித்து ரமேஷ் பொறாமைப்படாமல் மிகுந்த உற்சாகத்துடன் விருந்தில் கலந்து கொண்டான்.

இதைப்பார்த்த காமேஷ் அவன் மீது பொறாமை கொள்ள, அவன் மகிழ்ச்சி சென்ற இடம் தெரியவில்லை. சில நாட்கள் கழித்து, ரமேஷின் உறவினர் ஒருவர் இறந்துபோக, அவருடைய நான்கு ஏக்கர் நிலம் ரமேஷ்"க்குக் கிடைத்தது. அது நடந்து சில நாட்களில், காமேஷின் உறவினர் ஒருவர் தனது பத்து ஏக்கர் நிலத்தை அவன் பெயரில் எழுதிவிட்டு இறந்து போனார். இந்த முறை ரமேஷ் கிராமத்து மக்களைக் கூப்பிட்டு விருந்து வைத்தான். அதற்கு காமேஷையும் அழைத்தான். தனக்கு இந்த முறையும் குறைவான அதிர்ஷ்டமே கிட்டியும், ரமேஷ் எப்போதும் போலவே மகிழ்ச்சியாக இருந்ததைக் கண்டு காமேஷ் அவனிடம் "உனக்கு கிடைத்தது நான்கு ஏக்கர் நிலம்! எனக்கோ பத்து ஏக்கர். அப்படியும் உன்னால் எப்படி மகிழ்ச்சியாக இருக்க முடிகிறது?" என்று கேட்டான். அதற்கு ரமேஷ் சிரித்துக் கொண்டே, "அதிர்ஷ்டம் எப்போதாவது ஒருமுறையே வருகிறது. எனக்கு அதிர்ஷ்டம் அடிக்கும்போது மட்டும் தான் மகிழ்ச்சியடைய வேண்டும் என்றால், நான் எப்போதோ ஒருமுறை மட்டும் தான் மகிழ்ச்சியாக இருப்பேன். அந்த தற்காலிக மகிழ்ச்சி எனக்குத் தேவையில்லை. அதற்குப் பதிலாக, மற்றவர்களுக்குக் கிட்டும் அதிர்ஷ்டத்தையும் எனக்கே கிடைத்ததாக எண்ணி மகிழ்ச்சி அடைந்தால் நான் என்றென்றும் உற்சாகத்துடன் இருப்பேன்" என்றான். காமேஷ் அதைக் கேட்டுத் துணுக்குற்றான். "யோகியிடம் வரம் வாங்கியும், எந்த நோக்கத்திற்காக வரம் பெற்றானோ அது நிறைவேறாது என்று அறிந்து காமேஷ் மனம் உடைந்து போனான்.






- 1494 - ஜமெய்க்கா எனப் பின்னர் பெயரிடப்பட்ட நாட்டை முதன் முதலில் கிறிஸ்தோபர் கொலம்பஸ் கண்டார்.
- 1802 - வோஷிங்டன், டிசி நகரமாக்கப்பட்டது.
- 1814 - பிரெஞ்சு மன்னன் நெப்போலியன் பொனபார்ட் எல்பா தீவுக்கு நாடு கடத்தப்பட்டு போர்ட்டோஃபெராய்யோ நகரை அடைந்தான்.
- 1815 - டொலெண்டீனோ என்ற இடத்தில் இடம்பெற்ற போரில் நேப்பில்ஸ் மன்னன் முராட் ஆஸ்திரியர்களால் தோற்கடிக்கப்பட்டான்.
- 1879 - யாழ்ப்பாணம், கரவெட்டியில் வெல்லனிற் பிள்ளையார் கோயில் திருவிழா ஒன்றின் போது இடம்பெற்ற தீ விபத்தில் 50 பேர் வரையில் தீயில் கருகி மாண்டனர். நூற்றுக்கணக்கானோர் உடல் ஊனமுற்றனர். கோயில் முழுவதும் எரிந்து சாம்பலானது.
- 1901 - புளோரிடாவின் ஜாக்கன்ஸ்வில் என்ற இடத்தில் இடம்பெற்ற பெரும் தீயினால் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட கட்டடங்கள் அழிந்தன. 10,000 பேர் வரையில் வீடுகளை இழந்தனர்.
- 1913 - இந்தியாவின் முதல் முழுநீளத் திரைப்படம் ராஜா ஹரிஸ்சந்திரா வெளியானது.
- 1916 - உயிர்த்த ஞாயிரன்று இடம்பெற்ற கிளர்ச்சியின் போது கைது செய்யப்பட்ட ஐரிஷ் தலைவர்கள் டப்ளின் நகரில் தூக்கிலிடப்பட்டார்கள்.
- 1939 - சுபாஸ் சந்திர போஸ் அனைத்திந்திய பார்வார்டு ப்ளாக் கட்சியை ஆரம்பித்தார்.
- 1941 - பிபிசி தமிழோசை வானொலி ஆரம்பிக்கப்பட்டது.
- 1942 - இரண்டாம் உலகப் போர்: ஜப்பானிய கடற்படையினர் சொலமன் தீவுகளின் துளகி தீவைக் கைப்பற்றினர்.
- 1959 - முதலாவது கிராமி விருதுகள் அறிவிக்கப்பட்டன.
- 1973 - சிக்காகோவின் சியேர்ஸ் கோபுரம் உலகின் அதியுயர் கோபுரமானது.
- 1979 - மார்கரெட் தாட்சர் ஐக்கிய இராச்சியத்தின் முதலாவது பெண் பிரதமர் ஆனார்.

### பிறப்புக்கள்

- 1933 - ஜேம்ஸ் ப்ரெளன், சோல் இசையின் தந்தை என அழைக்கப்பட்ட அமெரிக்க இசை வல்லுநர் (இ. 2006)
- 1935 - சுஜாதா, தமிழ் எழுத்தாளர் (இ. 2008)

### இறப்புகள்

- 1680 - சிவாஜி (பேரரசர்) இந்தியப் பேரரசர் (பி. 1627)
- 1969 - சாகிர் ஹுசைன், மூன்றாவது இந்தியக் குடியரசுத் தலைவர் (பி. 1897)

### சிறப்பு நாள்

- உலக பத்திரிகை சுதந்திர தினம்

### உலக பத்திரிகை சுதந்திர தினம்




உலக பத்திரிகை சுதந்திர தினம் என்பது பத்திரிகை சுதந்திரத்தைப் பரப்பும் நோக்கிலும் "மனித உரிமைகள் சாசனம்" பகுதி 19 இல் இடம் பெற்றுள்ள பேச்சுரிமைக்கான சுதந்திரத்தை உலக நாடுகளின் அரசுகளுக்கு நினைவூட்டவும் ஐக்கிய நாடுகள் அவையினால் சிறப்பு நாளாகப் பிரகடனப்படுத்தப்பட்டது.

1993 ஆம் ஆண்டில் இடம்பெற்ற ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக் கூட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தீர்மானத்தின்படி ஒவ்வோர் ஆண்டும் மே 3 ஆம் நாளன்று பத்திரிகை சுதந்திர நாளாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இலங்கை உட்பட ஊடகவியலாளர்கள் கொல்லப்படும் நாடுகள், ஐ.நா. மனித உரிமை சாசனம் 19ஆவது சரத்தில் கூறப்பட்டிருக்கும் கருத்து வெளிப்பாட்டு சுதந்திரத்தை முற்றாக மறுப்பதுடன் கருத்து சுதந்திரத்திற்காக குரல் கொடுக்கும் ஊடகவியலாளர்களை படுகொலை செய்து வருகின்றன.

இலங்கையில் 1992ஆம் ஆண்டிற்கு பின் 24 ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டிருப்பதாக சர்வதேச பத்திரிகையாளர் சம்மேளனத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சதுரகிரி சித்தர்கள்

...கதையைப் பாதியிலேயே நிறுத்தி விட்ட வருத்தமிருந்தாலும் நடந்து வந்த களைப்பும் வயிற்றுப் பசியும் எங்களைச் சோர்வுக்குள்ளாக்கியதால் அந்த அன்னதானக் கூடத்திற்குள் நுழைந்தோம்.


வாருங்கள், வாருங்கள் என்று எல்லா உரிமையுடன் உள்ளே அழைத்துச் சென்றார் உமா. அங்கிருந்தவர்களும் அவருக்கு மிகவும் பரிட்சியமானவர்களாக இருக்கவே, இனிய முகத்துடன் எங்களை அழைத்து உபசரித்தனர்.

ஒரு கட்டத்தில் இது அன்னதான மடமா? அல்லது ஏதேனும் உறவினர் வீடா? என்று நினைக்குமளவு உபசாரம் இருந்தது.

வழிபாடு எல்லாம் நிறைவடைந்து, எல்லோரும் கீழே திரும்பிவிட்ட நிலையில் எங்களைப் போல ஒன்றிரண்டு பேராவது சந்தன மகாலிங்கரைத் தரிசிக்க வருவார்கள். அப்படித் தரிசிக்க வரும் பக்தர்கள் பசியோடு திரும்பக் கூடாது என்பதற்காக உணவு தயாரித்துக் காத்திருந்தனர் அந்த அன்னதானக் கூடத்தினர்.

சூடான சாதம், சாம்பார், ரசம், தொட்டுக்கொள்ள ஊறுகாய், அப்பளம், செய்த பொறியல் தீர்ந்து விட்டதாம். இருந்த பசிக்கு அந்தச் சாப்பாடு தேவாமிர்தமாக இருந்தது. எவ்வளவு வேண்டுமானாலும் சாப்பிடலாம். ஆனால் சாப்பாட்டை வீணாக்கக் கூடாது என்பது அவர்கள் வைக்கும் வேண்டுகோள்.

மலையடிவாரத்திலிருந்து எவ்வளவு கஷ்டப்பட்டு தலைச் சுமையாக அரிசி, பருப்பு, எண்ணெய் போன்றவைகளைச் சுமந்து வந்திருப்பார்கள் என்பதை நினைத்துப் பார்த்தால் அவர்கள் வேண்டுகோள் எவ்வளவு நியாயமானது என்பது புரியும். தவிர வீணாக்கும் உணவு இன்னொருவர் பசியை ஆற்றும் என்பதையும் நினைத்துப் பார்க்க வேண்டும்.



சட்டைநாதர் குகை

மாதமொருமுறை மலையடிவாரத் திற்குச் செல்லும் இம்மடத்தின் அன்பர்கள் அன்னதானத்திற்குத் தேவையான அரிசி, பருப்பு, உப்பு, ஊறுகாய், எண்ணெய், மிளகாய்த்தூள் போன்ற மளிகை சாமான்களை வாங்கி சுமை தூக்கிகள் மூலம் மடத்திற்குக் கொண்டு வருகிறார்களாம். இங்குள்ள சேவகர்கள் பக்தஜனகமிட்டி என்று அழைக்கப்படுகிறார்களாம். அவர்களுக்கென்று தனியே குடும்பம் ஏதுமில்லாத்தால் இங்கேயே தங்கி அன்னதானம் செய்வதை ஒரு சேவையாகச் செய்து வருகிறார்கள்.

அவர்களின் இந்தத் தொண்டை அன்னதானம் என்று சொன்னால் கூட அவர்கள் ஏற்றுக் கொள்ள மறுக்கிறார்கள். இந்த அன்னதானத்தைப் பகிர்ந்துண்டு வாழ்தல் என்றே சொல்கிறார்கள். விருந்தளித்தல் என்பது பசிக்காக மட்டுமல்ல, ருசிக்காகவும் தான் என்பது இவர்கள் கொள்கை. அதனால் தான் ருசிமிகுந்த ஆவக்காய், எலுமிச்சை, நாரத்தம் ஊறுகாய்களை உணவுக்குத் துணையாகப் பரிமாறுகின்றனர்.

இந்த மலைக்கு விசேடமில்லாத சாதா நாட்களில் வேண்டுதல் காரணமாக வரும் பக்தர்களுக்குக்கூட இங்கு எப்போது வேண்டுமாயினும் உணவு பரிமாறப்படுகிறதாம். அமாவாசை தினங்களில் மட்டும் காலையில் இனிப்புடன் டிபனும் (பொங்கல் அல்லது உப்புமா,

## ஆன்மீகம் 110

சில சமயங்களில் தோசை) மதியம் அப்பளம், பாயாசத்துடன் சாப்பாடு, மாலை அல்லது இரவு சாப்பாடு வழங்குகிறார்கள்.

அதுமட்டுமல்ல, அமாவாசை தரிசனம் முடிந்து இரவு தங்கி மறுநாள் காலை புறப்படும் பக்தர்களுக்கு வழியில் பசியாறுவதற்காக புளி சாதமும் கட்டித் தருகிறார்களாம். இந்தக் காலத்தில் இது எத்துணை மகத்தான சேவை. இறை சேவை என்பது ஆண்டவருக்கு மட்டுமல்லாது அவரின் அடியார்களுக்கும் செய்யும் சேவையல்லவா.

சாப்பாடு முடித்த கையோடு எல்லோரும் எழுந்திருக்கையில், அவர்களின் அன்னதான சேவைக்காக... தப்பு, தப்பு.... பகிர்ந்துண்டு வாழ்தலுக்கு நன்றியாக பாடல் ஒன்றை கணீரென்ற குரலில் பாட ஆரம்பித்தார் சிவனடியார்.

"பக்தராய்ப் பணிவார்கள்
எல்லார்க்கும் அடியேன்
பரமனையே பாடுவார்
அடியார்க்கும் அடியேன்
சித்தத்தைச் சிவன்பாலே
வைத்தார்க்கும் அடியேன்"

என்று திருத்தொண்டர் தொகை பாடியவாறே வெளியே வந்தார்.

(தொடரும்)

டாக்டர். சி. எஸ். முருகேசன்,
எம்.ஏ., பி.எச்.டி

# இந்தக் குளத்தில் கல்லெறிந்தவர்கள்

29

...."என்னய்யா இப்படிச் செய்து விட்டீர்களே!" தாஸ் என்னைச் செல்லமாய்க் கிள்ளினார்.

அவரை நான் இரண்டு கேள்விகள் கேட்டேன்.

முதல் கேள்வி: முன்னப் பின்ன முதலிரவு தெரிந்தவனைப் பார்த்து எழுதி வாங்கியிருக்கக் கூடாதா?

இரண்டாவது கேள்வி: முதலிரவுக்கு வந்த மாப்பிள்ளை பாட்டுப் பாடிக் கொண்டிருக்கிறானே என்ற அனுதாபத்தில் அந்தப் பெண் அழுதிருக்கலாமல்லவா?

தாஸ் பேசவில்லை.

பின்னாளில் கலை இலக்கியப் பணிகள் பெருகப் பெருக, திரைத்துறைப் பணிகள் விரிய விரிய என் நிமிடங்கள் பற்றி எரிய எரிய, அவரை நான் அடிக்கடி சந்திக்கிற வாய்ப்புகளை இழந்து போனேன்.

ஒருநாள்-

அவரைப் பார்க்க வேண்டும் போலிருந்தது எனக்கு.

தொலைபேசியில் அழைத்தேன்; வரவில்லை.

நண்பர்களிடம் சொல்லி விட்டேன்; வரவில்லை.

ஆள் அனுப்பினேன்; வரவில்லை.

விசாரித்தேன்; விவரம் புரிந்தது.

அந்தத் தங்கக் குணம் கொண்ட சகோதரனுக்குத் தாழ்வு மனப்பான்மை வந்திருக்கிறது.

நான் ஏதோ சிகரத்திலிருக்கும் சிம்புள் பறவையென்றும் அவர் ஏதோ அடிவாரத்திலிருக்கும் சிறகு முளைக்காத சிட்டுக் குருவியென்றும் அவரே ஒரு தப்பான கணக்குப் போட்டு என்னைத் தவிர்த்து வந்திருக்கிறார்.

புரிந்த கொண்டேன்; புறப்பட்டேன்.

வாசலில் கார் வந்து நின்றது. கண்டதும் ஆடைகளில் தீப்பிடித்தது மாதிரி அலறினார் தாஸ்.

அய்யா நீங்களா? உக்காருங்க. உக்காருங்க.

நாற்காலியைத் துடைத்துப் போடுவதாய் உடைத்துப் போட்டார்.




சட்டென்று வேட்டி கட்டுவதாய்த் தலைகீழாய்க் கட்டினார்.

தப்பான துவாரங்களில் சட்டைப் பொத்தான்கள் போட்டார்.

முதலில் அவரை என் பக்கத்தில் அமர்த்திப் பரபரப்பைக் குறைத்தேன்.

ஏன் இப்படிப் படபடக்கிறீங்க? எம்.எல்.ஏ.வீட்டுக்கு முதலமைச்சர் வந்த மாதிரி ஏன் இப்படித் துடிக்கிறீங்க? நான் உங்க பழைய வைரமுத்துதான். உங்ககிட்ட முட்டை வாங்கிச் சாப்பிட்டவன்தான். கார்ல ஏறுங்க; வெளியே போகலாம்.

பரவசத்தோடு புறப்பட்டார்.

நான் தங்கியிருந்து எம்.ஏ.படித்த பழைய வீடு போனோம்.

ஓ! எத்தனை நினைவுகள்! எத்தனை கனவுகள்!

இதுதானே நான் தொல்காப்பியத்தை மண்டியிட்டு மனப்பாடம் செய்த இடம்.

இதுதானே அந்தத் தீவிரவாதிகளோடு வாய்ச் சண்டை வளர்த்த இடம்!

ஓ! இந்த இடம் தானே எனது புதுக் கவிதையின் போர்க்களம்.

கண்ணீர்- ரத்தம்- வியர்வை- அத்தர் அத்தனை வாசனையும் அடித்தது எனக்குள்.

அங்கிருந்து கல்லறை போனோம்.

வடமலைப்பிள்ளைத் தெருவிலிருக்கும் அந்தக் கல்லறைதான் எனது பகல் நேரத்துப் படிப்பகம்.

என்ன மாற்றம்! படுத்திருந்த கல்லறையில் பாதி இப்போது எழுந்து விட்டது; கல்லறையில் பாதி 'சர்ச்' ஆகிவிட்டது.



தாணா தெருவில் காலார நடந்தோம்.

சாலைக் கடையில் தேநீர் குடித்து, பழகிய நண்பர்களோடு பழைமை பேசி, கடற்கரைக்குப் போய் மலரும் நினைவுகள் பகிர்ந்து, சைனா டவுனில் உணவருந்தி மீண்டும் தாஸை புரசைவாக்கத்தில் இறக்கி விட்டபோது அவர் விழியோரங்கள் வியர்த்திருந்தன.

என் கண்களும் கலங்கி விட்டன.

என்னிடம் ஒரு உதவியும் கேட்காதவரும், என்னிடம் உதவி கேட்க அதிக உரிமையுள்ளவரும் நீங்கள்தான் என்றேன்.

நெகிழ்ந்து போனார்.

சிங்கத்தின் பாலைத் தங்கப் பாத்திரத்தில் தான் வைக்க வேண்டும் என்பார்கள்.

தாஸ்- சிங்கப்பால்.

ஒரு தங்கப் பாத்திரம் தயாரிக்க வேண்டும்.

(தொடரும்)

-வைரமுத்து -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குண்டுவெடிப்புக்கு இலங்கை கண்டனம்

(கொழும்பு)

சென்னை மத்திய புகையிரத நிலையத்தில் நேற்றுமுன்தினம் காலை இடம் பெற்ற இரட்டைக் குண்டுத் தாக்குதலை இலங்கை அரசாங்கம் கண்டித்துள்ளது.

இது குறித்து இலங்கை அரசு வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அப்பாவிப் பொதுமக்களை இலக்கு வைத்து மோசமாக நடத்தப்பட்ட இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் இந்திய மக்களுடன் நாமும் சோகத்தைப் பகிர்ந்துகொள்வதாக வெளிவிவகார அமைச்சு வெளியிட்டிருக்கும் அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளது.

இச் சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கும், இந்திய மக்களுக்கும், இந்திய அரசாங்கத்துக்கும் எமது அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம் என அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (2)

# இடம்பெயர்ந்த முஸ்லிம் மக்களை துரிதகதியில் மீள்குடியேற்றுங்கள்

## ஸ்ரீலங்கா முஸ்லிம் பேரவை ஜனாதிபதிக்கு கடிதம்

ஸ்ரீலங்கா முஸ்லிம் பேரவை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு கடிதம் அனுப்பி வைத்துள்ளது.

இடம்பெயர் முஸ்லிம் மக்களை மீள் குடியேற்றும் நடவடிக்கைகளை துரிதகதியில் மேற்கொள்ளுமாறு முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதியிடம் கோரியுள்ளனர்.

நாடாளுமன்றில் அங்கம் வகிக்கும் 16 முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கையொப்பத்துடன் இந்த கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அமைச்சர்களான ரவூப் ஹக்கீம், ஏ.எச்.எம். பௌசீ, றிசாத் பதியூதீன், எ.எம்.எல்.எம். அதாவுல்லா உள்ளிட்ட பல முக்கிய முஸ்லிம் அரசியல் தலைவர்கள் கடிதத்தில் கையொப்பமிட்டுள்ளனர்.

முஸ்லிம் மக்கள் உரிய முறையில் மீள்குடியேற்றப்படாத காரணத்தினால் முஸ்லிம் நாடுகளின் ஒத்துழைப்பை பெற்றுக் கொள்ள முயற்சிக்கப்பட்டது என குறிப்பிடப் பட்டுள்ளது.

இந்த நடவடிக்கைகளுக்கு சிங்கள பௌத்த அமைப்புக்கள் எதிர்ப்பை வெளியிட்டு வருகின்றன.

சிங்கள ராவய, பொதுபலசேனா மற்றும் ராவணா பலய போன்ற பௌத்த கடும்போக்கு அமைப்புக்கள் முஸ்லிம்கள் மீது அடக்கு முறைகளை பிரயோகித்து வருவதாக கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த விடயங்கள் குறித்து ஜனாதிபதி மஹிந்த உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென கோரப்பட்டுள்ளது.

பௌத்த கடும்போக்குடைய அமைப்புக்கள் இஸ்லாமிய வழிபாட்டுத் தளங்கள், ஹலால் உணவு வகைகள் மற்றும் முஸ்லிம்




மக்களின் ஆடைகள் தொடர்பில் குரோதமான பிரசாரங்களை மேற்கொண்டு வருவதாக கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. தமிழீழ விடுதலைப் புலிகளினால் விரட்டியடிக்கப்பட்ட முஸ்லிம் மக்களை மீள்குடியேற்ற எந்தவொரு தரப்பினரும் ஆர்வம் காட்டவில்லை எனவும் அதில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (2)

# 16 தமிழ் அமைப்புக்கள் மீதான தடை அமுல்படுத்தப்படமாட்டாது

## கனேடிய அரசு தெரிவிப்பு

**இலங்கை அரசாங்கத்தினால் 16 தமிழ் அமைப்புக்கள் மீது மேற்கொள்ளப்பட்டுள்ள தடை விதிப்பை தான் அமுல்படுத்தப் போவதில்லையெனவும் அந்த குழுக்கள் கனடாவில் தங்கள் கருத்துக்களை சட்டபூர்வமான முறையில் வெளிப்படுத்துவதற்கான சுதந்திரத்தைத் தொடர்ந்தும் கொண்டிருக்குமெனவும் கனேடிய அரசாங்கம் தெரிவித்துள்ளது.**

கனேடிய வெளிவிவகார அமைச்சர் ஜோன் பெயார்ட் மற்றும் வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் லைனே யெலிச் ஆகிய இருவரும் இணைந்து வெளியிட்டுள்ள அறிக்கையொன்றிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

பயங்கரவாத செயற்பாடுகளுடன் தொடர்புகளை வைத்திருப்பதாகக்கூறி கனடாவுடன் உறவுகளைப்பேணிவரும் சில குழுக்கள் உள்ளிட்ட 16 அமைப்புக்கள் மற்றும் 424 தனிநபர்கள் மீது இலங்கை அரசினால் மேற்கொள்ளப்பட்டுள்ள தடைவிதிப்பானது தங்களுக்கு கவலையளிப்பதாக தெரிவித்துள்ள அவர்களிருவரும் இலங்கையின் நடவடிக்கைக்கு கனடாவில் சட்டபூர்வ விளைவேதும் கிடையாதெனவும் பட்டியலிடப்பட்டுள்ள குழுக்களும் தனி நபர்களும் கனடாவில் தங்கள் கருத்துக்களைச் சட்டபூர்வமாக வெளிப்படுத்துவதற்கான சுதந்திரத்தை இந்த நடவடிக்கை கட்டுப்படுத்தவில்லை.

எது எப்படியிருப்பினும் இந்த பட்டியல் மூலம் இலக்கு வைக்கப்பட்டுள்ள கனேடியர்கள் இலங்கை அதிகாரிகளால் விசாரணைக்குட்படுத்தப்பட்டு தடுத்து வைக்கப்படும் அல்லது கைது செய்யப்படும் சாத்தியமுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளனர்.

இலங்கை அரசினால் தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் யுத்தத்திற்குப் பின்னரான நல்லிணக்க செயற்கிரமத்தில் புலம்பெயர் சமூகங்கள் முக்கிய வகிபாகமொன்றை கொண்டுள்ளதை குறிப்பிட்டுள்ள அவர்கள் இலங்கை அரசின் இந்த நடவடிக்கையானது நல்லிணக்க முன்னேற்றத்தில் மேலும் தடங்கலை ஏற்படுத்தக் கூடுமெனவும் பட்டியலிடப்பட்டுள்ள சில குழுக்கள் பற்றிய கவலைகளைத் தாங்கள் பகிர்ந்து கொள்ளும் அதேசமயம் இலங்கை அரசாங்கம் பயங்கரவாதத்தை முறியடிப்பதற்கென தன்னால் எடுக்கப்படும் நடவடிக்கை



எதுவும் சர்வதேச சட்டத்தின் குறிப்பாக சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தின் கீழான தனது கடப்பாடுகளுடன் இணங்கிப் போகின்றதா? என்பதை உறுதிப்படுத்த வேண்டுமெனவும் குறிப்பிட்டுள்ளனர்.

பயங்கரவாத அனைத்து நடவடிக்கைகளையும் முறியடிப்பதில் கனேடிய அரசாங்கம் தொடர்ந்தும் ஈடுபாடு காட்டி வருகின்றது. குற்றவியல் கோவையின் சட்ட ஏற்பாடுகளின் கீழ் கனடா தமிழீழ விடுதலைப்புலிகளைக் கடந்த 2006 ஆம் ஆண்டிலும் உலகத் தமிழர் இயக்கத்தை கடந்த 2008 ஆம் ஆண்டிலும் தன்னால் வெளியிடப்பட்டிருந்த பயங்கரவாதப் பட்டியலில் உள்ளடக்கியிருந்ததாகவும் மேற்படி அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வார முற்பகுதியில் கனேடிய எதிர்க்கட்சியினர் மேற்படி அமைப்புக்கள் மீதான இலங்கை அரசின் தடை விதிப்புக்கு எதிர்ப்பு தெரிவித்திருந்ததுடன் குறித்த நடவடிக்கைக்கெதிராக கடும் நடவடிக்கையை எடுக்குமாறு கனேடிய அரசுக்கு அழைப்பு விடுத்திருந்தமை தெரிந்த விடயமே. (2)

## இலங்கையில் ஊடக சுதந்திரம் கிடையாது

இலங்கையில் ஊடக சுதந்திரம் கிடையாது என அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

நாட்டில் ஊடகங்கள் சுதந்திரமான முறையில் இயங்கவில்லை என ப்ரீடம் ஹவுஸ் என்ற சர்வதேச ஊடக சுதந்திரம் அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது. ஊடக சுதந்திரம் காணப்படும் நாடுகளை குறித்த அமைப்பு தரவரிசைப்படுத்தியுள்ளது.

குறைந்த புள்ளிகளைப் பெறும் நாட்டில் அதிகளவு சுதந்திரம் காணப்படுவதாகவும் அதிக புள்ளிகளை பெற்றுக்கொள்ளும் நாட்டில் சுதந்திரம் கிடையாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, இலங்கைக்கு 76 புள்ளிகள் வழங்கப்பட்டுள்ளன. ஊடக சுதந்திரம் அதிகமாக காணப்படும் நாடுகளின் வரிசையில் நோர்வே, சுவீடன் ஆகிய நாடுகள் முன்னணி வகிக்கின்றன. இந்த இரண்டு நாடுகளும் பெற்றுக்கொண்ட புள்ளிகளின் எண்ணிக்கை பத்தாகும்.

2014 ஆம் ஆண்டுக்கான ஊடக சுதந்திரம் என்ற அறிக்கையில் இந்த விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளது. இலங்கையில் இணைய ஊடகங்களுக்கு ஓரளவு சுதந்திரம் காணப்பட்ட போதிலும் அச்சு ஊடகங்களுக்கு சுதந்திரம் கிடையாது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலக அளவில் ஊடக சுதந்திரம் பின்னடைவை எதிர்நோக்கியுள்ளதாக அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எகிப்து, லிபியா, ஜோர்தான் போன்ற மத்திய கிழக்கு நாடுகளில் ஊடக சுதந்திரம் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது எனவும் அதில் தெரிவிக்கப்படுகிறது. (2)

# குடிவரவு குடியகல்வு சட்டங்களில் மாற்றம்

## பேராசிரியர் ரொஹான் வலியுறுத்து

பாகிஸ்தான் உளவுப் பிரிவின் முகவர் ஒருவர் சென்னையில் கைது செய்யப்பட்டமை தொடர்பில் பிராந்திய வலயமே கவனம் செலுத்த வேண்டுமென சர்வதேச பயங்கரவாதம் தொடர்பான நிபுணத்துவ பேராசிரியர் ரொஹான் குணரட்ன தெரிவித்துள்ளார்.

அண்மையில் பாகிஸ்தான் தீவிரவாத அமைப்புக்களுடனும், பாகிஸ்தான் அரச உளவுப் பிரிவுடனும் தொடர்புடைய இலங்கையர் ஒருவரை கைதுசெய்துள்ளதாக இந்தியா தகவல் வெளியிட்டிருந்தது. கண்டியைச் சேர்ந்த நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டிருந்தார்.

குறித்த நபர் இலங்கை, மாலைதீவு, இந்தியா ஆகிய நாடுகளில் தமது செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுவதாகவும், இது ஒட்டு மொத்த பிராந்திய வலயத்திற்கே அச்சுறுத்தலாக அமைந்துள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்கா ஆப்கானிஸ்தானில் தனது துருப்பினரை குறைத்து வருகின்றமை, பிராந்திய வலயத்தில் இஸ்லாமிய தீவிரவாதம் வியாபிக்க வழியமைக்கும் என அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கையின் குடிவரவு குடியகல்வு சட்டங்களில் மாற்றம் செய்யப்பட வேண்டுமெனவும், சட்டவிரோதமான செயற்பாடுகளில் ஈடுபடுபவர்கள் நாட்டுக்குள் பிரவேசிப்பதனை தடுக்க ஓர் பொறிமுறைமை அமைக்கப்பட வேண்டுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவசாயிகளும் நாட்பட்ட சிறுநீரக செயலிழப்பு நோயும்

இலங்கையின் வடமத்திய, வட மேல், கிழக்கு மாகாணங்களிலும் அம்பாந்தோட்டையின் சில பகுதி களிலும் இந்நோயானது கடந்த சில வருடங்களில் வேகமாக பரவி அங்குவாழும்மக்களைகுறிப்பாகவிவ சாயமும் அது சார்ந்த தொழில்களி லும் ஈடுபடும் பாமர மக்களை பாதி த்து வருகின்றது. இந்நோய் கார ணமாக 15% வடமத்திய மாகாண மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வடக்கு மாகாண மக்களாகிய எம்மையும் இக் கொடிய சிறுநீரக செயலிழப்பு நோய் பாதிக்கும் காலம் வெகு தூரத்தில் இல்லை என்பதே யதார்த்தமாகும்.

**இந்நோயின் தாக்கம் பற்றிய புள்ளி விபரங்கள்:**

★ இந்நோயானது முதன் முத லாக 1990 ஆம் ஆண்டுகளின் ஆரம்ப காலப்பகுதிகளில் மதவாச்சி பகுதிகளில் கண்டுபிடிக்கப்பட்டது.

★ இன்று வரைக்கும் இரண் டரை இலட்சத்திற்கும் அதிகமான விவ சாயிகள் இந்நோயினால் பாதிக்கப் பட்டு உயிரிழந்துள்ளனர்.

★ வடமத்திய மாகாணத்தில் 15% மக்கள் தொகையினர் இந்நோயி னால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

★ ஏறத்தாழ 8 ஆயிரம் வரை யான மக்கள் இந்நோயிற்கான சிகிச்சையை தற்போது பெற்ற வண் ணமுள்ளனர்.

★ இந்நோயானது வடமத்திய மாகாணம், ஊவா மாகாணம், வட மேல்மாகாணம், கிழக்குமாகாணத்தின் ஒரு பகுதி, வவுனியா மாவட்டத்தின் தென்பகுதி மற்றும் அம்பாந்தோட்டை என்பவற்றை பாதித்துள்ளது.

**விவசாயிகளுக்கு ஏற்படும் நாட் பட்ட் சிறுநீரக செயலிழப்பு நோய் என்றால் என்ன?**

அளவுக்கு அதிகமான உரப்பா வனை, பீடை கொல்லிப்பாவனை நடைபெறும் பிரதேசங்களில் உள்ள மக்கள் அங்குள்ள நீர்நிலைகளை தமது அன்றாட தேவைகளுக்காக பயன்படுத்தும் போது நீண்ட காலப் போக்கில் அவர்களது சிறுநீரகமானது தனது தொழிற்பாட்டை சிறிது சிறி தாக நிறுத்திக் கொள்ளல் ஆகும்.

வழமையாக இந்நோயானது உயர் குருதி அழுத்தம், சலரோகம் போன்ற நோய்களினால் பாதிக்கப் பட்டவர்களையே அதிகம் தாக்கும். ஆனால் விவசாயிகளில் காணப்படும் இந்நோயானது அவர்களுக்கு வேறு எந்த நோய்களும் இல்லாத பட்சத் திலேயே ஏற்படுகின்றது. (Chronic Kid ney disease of unknown etiology)

இந்நோயானது ஏற்படுவதற்கு அச்சூழலில் காணப்படும் பல்வேறு பட்ட காரணிகள் செல்வாக்கு செலுத்து கின்றன. முக்கியமாக நீர், நிலம் ஆகியன மாசடைதல் ஆகும்.

**இந்நோயின் தாக்கத்திற்கு உள் ளாகும் ஆபத்திற்கு உரியவர்கள்:**


★ இலங்கையின் உலர்வலய த்தில் காணப்படும் மக்கள்.

★ விவசாயமும் அதன் சார்ந்த தொழில்களிலும் ஈடுபடும் கூலித் தொழிலாளர்கள்.

★ சமூக பொருளாதார நிலை களில் பின்தங்கி உள்ளவர்கள்.

★ குடிப்பதற்காக நிலத்தடி நீரினை கிணறு மூலம் பெற்றுக் கொள்ளும் மக்கள்.

★ கடினத்தன்மையான (Hard ness of Water) நீரினை அருந்தும் மக்கள்.




★ கசிப்பு போன்ற சட்ட விரோத மதுபானங்களை அருந்தும் ஆண்கள்.

★ இந்நோயானது 55-60 வயது களில் வெளிக்காட்ட ஆரம்பிக்கும்.

★ பெண்களை காட்டிலும் ஆண் களே அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர்.

★ ஆண், பெண் விகிதசமம் 3:1 ஆகும்.

★ இந்நோய் பரவிய இடங்களில் பயிரிடப்படும் புகையிலை மற்றும் மரக்கறி வகைகளை பயன்படுத்தும் மக்கள்.

**விவ்சாயிகளுக்கு நாட்பட்ட சிறு நீரக செயலிழப்பு நோய் ஏற்படுத்து வதற்கான காரணங்கள்.**

***1.ஆசனிக்கு, கட்டியம், ஈயம் போன்ற பார உலோகங்கள் மனித உடலை அடைதல்***

மனித உடலிற்கு தீங்கு பயற்கும் மேற்கூறப்பட்ட உலோகங்கள் பின் வரும் வழிமுறைகளின் ஊடாக மனித உடலை அடைகின்றன.

**அ.பயிர்களுக்கு பாவிக்கப்படும் அசேதன வளமாக்கிகள் மூலம்,**

குறிப்பாக பொசுபரேற்று வகை வளமாக்கிகள், பார உலோகங்களான கட்டியம், ஆசனிக்கு, ஈயம் என்பவ ற்றை சிறிதளவில் கொண்டுள்ளன. எல்லா வகையான பொசுபரேற்று வளமாக்கிகளும் ஆசனிக்கு என்ற உலோகத்தை சிறிதளவு கொண் டுள்ளன. இவ்வகை வளமாக்கிகளை அளவிற்கு அதிகமாக பாவிக்கும் போது மண்ணை அடையும் அவ்வு லோகம் நீரினால் கழுவப்பட்டு நீர் நிலைகளை அடையும். அங்கு நீரின் கடினத்தன்மைக்கு பொறுப்பான கல்சியம் மற்றும் மக்னீசியம் என்ப வற்றுடன் தாக்கமடைந்து நீரில் கரை யும் தன்மைக்கு மாற்றமடையும். பின்பு குடிக்கும் நீரின் ஊடாக உடலை அடையும்.

ஆசனிக்கு உலோகமானது உட லில் செறிவடையும் போது சிறுநீரக த்திற்கு பாதிப்பை ஏற்படுத்தும்.

**ஆ. உணவுச்சங்கிலி மூலம்**

நீர் நிலைகளை அடைந்த ஆச னிக்கு கல்சியம் போன்ற பார உலோ கங்கள் தண்ணீர், மீன்கள் மற்றும் தாமரைக்கிழங்கு போன்றவற்றில் சேர்ந்து செறிவடையும். அவற்றை மனிதர்கள் உண்ணும் போது அவை மனித உடலை அடையும்.

**2 .அளவிற்கு அதிகமான பூச்சி கொல்லிகளைப் பாவித்தல்**

சில வகைகளான பூச்சி கொல் லிகளை விசுறும்போது அவை நேர டியாக பழங்கள், மரக்கறிவகைகள், தானியங்களுடன் இணைந்து கொள் கின்றன. இவ்வுணவுகளை உண் ணும் மனிதர்களின் உடலில் செறி வடைந்து அவர்களது சிறுநீரகத்தின் தொழிற்பாட்டை பாதிக்கும். குளோரோ பிரிவோஸ் என்ற பூச்சிக் கொல்லி யானது நேரடியாகவே சிறு நீரகத்தைப் பாதித்து இறப்பை ஏற்படுத்தும்.

உலக சுகாதார நிறுவனம் நடத்திய ஆய்வுகளின் போது சிறுநீரக செய லிழப்பிற்கு உள்ளானவர்களில் 31 வீதமானவர்களின் சிறுநீர் மாதிரியில் பூச்சி கொல்லி மருந்துகள் அனுமதிக் கப்பட் அளவிற்கு மேல் காணப்பட்டது.

**களை கொல்லிகளை மிதமிஞ்சி பாவிப்பதால்**

புரோப்பனில் போன்ற களை கொல் லிகளை விசிறும்போது அவை தோலின் ஊடாகவோ சுவாசத்தின்



ஊடாகவோ அல்லது உணவுச்சங்கிலி ஊடாகவோ மனித உடலை அடை ந்து நாட்பட்ட சிறுநீரக செயலிழப்பை ஏற்படுத்துகின்றது.

முக்கியமாக பயிர்ச்செய்கைக்கு முன்பாக மண்ணை பதப்படுத்தும் போது விசிறப்படும் கிளைபொசேற் எனும் களை கொல்லியானது ஏனைய வளமாக்கிகள் மூலம் மண்ணை அடை யும் ஆசனிக்கு கட்மியம் போன்ற பார உலோகங்களை மண்ணுடன் நிலை யாகப்பிணைத்து வைத்திருந்து நீர் நிலைகளை சென்றடைய உதவு கின்றது.

**நீரின் கடினத்தன்மை (Hard- ness of Water)**

உலக சுகாதார நிறுவனத்தின் ஆராய்ச்சிகளின் படி அதிகளவு கடின த்தன்மை உள்ள நிலத்தடி நீரினை பாவிக்கும் பிரதேச மக்கள் அதிகள வில் நாட்பட்ட நிறுநீரக செயலிழப்பு நோயின் தாக்கத்திற்கு உள்ளாகியுள் ளனர். [illegible] னில் நீரிலுள்ள சிறுநீரகத்தைப் பாதி க்கும் நச்சுத்தன்மைப் பதார்த்தங் களின் அளவு நீரின் கடினத் தன்மை க்கு நேர்விகித சமனாகக் காணப்படு கின்றது.

மேற்கூறிய காரணிகளைத் தவிர பின்வரும் காரணிகளும் விவசாயி களில் நாட்பட்ட சிறுநீரக செயலிழப்பு நோயை ஏற்படுத்துகின்றன.

★ கசிப்பு போன்ற சட்டவிரோத மது பாவனை

★ உள்நாட்டில் அதாவது நாட் பட்ட சிறுநீரக செயலிழப்பு நோய் பாதி த்த பிரதேசங்களில் பயிரிடப்பட்ட புகையிலையின் பாவனை

★ அளவுக்கதிகமான வலிநோய் நிவாரணிப் பாவனை முக்கியமான புரூவன் (Brufen) போன்ற (orsaids) மருந்துகளின் பாவனை.

**வடமாகாண மக்களாகிய நாம் இந்நோயினையிட்டு ஏன் கவலை ப்பட வேண்டும்.**

1.வடமாகாணத்தின் பெருமளவு நீர்வளம் பாதிக்கப்பட்ட ஏனைய பிர தேசங்களைப் போன்று நிலத்தடி நீர் வளமாக காணப்படுகின்றமையும் நீரா னது கடினத்தன்மையுள்ளதாக காணப் படுகின்றமையாகும். மற்றும் ஏறக் குறைய பெரும்பாலான மக்கள் நில த்தடி நீரினை தமது அன்றாடத் தேவை க்காகப் பாவிக்கின்றனர். மற்றும் நீரின் கடினத்தன்மை பிரதேசத்திற்குப் பிரதேசம் வேறுபடுவதோடு நீரின் கடின த்தன்மையானது சிறுநீரக செயலிழப் பிற்கு நேர்விகித சமனாகவுள்ளது.

2.வடமாகாணத்தின் பெருமளவு நிலம் பாதிக்கப்பட்ட ஏனைய பிரதேச ங்களைப் போன்று உலர்வலயத்தில் காணப்படுகின்றமையும் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா ஆகிய மாவட்டங்களில் பெரும்பா லான மக்கள் விவசாயம் மற்றும் அதனோடு சார்ந்த தொழில்களை மேற்கொள் பவர்கள்.

அண்மைக்காலமாக யுத்தம் நிறை வடைந்த பின்னர் குறிப்பாக பொரு ளாதாரத்தடை நீக்கப்பட்ட பின்னர் வடக்கிலுள்ள விவசாயப் பெருமக்கள் அளவுக்கதிகமான அசேதனப் பச ளைகள், பீடைகொல்லி மற்றும் களை கொல்லிகளை பாவித்து வருகின்றனர். கடந்த 30 வருட காலமாக இப்பா வனை மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. அல்லது முற்றாக இல்லாமல் இரு ந்தது. 1977 ஆம் ஆண்டு அறிமுகப் படுத்தப்பட்ட திறந்த பொருளாதாரக் கொள்கை காரணமாகவும் மகாவ லித்திட்டம் காரணமாகவும் வடமத்திய மாகாணத்தில் உரப் பாவனை அளவு க்கதிகமாக அதிகரித்ததன் விளைவே 1990 ஆம் ஆண்டு மதவாச்சிப் பகுதி யில் முதலாவதாக விவசாயி ஒரு வருக்கு நாட்பட்ட சிறுநீரக செயலி ழப்பு நோய் கண்டு பிடிக்கப்பட்டது. யுத்த காலத்தில் இருந்த மட்டுப்ப டுத் தப்பட்ட உரப் பாவனை காரண மாகவே வடமாகாண மக்கள் இன்ன மும் இந் நோயின் தாக்கத்திற்கு உள்ளாக வில்லை. ஆனால் வவுனி யாவின் தென் பகுதியில் உள்ள சில பிரதேசங்களில் இந்நோய் பரவியு ள்ளது இனங்காணப்பட்டுள்ளது. இதன் மூலம் தெளிவாக விளங் குவது என்னவெனில் கடந்த 30 வருடங்களாக நாம் யுத்தம் காரண மாக மட்டுப்படுத்தப்பட்ட அளவில் விவசாய இரசாயனப் பொருட்களை பாவித்த காரணத்தினா லேயே நாம் இன்னமும் பாதிப்படை யவில்லை. மற்றும் இந்நோயானது 12 தொடக்கம் 15 வருடங்களின்பின்பே வெளித்தெரியவரும்.

ஏனெனில் பார உலோகங்க ளான ஆசனிக்கு, கட்சியம் போன்றன மெதுவான வீதத்திலேயே உடலில் சேர்கின்றமையும் நாட்பட்ட சிறுநீரக செயலிழப்பு நோய் இறுதிக் கட்ட த்திலேயே கண்டுபிடிக்கப்படு கின்ற மையும் ஆகும்.

இன்றைய வடமாகாண சனத் தொகுதியில் பெரும்பான்மையினர் பெண்கள். ஆனால் விவசாயிக ளில் ஏற்படும் நாட்பட்ட சிறுநீரக செயலி ழப்பானது பெரும்பாலும் பெண் களை விட ஆண்களையே பாதிக்கும். குறிப்பாக 50 தொடக்கம் 60 வயதில் உள்ளவர்களைபாதிக்கும். ஏற்கனவே போரினால் ஆண்களை அதிகள வில் இழந்துள்ள வடமாகா ணம் இன்று நடைபெறும் அதிக ரித்த விவசாய இரசாயனப் பொருட் களின் பாவனை காரணமாக எதிர்வ ரும் 12 தொடக்கம் 15 வருடங்களின் பின்பு குறிப்பாக உழைக்கும் குடும் பத் தலைவர்களின் உயிரிழப்பை அல்லது நோய் வாய்ப்பட்ட, இய லாத நிலைமையை எதிர் கொள்ள நேரிடும். இதன் காரணமாக குடும் பங்களின் பொருளாதார நிலை மேலும் சரி வடையும்.


வடமாகாணத்தில் தற்பொழுது கசிப்புப் போன்ற சட்டவிரோத மது பாவனை அதிகரித்துள்ளது. அத் தோடு வடமாகாணத்தில் பல பிர தேசங்களில் புகையிலை பயிரிடப் பட்டு நுகரப்படுகின்றது. இதன்போது பூச்சி கொல்லிகள் புகையிலை யின் மீது நேரடியாக விசிறப்பட்டு கழுவப் படாமல் உடலை அடைகின்றது. இவ் விரு காரணிகளும் நாட்பட்ட சிறு நீரக செயலிழப்பை விவசாயிக ளில் ஏற்படுத்தும் சாத்தியக்கூறு அதி கம். கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய போரினால் மோசமாக பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் உள்ள மக்களில் பெரும்பாலானோர் உளச் சோர்வு (Depression) நோயால் பாதிக்கப்பட் டுள்ளனர். இவர்களில் பெரும்பாலா னோர் உடல் உபாதைகளுக்காக புரூவன் (Brufen) போன்ற வலி நிவாரணிகளை (NSAIDS) வைத்திய ஆலோசனை இன்றி பாவிக்கின் றனர். இம்மாத்திரைகள் காலப் போக் கில் சிறுநீரக செயலிழப்பிற்கு வித் திடும்

(தொடரும்)

வைத்தியர்: க.வாசுதேவா
(MBBS)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மே 16 இல் தலைவிதி



இந்தியத் தேர்தலில் ஏழாவது கட்டமான வாக்களிப்பும் நடைபெற்று முடிந்திருக்கிறது. ஆந்திரா, குஜராத், உத்தர பிரதேசம், மேற்கு வங்காளம், பீஹார் மற்றும் காஷ்மீர் உள்ளிட்ட மாநிலங்களிலும், ஏனைய வேறு சில யூனியன் பிரதேசங்களின் தொகுதிகளிலும் சேர்த்து 89 நாடாளுமன்றத் தொகுதிகளில் தேர்தல் நடைபெறுகிறது.

இந்திய நாடாளுமன்றத் தொகுதிகளில் 543 இல், 438 தொகுதிகளுக்கு தேர்தல் நிறைவடைய போகிறது. இன்னும் இரு கட்டங்கள் எஞ்சியிருக்கின்றன. ஒன்பது கட்டமாக நடைபெறும் இந்திய நாடாளுமன்றத் தேர்தல் முடிபுக்கு வந்த பிறகு மே 16 ஆம் திகதி வாக்குகள் எண்ணப்படும். இந்திய பிரதமராக வரப்போகிறவர் யார் என்பது அன்றைய தினமே தெரியவந்து விடும்.

இந்தத் தேர்தலின் ஆறாவது கட்டத்தில்தான் தமிழகம் மற்றும் புதுச்சேரிக்கான நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்றது. தமிழகத்தில் உள்ள 39 நாடாளுமன்றத் தொகுதிகளுக்கும், புதுச்சேரியில் உள்ள ஒரு நாடாளுமன்றத் தொகுதிக்கும் சேர்த்து மொத்தம் நாற்பது நாடாளுமன்றத் தொகுதிகளின் தேர்தல் நடந்து முடிந்திருக்கிறது.

தமிழகத்தைப் பொறுத்தவரை ஆறு முனைப் போட்டி என்றாலும் முக்கியமான போட்டி மூன்று அணிகளுக்கு மத்தியில் தான் இருந்தது. தி.மு.க. அணி, அ.தி.மு.க. அணி, மூன்றாவது பா.ஜ.க.வின் பிரதமர் வேட்பாளர் நரேந்திரமோடியை முன்னிறுத்திய அணிக்கு இடையிலேயே இந்தப் போட்டி இருந்தது.

இம்மூன்று அணிகளும் களத்தில் காரசாரமாக மோதிக் கொண்டன. வார்த்தைப் போர்கள் நடத்திக் கொண்டன. தி.மு.கவிற்கும், அ.தி.மு.கவிற்கும் மாற்று அணியாக நாங்கள் உருவாகியுள்ளோம் என்பது மோடியின் பிரசார மந்திரம். ஆனால், தி.மு.கவோ, மோடி அலை எல்லாம் இல்லை. இது திராவிட அலை வீசும் பூமி என்று போட்டிபோட்டது. பொறுத்துப் பார்த்த அ.தி.மு.க. கடைசியில் மோடியை விமர்சிக்க ஆரம்பித்து, தமிழகத்தின் வளர்ச்சிக்கு இந்த மோடிதான் காரணம் என்று இறுதியாக போட்டியை நிறைவு செய்தது.

தமிழகத்தில் போட்டி முடிந்துவிட்டது. அதில் யார் வெற்றி பெற்றார்கள் என்பது மே 16 ஆம் திகதி தெரியும். அன்றைய தினம் வாக்குகளை எண்ணும் போதுதான் மூன்று அணியில் யாருக்கு இலாபம், நஷ்டம் என்பது வெளிப்படும்.

தேர்தல் களத்தைப் பொறுத்தமட்டில் அ.தி.மு.கவிற்கு விழும் வாக்குகளைப் பிளக்கும் சக்தி மோடி தலைமையிலான அணிக்கு உண்டு என்ற கருத்து நிலவுகிறது. இந்த அணியில்தான் வைகோ, விஜயகாந்த், டாக்டர் ராமதாஸ் எல்லோரும் அணி வகுத்து நிற்கிறார்கள்.

அதே நேரத்தில் சிறுபான்மையினர், தலித் மக்கள் அனைவரும் பெரும்பான்மையாக தி.மு.க. பக்கமே வாக்களித்திருப்பார்கள் என்ற எண்ணம் மேலோங்கியிருக்கிறது. திருமாவளவன், டாக்டர் கிருஷ்ணசாமி, வைகோ, அன்புமணி ராமதாஸ், தயாநிதி மாறன், அ.ராஜா என்று ஒரு வி.ஐ.பிக்கள் பட்டாளமே தேர்தலில் தங்கள் தலைவிதி எப்படி என்பதைக் கணிக்க முடியாமல் தவித்துக் கொண்டிருக்கிறது என்பது தான் தற்போதைய நிலைமை.

தேர்தல் முடிபுகள் யாருக்குச் சாதகமாக அமைந்தாலும் மத்தியில் வரப்போகின்ற அரசாங்கம் பா.ஜ.க. தலைமையிலானது என்றால் இலங்கை தமிழர் பிரச்சினையில் பெரிய மாற்றம் வந்துவிடப் போவதில்லை என்ற எண்ணம் சாதாரண வாக்காளர் மத்தியிலும் தமிழகத்தில் இருக்கிறது. தமிழகத்தில் தேர்தல் அறிக்கை வெளியிட்ட அ.தி.மு.க., தி.மு.க., மறுமலர்ச்சி தி.மு.க., பாட்டாளி மக்கள் கட்சி அனைத்துமே இலங்கைத் தமிழர் பிரச்சினை பற்றி தங்கள் கருத்துக்களை, வேண்டுகோளை மக்கள் மன்றத்தில் எடுத்து வைத்துள்ளன.

ஏன் காங்கிரஸ் கட்சியின் தேர்தல் அறிக்கையில்கூட இலங்கை தமிழர்களுக்கு என்ன செய்வோம் என்பது விளக்கப்பட்டுள்ளது. ஆனால், பா.ஜ.கவின் தேர்தல் அறிக்கையில் இலங்கை தமிழர் பிரச்சினையில் அக்கட்சியின் நிலைப்பாடு என்ன என்பது விளக்கப்படவில்லை.

அதுமட்டுமல்ல, தமிழக பா.ஜ.க. சார்பில் தனியாக ஒரு துணை தேர்தல் அறிக்கை வெளியிடப்படும். அதில் இலங்கை தமிழர் விவகாரம் இடம்பெறும் என்றெல்லாம் சொன்னார்கள். ஆனால், அப்படியொரு துணை தேர்தல் அறிக்கை தமிழக பா.ஜ.கவின் சார்பில் இறுதி வரை வெளியிடப்படவே இல்லை.

அதைவிட மேலாக இப்போது ராஜீவ் வழக்கில் தண்டிக்கப்பட்ட ஏழு பேரின் விடுதலை வேறு சிக்கலாக முளைத்திருக்கிறது. இவர்களை விடுதலை செய்த மாநில அரசின் முடிபு இந்திய உச்ச நீதிமன்றத்தின் அரசியல் சாசன பெஞ்சு முன்பு போகிறது. அந்த பெஞ்ச் இந்த வழக்கில் என்ன முடிபு எடுக்கப் போகிறது. அப்போது பா.ஜ.கவுடன் கூட்டணி வைத்திருக்கும் ம.தி.மு.க. போன்ற கட்சிகள் எப்படி சிக்கலில் மாட்டிக் கொள்ளப் போகிறது என்பதெல்லாம் இனிவரும் காலங்களின் கோடை இடிமுழக்கமாக இருக்கும்.

காங்கிரஸ் அரசு இருந்த போது இலங்கை பிரச்சினை தமிழக அரசியல் கட்சிகள் மத்தியில் ஏற்படுத்திய தாக்கம் பா.ஜ.க. தலைமையிலான அரசு அமைந்தாலும் வருமா என்பதே இப்போது கேள்விக்குறியாக இருக்கிறது. ஏனென்றால் தமிழகத்தில் உள்ள மாநில அரசும் சரி, அரசியல் கட்சிகளும் சரி (தி.மு.க., காங்கிரஸ் தவிர) இலங்கைத் தமிழர் பிரச்சினையில் அடக்கி வாசிக்கவே விரும்புவார்கள் என்ற எண்ணமே மேலோங்கியிருக்கிறது.

தமிழகத்தின் நிலைமை இவ்வாறு இருக்க, அகில இந்திய அளவில் முதற் கட்டமாக தேர்தல் நடைபெற்ற போது மோடியை ஒரு வளர்ச்சி நாயகனாக சித்தரித்தது பா.ஜ.க.. ஆனால், அக்கட்சி தேர்தல் அறிக்கை வெளியிட்டவுடன் அதில் இடம்பெற்றிருந்த ராமர் கோயில் கட்டுவது, காஷ்மீருக்கு வழங்கப்பட்டுள்ள சிறப்பு சலுகையை பறிக்கும் முடிபு, பொது சிவில் சட்டம் எல்லாம் சேர்த்து மோடிக்கு ஆர்.எஸ்.எஸ். நாயகன் என்ற முத்திரையைப் பதித்துள்ளது. அதையும் மீறி இப்போது மோடி தரப்பிலிருந்து சோனியாவின் மருமகன் ராபர் வதேரா மீது நடத்தப்படும் தாக்குதல், டெவலப்மென்ட், இந்துத்துவா எல்லாவற்றையும் தாண்டி, பெர்ஷனல் அட்டாக் என்ற நிலைக்கு வந்து விட்டது.

இப்போது காங்கிரசுக்கும், பா.ஜ.கவிற்கும் அகில இந்திய அளவில் நடக்கும் தனிப்பட்ட மோதல் போட்டி ஏற்கனவே தமிழகத்தில் தி.மு.கவிற்கும், அ.தி.மு.கவிற்கும் இடையே நடக்கும் போட்டி போல் இருக்கிறது. ராபர்வதேராவின் மீது எழுந்துள்ள நிலம் தொடர்புடைய சி.டிக்கு அவரது மனைவி பிரியங்கா காந்தி மிகவும் காட்டமாக பதில் கூறியிருக்கிறார்.

மோடிக்கு 54 இஞ்ச் மார்பளவு இருந்தால் என்ன அந்த அளவிற்கு விசாலமான இருதயமாக இருக்க வேண்டும் என்று டைரக்ட் அட்டாக் பண்ணியிருக்கிறார் பிரியங்கா. அதுமட்டுமன்றி, இதுபோன்ற குற்றச்சாட்டுக்களுக்கு எல்லாம் நான் அஞ்சமாட்டேன் என்று அவரது பேச்சில் மறைந்த இந்திரா காந்தியின் துணிச்சல் எதிரொலிக்கிறது.

உத்திரபிரதேசம், பீஹார், குஜராத் உள்ளிட்ட மாநிலங்களில் நடைபெறும் இந்த ஏழாவது கட்டத் தேர்தலில் சோனியா காந்தி, நரேந்திரமோடி, பரூக் அப்துல்லா போன்ற முக்கிய தலைவர்களின் தொகுதிகளிலும் வாக்குப் பதிவு நடைபெறுகிறது. இப்படியொரு சூழலில் மோடி ஆட்சிக்கு வந்தால் காஷ்மீர் இந்தியாவுடன் இருக்க விரும்பாது என்று தடாலடியாக கருத்துச் சொல்லியிருக்கிறார் பரூக் அப்துல்லா.

இவ்வளவு கலவரங்களுக்கு இடையிலும். நான் ஆட்சிக்கு வந்தால் சிறுபான்மையினரை அரவணைத்துச் செல்வேன் என்ற வெளிப்படையான அறிவிப்பை இது வரை மோடி செய்யவில்லை என்பதைத் தான் மற்ற அரசியல் கட்சிகள் அனைத்துமே குறையாகச் சொல்கின்றன.

குறிப்பாக பீஹாரில் உள்ள பா.ஜ.க. தலைவர் ஒருவர், மோடியைப் பிடிக்காதவர்கள் பாகிஸ்தானுக்குப் போகலாம் என்ற போதும்சரி, இன்னொரு பா.ஜ.க. தலைவர் அமித்சா, பழிவாங்க பா.ஜ.கவிற்கு வாக்களியுங்கள் என்ற தொணியில் உத்தரபிரதேசத்தில் பேசிய போதும் சரி, அவர்களை பா.ஜ.கவோ அக்கட்சியின் பிரதமர் வேட்பாளர் மோடியே வெளிப்படையாக கண்டிக்கவில்லை என்ற கோபம் மைனாரிட்டி மக்கள் மனதில் இருப்பதைப் பார்க்க முடிகிறது.

போதாக்குறைக்கு இப்போது ராபர்ட் வதேரா மீது மோடி தரப்பு வெளியிட்டுள்ள சி.டி., பெர்ஷனல் அட்டாக்கை முன் வைத்து தேர்தல் களம் வேகமாக நகர்ந்துகொண்டிருக்கிறது.

ஒரு புறத்தில் மோடியின் நெருங்கிய தொழிலதிபர் அதானிக்கு குஜராத்தில் குறைந்த விலையில் வழங்கப்பட்ட நிலங்கள் பற்றிய புகார். இன்னொரு புறத்தில் ராபர்ட் வதேராவிற்கு விற்கப்பட்ட நிலங்கள் பற்றி புகார். இப்படி பிரதமர் வேட்பாளர்கள் மீதான குற்றச்சாட்டாக இல்லாமல் அவர்களின் நிழல்களுக்கு எதிரான தாக்குதல் நிறைந்த போர்க்களமாக இந்திய தேர்தல் காட்சியளிக்கிறது.

இந்தக் காட்சி மோடிக்கு கணிசமான எண்ணிக்கையில் எம்.பிக்கள் சீட்டு கிடைப்பதை குறைக்கும் என்றே எதிர்பார்க்கப்படுகிறது. அப்படியொரு சூழலில் காங்கிரஸ் தனித்து ஆட்சியமைக்க முடியாவிட்டாலும், 1996 ஆம் வருட பாணியில் மூன்றாவது அணிக் கட்சிகள் ஏதேனும் தலைமை தாங்க விட்டு, காங்கிரஸ் வெளியிலிருந்து ஆதரவளிக்கும் சூழ்நிலை எழலாம்.

இதையெல்லாம் மீறி ஒருவேளை நரேந்திரமோடிக்கும் அவரது கூட்டணிக் கட்சிகளுக்கும் 272 எம்.பி.க்கள் கிடைத்துவிடலாம் என்ற நோக்கில்தான் பா.ஜ.கவினர் ராபர்ட் வதேரா மீதான தாக்குதல் இருக்கிறது.

ஒரு எல்லை வரம்பிற்குள் பேசுங்கள் என்று ராகுல் காந்திக்கு மோடி விடுக்கும் எச்சரிக்கையும் அதை எடுத்துக் காட்டியுள்ளது. மோடி பிரதமரானால் அந்தக் கடவுளால் கூட இந்த நாட்டைக் காப்பாற்ற முடியாது என்ற சோனியாவின் எச்சரிக்கையும் மோடிக்கு தனிப்பட்ட முறையில் ஆட்சி செய்யும் எண்ணிக்கை கிடைத்துவிடக் கூடாது என்பதில் இருக்கிறது.

1980களில் இந்திரா காந்திக்கு கிடைத்ததுபோன்று மோடிக்கு தனித்து ஆட்சி அமைக்கும் எண்ணிக்கையில் எம்.பி.க்கள் கிடைத்து விடுவார்களா, அல்லது 1996 களில் நடந்தது போல் காங்கிரஸ் உதவியுடன் ஆட்சி அமைக்கும் பாக்கியம் மூன்றாவது அணிக்கு கிடைக்குமா? என்ற கேள்வி இந்திய அரசியல் பார்வையாளர்கள் மனதில் எழுந்திருக்கிறது.

1980 அல்லது 1996 இந்த இரண்டில் எது நடக்கப் போகிறது என்பது இந்திய வாக்காளர்களின் கையில் இருக்கிறது. ஏறக்குறைய 438 நாடாளுமன்றத் தொகுதிகளின் வாக்குப்பதிவு முடிபு பெறும் நிலையில், எஞ்சியிருக்கும் தொகுதிகள் 105. அங்கு எட்டும் மற்றும் ஒன்பதாவது கட்டத் தேர்தல்கள் நடந்து மே 16 ஆம் திகதி வாக்குகள் எண்ணப்படுகிறது. இந்த எண்ணிக்கை இந்தியாவின் தலைவிதியை நிர்ணயிக்கும்.

-எம்.காசிநாதன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6 ஆண்டுகளில் 11 ஆயிரத்து 531 பாலியல் வன்முறை சம்பவங்கள்

## பொலிஸ் புள்ளிவிபரத் தகவல்

(கொழும்பு).

இலங்கையில் கடந்த ஆறு ஆண்டுகளில் பெண்கள் மீது 11 ஆயிரத்து 531 பாலியல் வன்முறைச் சம்பவங்கள் இடம் பெற்றுள்ளதாக பொலிஸ் புள்ளி விபரத்தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த 2007 ஆம் ஆண்டு முதல் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் வரையில் 11 ஆயிரத்து 531 பாலியல் வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாகவும் சம்பவங்கள் தொடர்பில் 12 ஆயிரத்து 229 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஆயிரம் பெண்களில் ஒருவர் பாலியல் ரீதியாக துன்புறுத்தப்படுவதாகக் குறிப்பிடப்படுகின்றது.

கடந்த 2007 ஆம் ஆண்டு முதல் 2009 ஆம் ஆண்டு வரையில் வடக்கில் 119 பாலியல் வன்முறைச் சம்பவங்களும் 2009 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு வரையில் 256 சம்பவங்களும் பதிவாகியுள்ளன.

இந்தச் சம்பவங்கள் தொடர்பில் 332 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் பத்து பேர் இராணுவ உத்தியோகத்தர்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதுவரை வடக்கில் இடம் பெற்ற பாலியல் வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக 17 இராணுவ உத்தியோகத்தர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இலங்கை இராணுவ பேச்சாளர் ருவான் வணிகசூரிய அண்மையில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (2)

# போதைப்பொருள் கடத்தலுடன் தொடர்புடைய சந்தேக நபர் கைது

பாகிஸ்தான்- இலங்கை ஹெரோயின் போதைப் பொருள் கடத்தலுடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பாகிஸ்தானிலிருந்து அனுப்பிவைக்கப்படும் ஹெரோயின் போதைப் பொருளை இலங்கையில் விநியோகம் செய்யும் பிரதானியாக குறித்த நபர் செயற்பட்டு வந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த நபருடன் தொடர்புகளைப் பேணிய வெள்ளவத்தை பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இருவரும் நாட்டை விட்டு தப்பியோடியுள்ளவர்களுடன் தொடர்புகளைப் பேணியவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

நீர் இறைக்கும் மோட்டார்களுக்குள் போதைப் பொருள் மறைத்து வைக்கப்பட்டு நாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.

பிரதான சந்தேக நபர், முன்னாள் பொலிஸ்மா அதிபர் ஒருவருடன் நெருங்கிய தொடர்புகளைப் பேணியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சந்தேக நபரின் வீட்டு நிகழ்வுகளில் முன்னாள் பொலிஸ்மா அதிபர் கலந்து கொண்டமைக்கான புகைப்பட ஆதாரங்களும் கிடைக்கப் பெற்றுள்ளன.

பிரதான சந்தேக நபர், தற்போது சேவையில் உள்ள மிக முக்கியமான பொலிஸ் உயர் அதிகாரிகளுடனும் தொடர்புகளைப் பேணியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சந்தேக நபருக்கு கம்பஹா மற்றும் பண்டாரவளை ஆகிய பிரதேசங்களில் காணிகள் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எவ்வாறெனினும் குறித்த சந்தேக நபர்கள் எப்போது, எங்கு வைத்து கைது செய்யப்பட்டார்கள் என்பது பற்றிய தகவல்களை பொலிஸார் வெளியிடவில்லை. (2)

# உலக இளைஞர் மாநாட்டை முன்னிட்டு தபால் உறை வெளியீடு

இலங்கையில் நடைபெறும் உலக இளைஞர் மாநாட்டுக்கென ஞாபகார்த்த முதல் நாள் தபால் உறை வெளியிடப்படவுள்ளதாக இளைஞர் விவகார திறன் அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

அமைச்சர் டலஸ் அழகப்பெருமவுக்கும் உலக இளைஞர் மாநாட்டு ஏற்பாட்டுக் குழுவினருக்கும் இடையே விசேட கூட்டமொன்று நடைபெற்ற போதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

இளைஞர் விவகார திறன் அபிவிருத்தி அமைச்சும் தகவல் திணைக்களமும் இணைந்து இந்த முதல் நாள் தபால் உறையை வெளியிடுகின்றது.

இளைஞர்கள் தொடர்பாக ஒரு மாபெரும் மாநாடு ஆசிய வலய நாட்டில் நடத்தப்படுவது இதுவே முதல் தடவை என்பதால் இதற்கு சரித்திர முக்கியத்துவம் பெற்றுக் கொடுக்க வேண்டும் என்பதாலேயே தபாலுறையை வெளியிட உத்தேசிக்கப்பட்டுள்ளதாக 'அமைச்சர் தெரிவித்துள்ளார்.

முதல் நாள் தபால் உறையை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வெளியிட்டு வைக்கவுள்ளார். (2)



வடமாகாண ஆளுநரின் நிதியில் இருந்து வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்குடன் 10 பயனாளிகளுக்கு ப்பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா மற்றும் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி இணைந்து தையல் இயந்திரம் வழங்குவதைப் படத்தில் காணலாம். (படம்:- என்.குமார்)

# இன்று ஒரு தகவல்

## காலநிலையை அறிவிக்கும் விலங்குகள்

துருக்மீனியாவில் அஷ்காபாத் நகரத்தில் ஒரு புவியியல் விஞ்ஞானி இருந்தார். அவர் ஒரு நாய்க்குட்டி வளர்த்தார். ஒரு நாள் முன்னிரவு ஒரு மேசைக்கு முன்னால் உட்கார்ந்து அந்த விஞ்ஞானி ஏதோ கணக்குப் போட்டுக் கொண்டிருந்தார்.

அவருடைய குழந்தை தொட்டிலில் தூங்கிக் கொண்டிருந்தது. அந்த நாய்க்குட்டியும் ஒரு மூலையில் படுத்து தூங்கிக் கொண்டிருந்தது. ஒரே அமைதி. அந்த நேரத்தில் திடீரென்று அந்த நாய்க்குட்டி துள்ளியெழுந்தது. நேராக அந்தக் குழந்தையிடம் ஓடியது.

அந்தக் குழந்தையை அது போட்டிருந்த சட்டையுடன் சேர்த்து கௌவிக் கொண்டு வாசல் பக்கமாக ஓடியது.

நாய்க்குட்டி குழந்தையை கௌவி தூக்க முடியுமா என்ற சந்தேகம் உங்களுக்கு வரலாம்.

நீங்க நம்ம ஊர் நாய்க்குட்டியையே பார்த்துப் பழக்கப்பட்டு விட்டீங்க. அதனால் நம்புவதற்கு சிரமப்படுகிறீர்கள். அந்த ஊரிலெல்லாம் வலிமையான பெரிய நாய்கள் உண்டு.

விஞ்ஞானி அதைப் பார்த்துவிட்டார். உடனே அந்த நாய்க்கு வெறி பிடித்துவிட்டது என்று முடிவு செய்துவிட்டார். தன்னுடைய கைத்துப்பாக்கியை எடுத்துக் கொண்டு ஓடிவந்தார். அவர் வெளியே வந்து நாய்க்குட்டி எங்கேயென்று தேடினார். அந்த நேரத்தில் அவருக்கு ஒரு அதிர்ச்சி காத்திருந்தது.

ஆம், அவருடைய வீடு பூமியதிர்ச்சி காரணமாக இடிந்து விழுந் தது. இப்பாடி பூமி அதிர்ச்சி உண்டாகப் போகிறது என்பது அந்த நாய்க்கு முன்பே தெரிந்து விட்டது. அதுதான் அந்தக் குழந்தையைத் தூக்கி கொண்டு வெளியே ஓடி வந்திருக்கிறது. அதன் மூலமாக அந்த குடும்பத்தையே காப்பாற்றியிருக்கிறது.

இந்தச் சம்பவம் நடப்பதற்கு மூன்று நாட்களுக்கு முன்பே சில பிராணிகளுக்கு இப்பாடி நடக்கப் போகிறது என்பது தெரிந்திருக்கிறது. ஆமாம். அந்த நகரத்தில் மூன்று நாட்களுக்கு முன்பே பாம்பு, பல்லியெல்லாம் வளையை விட்டு வெளியே வந்து விட்டன.

அதேபோல் அங்கேயிருந்த புறாவெல்லாம் பறந்து போய்விட்டதாம். இதேபோல்... யூகோஸ்லாவியாவிலுள்ள ஒரு நகரத்தில் மிருகக் காட்சி சாலையொன்று இருந்தது. அங்கு ஒரே கூச்சல் குழப்பம். அங் கிருந்த யானை,புலி,கரடி,பறவையெல்லாம் கத்த ஆரம்பித்தன.நீர்யானை அதற்கென்று போடப்பட்டிருந்த தடுப்பை தாண்டிக் குதித்து வெளியே வந்துவிட்டது. மறுநாள் தான் எல்லோருக்கும் விடயம் புரிந்தது. அடுத்த நாள் காலையில் அங்கே பூமியதிர்ச்சி உண்டாகிவிட்டது. இப்பொழுது என்ன நினைக்கிறீர்கள்?

இவற்றையெல்லாம் விலங்குகள் எப்படி முன்கூட்டியே புரிந்து கொள்கின்றன? அதுதான் படைப்பின் இரகசியம். அதைக் கண்டு பிடிப்பதற்குத்தான் மனிதன் ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கி றான். விஞ்ஞானிகளின் ஆராய்ச்சியெல்லாம் இருக்கட்டும். வீட் டுக்குள்ளேயே சில ஆராய்ச்சி செய்து பாருங்களேன். இப்பொழுது மழை வருமா வராதா என்று தெரிந்து கொள்ள வேண்டுமா? உடனே ஒரு பூனைக்குட்டிக்குப் பின்னால் போய் நின்று அது என்ன செய்கிறது என்று கவனியுங்கள். பூனைக்குட்டி தன் பாதத்தினால் சுவரில் கீறிக் கொண்டிருக்கும். அப்பாடிக் கீறினால் மழை வரும்.

சிலசமயம் பூனைக்குட்டி மல்லாந்து படுத்துக் கொண்டு பாதத்தை உயரே தூக்கும். அப்பாடியும் இப்பாடியும் புரளும். இப்பாடிச். செய்தால் அன்றைக்கு மழை இருக்காது. பறவைகள் -பிராணிகள் போன்றவற்றின் நடவடிக்கைகளை பார்த்துவிட்டு அதையெல்லாம் அடிப்படையாக வைத்துத்தான் காலநிலையை கண்டுபிடிக்கும் கருவிகளை கண்டுபிடித்திருக்கிறார்கள்.

சில நேரங்களில் வாத்து தன்னுடைய அலகை தனது இறகுகளில் புதைத்திருக்கும். அப்பாடிச் செய்தால் குளிர்காலம் வரப்போகிறது என்று அர்த்தம். பருவநிலை குளிராக மாறப் போகிறது என்பதற்கு இதுதான் அறிகுறி. சிட்டுக்குருவி சில நேரங்களில் புழுதியில் விழுந்து புரளும். சிறகுகளை படபடவென்று அடித்துக் கொள்ளும். அப்பாடிச் செய்தால் மழை வரப்போகிறது என்று அர்த்தம்.

ஒன்று மட்டும் நாம் நன்றாக தெரிந்து கொள்ள வேண்டும். இயற்கையின் சீற்றம் என்று சொல்கிறோமல்லவா! இயற்கை ஏன் நம்மீது கோபப்படுகிறது. இயற்கையை நாம் அனுசரித்துப் போவதில்லை. அதனால் கோபப்படுகிறது. காடுகளை அழிக்கக்கூடாது. விலங்குகளை கொல்லக்கூடாது. இயற்கையின் சமநிலைமையை கெடுக்கக்கூடாது.அதைப்புரிந்து கொண்டு வாழ்ந்தால் பூமியும் நடுங்காது. நாமும் நடுங்க வேண்டிய அவசியமில்லை. ஒருத்தர் சாராயக் கடைக்குப் போய் நிறையக் குடித்தார். அதன்பின்னர் சொன்னார். இது ரொம்ப அற்புதமான சரக்கு போலிருக்கிறது. உள்ளே போனவுடன் இந்த பூமியே நடுங்குவது போலிருக்கிறது என்றார். இதற்கு கடைக்காரர் சொன்னார் நீங்கள் குடித்தது வெறும் தண்ணீர் தான். ஆனால் இப்ப ஏற்பட்டிருப்பது பூமி அதிர்ச்சி என்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் ஒருங்கமைப்பில் விவசாயிகளுடனான தொடர்பாடல் நிகழ்வு- சிறப்புக் கட்டுரை

(கடந்த வாரத் தொடர்ச்சி)

தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் தொண்டைமானாற்றில் நடைபெறும் உயிர்சூழலியல் மாற்றங்களை அவதானிக்கும் நிலையமாகவேனும் மாற வேண்டும். அதற்கான ஆய்வுகூட வளங்கள் பெருக்கப்பட வேண்டும். குளத்தை கட்டியவர்கள் எதனையும் எதிர்பார்த்து கட்டவில்லை. பல ஆண்டுகளுக்கு முன்பு தண்ணீரை சேமிக்க கட்டினார்கள். நாம் டும். ஆனால் அந்த பக்குவம் எம்மவர்களுக்கு இல்லை. மாற்றம் வேண்டும் என்பதை நாம் நடப்பு இயற்கை நிகழ்வுகளிலிருந்து அவதானிக்கவும் வேண்டும். கற்றுக்கொள்ளவும் வேண்டும்.

கிடைக்கின்ற மழை நீரை இயன்றளவு தேக்கிவைக்க வழிசெய்தல் வேண்டும். தேக்கும்போது நுளம்பு பெருகி நோய்வராமலும் பார்க்க வேண்டும். நன்னீர் கடலில் கலக்காது சேமிக்க வேண்டும். வழுக்கை வழிசெய்து கொடுப்போம். நீரை சேமிப்பது பற்றியும் அதற்கான பொறிமுறைகளையும் முடுக்கிவிடவேண்டும்.

கோடைகாலங்களில் குளங்களின் அடியில் படிகின்ற மண்ணை அகற்றுவதை தொடர்ந்து செய்யும் அதே நேரத்தில் குளங்களின் புனரமைப்பும் வாய்க்கால்களின் புனரமைப்பும் அப்பகுதி மக்களின் பங்குபற்றலுடன் செய்யப்பட வேண்டும். நீரின் அவசியத்தை இன்னும் மக்களுக்கு உணர



## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 52-III

அந்த தண்ணீரை வர்த்தகமாக்கி அரசியல் கருப்பொருளாக ஆக்கியிருப்பது நமக்கு நாமே தோண்டிக்கொள்ளும் குழியே தவிர வேறெதுவுமில்லை. ஆனால் அந்த குழிக்குள் நாம் அருந்துவற்கு கூட நன்னீர் கொஞ்சமும் இருக்காது.

யாழ்ப்பாண குடாநாட்டின் நன்னீரின் அளவு அங்கிருக்கும் நன்னீர் வில்லையின் அளவில் தங்கியிருக்கின்றது. இருக்கின்ற குறிப்பிட்ட அளவு நீரை நாம் கவனமாக பயன்படுத்த தவறினால் யாழ்ப்பாண குடாநாடு பாலைவனமாகிவிடும் என பல ஆய்வாளர்கள் பலவிடங்களில் கூறியிருக்கின்றார்கள்.

யாழ்ப்பாண குடாநாடு மட்டுமல்ல பரந்தன் இன்னும் வன்னிப்பகுதியின் பல இடங்களில் நீரின் கிடைதன்மையின் அளவு மாற்றமடைந்திருக்கின்றது. ஆய்வாளர்களின் கருத்துக்களை சிறிதும் கவனத்திற்கெடுத்ததாற்போல தெரியவில்லை. நமது வருங்கால சந்ததிக்கு என்ன வளத்தை விட்டுவைத்து செல்லப்போகின்றோம். காய்ந்து சுருண்ட இம்மண்ணில் இருக்கின்ற வளத்தையும் அழியவிட்டு என்ன அபிவிருத்தியை செய்யப்போகின்றோம்.

தமிழ்நாட்டில் காவிரியில் நீர் வரவில்லையென்றால் தஞ்சாவூரில் நெல்வயல்களெல்லாம் சவுக்கு வயல்களாக மாறிவி யாற்றில் அணைகள் செப்பனிடப்பட்டு வரப்புகள் மீளமைக்கப்பட்டு கடல் நீர் உட்புகுவதை அணைதிருத்தி தடுத்ததால் அங்குள்ள கிணறுகள் நன்னீராக மாறுகின்றது. சுன்னாகம் பகுதியில் நெல்வயல்களில் தொல்லையாகவிருந்த மண்கறையானின் பிரச்சினை முடிவுக்கு வந்தது.

ஆனால் மீண்டும் மழைபொய்த்து குளங்களில் ,வாய்க்கால்களில் நீர் இல்லாத போது பழையபடி இப்பிரச்சினை எழுந்துள்ளது. நீரை சிக்கனமாக பயன்படுத்த மக்களுக்கு போதிக்க வேண்டும். இதற்கான பல திட்டங்களை நீர்ப்பாசன திணைக்களம் கொண்டிருந்தாலும் அவர்களின் ஆளணியை, வசதிவாய்ப்புக்களை இன்னும் பலப்படுத்தி நீரை சேமிப்பதற்கான வழிமுறைகளை இன்னும் மக்கள் மயப்படுத்த மாகாண அமைச்சு நீர்ப்பாசன அமைச்சுடன் கலந்தாலோசித்து முன்னெடுக்க வேண்டும்.

போரின் வடுக்களைச் சுமந்து இன்னும் அவலப்பட்டுக் கொண்டிருக்கும் மக்கள் தமது வாழ்வாதாரத்தை கட்டியெழுப்ப நாம் இப்போது முன்னுரிமை கொடுக்க வேண்டும். அனைத்தையும் இழந்து நிர்க்கதியாகியிருக்கும் மக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதை முக்கியப்படுத்தி அவர்களுக்கு வேண்டிய நீரை பெற வைப்பது நல்லது.

மாணவர்களின் மத்தியில் நீரை சேமிப்பதற்கான அறிவை செறிவாக ஊட்ட வேண்டும். இப்போது வரட்சியிருப்பினும் சிலவேளைகளில் மழை அதிகம் பெய்து வெள்ளமும் ஏற்படலாம். பெய்ய மறுத்த மழையனைத்தும் ஒன்று சேர்ந்து ஒரேயடியாக பெய்துவிட்டால் அதனை தாங்கும் சக்தி வடபகுதிக்கு இல்லை என்பதனை கவனத்திற்கொள்க. வெள்ள அனர்த்தத்தை முகாமைப்படுத்த தகுந்த வடிகாலமைப்புக்கள் இன்னும் இல்லை.

இதனை முழுமையாக நிறைவேற்றினாலன்றி இந்த பிரச்சினையை நாம் எதிர்கொள்ள வேண்டிவரும். வடிகாலமைப்பு சபையின் ஆலோசனையின்படி வடிகாலமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படுவது அவசியம். நீரின் தன்மை மாற்றமடையாது பயிர்ச்செய்கை முறைகளில் மாற்றங்களை ஏற்படுத்தலாம். சொட்டு நீர்ப்பாசனம் மற்றும் தூறல் நீர்ப்பாசனம் ஆகிய தொழில்நுட்பங்களை விவசாய பெருமக்கள் பயன்படுத்த இன்னும் ஊக்கமளிக்க வேண்டும். பானை முறை நீர்ப்பாசனம் மற்றும் ஏனைய முறைகளையும் விவசாய திணைக்களத்தின் அனுசரணை பெற்று மக்களுக்கு இன்னும் விளக்க பரவலாக முயற்சிக்க வேண்டும்.

பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

நீரை வினைத்திறனாக பயன்படுத்தும் இலகு எளியதொழில்நுட்பங்களை கண்டுபிடிக்க மாணவர்களையும் ஆய்வாளர்களையும் ஊக்கமளிக்க வேண்டும்.

பசுமையின் பக்கத்தை திறந்து பார்த்தால் அங்கே நீரின் முக்கியத்துவம் புரியும். மாணவர்களுக்கு பசுமை விருதுகள் வழங்கி பெருமைப்பட்டுக்கொண்ட ஜங்கரநேசனின் கைகள் இந்த விடயத்திற்கும் நிச்சயமாக முன்னுரிமை கொடுக்கும் என எதிர்பார்க்கலாம்.

நீரை சிக்கனமாக சேமிக்கும், பயன்படுத்தும் முறைகளை கண்டுபிடிக்கும் மாணவர்கள், ஆய்வாளர்களுக்கு மாகாண அமைச்சினூடாக ஊக்கமளிக்கவேண்டும். எம்மவர்களை நாமே ஊக்கமளிப்பது இல்லை என்பதனை பசுமை விருது கொடுத்து மாற்றிக்காட்டியவர் இந்த விடயத்திலும் கவனஞ்செலுத்துவார் என நிச்சயமாக நாம் எதிர்பார்ப்போம். (முற்றும்)

# மூன்று இலங்கையர்களுக்கு ஆயுள் தண்டனை விதிப்பு

(கொழும்பு)

மூன்று இலங்கைப் பிரஜைகளுக்கு இந்திய நீதிமன்றம் ஆயுள் தண்டனை விதித்துள்ளது..

சக அகதி ஒருவரை படுகொலை செய்த குற்றத்திற்காக இவ்வாறு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது, 2009 ஆம் ஆண்டில் இந்த கொலை இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

2009 ஆம் ஆண்டு கோட்டப்பட்டு அகதி முகாமில் இந்த படுகொலைச் சம்பவம் இடம்பெற்றதாகவும், குற்றச் செயலுடன் தொடர்புடைய மூவருக்கு அயுள் தண்டனை விதிப்பதாகவும் நீதவான் பூர்ணிமா அறிவித்துள்ளார்.

ஜெயரூபன், ராஜகோபல் மற்றும் ரகுநேசன் ஆகியோருக்கே இவ்வாறு தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. குறித்த நபர்களுக்கு தலா இரண்டாயிரம் அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது. (2)

# மூத்த ஆதிவாசி தலைவர் 114 ஆவது வயதில் காலமானார்

(கொழும்பு)

நான்கு தலைமுறைகளின் 105 பேர் பேர்த்திகளை கண்ட இலங்கையின் மூத்த ஆதிவாசி தலைவர் தனது 114 ஆவது வயதில் காலமானார்.

தெய்யத்தகண்டிய ஹென்னானிகல ஆதிவாசிகளின் முன்னாள் தலைவரான தலாவரிகே களுஅப்பு நேற்று முன்தினம் உயிரிழந்தார்.

14 பிள்ளைகளின் தந்தையான இவர் நான்கு தலைமுறைகளை கண்ட 104 பேரின் கொள்ளு பாட்டனார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவரது இறுதிக்கிரியைகள் இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தமண ஆதிவாசி கிராமங்களில் வசித்து வந்த இவர் முன்னாள மகாவலி அபிவிருத்தி அமைச்சர் காமினி திஸாநாயக்கவின் கோரிக்கையை ஏற்று மகாவலி காணியை பெற்று ஹெனானிகல பிரதேசத்திற்கு சென்று குடியேறினார்.

தமண பிரதேசத்தில் வேட்டையாடி வாழ்ந்து வந்த ஆதிவாசிகளை காமினி திஸாநாயக்க விவசாயத்தில் ஈடுபட செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-11)

# மக்கள் பிரச்சினைக்கு தீர்வுகாண போராட்டங்கள் முன்னெடுக்க வேண்டும்

## அமைச்சர் வாசு தெரிவிப்பு

(கொழும்பு)

மக்கள் பிரச்சினைக்கு தீர்வு காண பாரியளவில் போராட்டம் நடத்தப்பட வேண்டுமென தேசிய மொழிகள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

மருதானையில் நடைபெற்ற மே தினக் கூட்டத்தில் கலந்து கொண்ட போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

மக்களின் எரியும் பிரச்சினைகளுக்கு அரசாங்கத்தை கவிழ்ப்பதன் மூலம் தீர்வு காண முடியாது. நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிக்க வேண்டும். நாடாளுமன்றிற்கு பொறுப்பு சொல்லக் கூடிய ஆட்சி முறைமை உருவாக்கப்பட வேண்டும். இதற்காக அனைத்து மக்களும் ஒன்றிணைந்து போராட்டம் நடத்த வேண்டும்.

இன, மத, மொழி, பிரதேச பேதமின்றி நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இரத்துச் செய்ய ஒன்றிணைந்து கொள்ள வேண்டும்.

அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்க வேண்டுமாயின் நாடு தழுவிய ரீதியில் வேலை நிறுத்தப் போராட்டம் ஒன்றை முன்னெடுக்க வேண்டும். அதிகளவான மக்கள் போதிய வருமானமின்றி அவதியுறுகின்றனர்.

ஒரு குறிப்பிட்ட சிறு தொகுதி சமூகமொன்று பொருளாதார நலன்களை அனுபவித்து வருகின்றது என வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார். (2)

# உர விநியோகத்தை இலகுவாக்க உரக் களஞ்சியங்கள் நிர்மாணிப்பு

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் மஹிந்த சிந்தனை வேலைத் திட்டத்திற்கமைய விவசாயிகளுக்கான உர விநியோக நடவடிக்கைகளை இலகுபடுத்துவதற்காக பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் உரக்களஞ்சியங்கள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன.

ஒவ்வொரு கமநல சேவை நிலையங்களை மையப்படுத்தியதாக இந்த உரக் களஞ்சியங்கள் சுமார் இருபத்தைந்து இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டு வருவதாக கமநல சேவை பணிப்பாளர் நாயகம் எஸ்.எச். வீரசிங்ஹ தெரிவித்தார். இக்களஞ்சியங்களில் பெரும்பாலானவை நீர்ப்பாசன திணைக்களத்திற்கு சொந்தமான நிலங்களில் திணைக்களத்தின் அனுசரணையில் அமைக்கப்படுகின்றன.

இதன்மூலம் விவசாயிகள் தமது வயல் நிலங்கள் அமைந்துள்ள பகுதிகளிலேயே உரத்தை பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கும்.

இதனால் விவசாயிகள் போக்குவரத்து பிரச்சினைகளுக்கு தீர்வு கிட்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நைஜீரியாவில் குண்டு தாக்குதல் 19 பேர் உயிரிழப்பு

ஆபிரிக்க நாடான நைஜீரியாவில் போகோஹாரம் தீவிரவாதிகள் அரசுக்கு எதிராக செயற்பட்டு வருகின்றனர். நேற்றுமுன்தினம் தலைநகர் அபுஜாவில் கார்குண்டு தாக்குதல் நடத்தினார்கள்.

அங்கு பொலிஸ் சோதனை சாவடி அருகே பேருந்து நிலையம் உள்ளது. நேற்று முன்தினம் ஒரு மர்ம நபர் காரை நிறுத்தி விட்டு அங்கிருந்து மாயமானார்.

அதை தொடர்ந்து அக்கார் திடீரென வெடித்து சிதறியது. இதனால் அப்பகுதி முழுவதும் அதிர்ந்தது. இச்சம்பவத்தில் 19 பேர் அதே இடத்தில் உடல் சிதறி பலியாகினர்.

60 பேர் காயம் அடைந்தனர். தகவல் அறிந்ததும் பொலிசார் அங்கு விரைந்து வந்து மீட்பு பணியில் ஈடுபட்டனர். இத்தாக்குதலுக்கு இதுவரை எந்த தீவிரவாத அமைப்பும் பொறுப்பு ஏற்கவில்லை.

ஆனால் போகோஹாரம் தீவிரவாதிகள் இத் தாக்குதலை நடத்தியிருக்கலாம் என கருதப்படுகிறது.

# உக்ரைனில் கட்டாய இராணுவ சேவை; ஜனாதிபதி உத்தரவு நிறைவேற்றியது

(கீவ்)

உக்ரைனில் பாதுகாப்பு திறன்களை அதிகரிக்கும் விதத்தில் கட்டாய இராணுவ சேவையை வலியுறுத்தி ஜனாதிபதிக்கு பரிந்துரை செய்யும் தீர்மானம் நிறைவேறியது.

கடந்த ஆண்டுதான் இந்த கட்டாய சேவை இரத்து செய்யப்பட்டது. இப்போது ரஷ்யா நெருக்கடியிலிருந்து மீள்வதற்காக உடனடியாக கட்டாய இராணுவ சேவையை அமுலுக்கு கொண்டுவருவதாக நேற்றுமுன்தினம் அந்நாட்டு ஜனாதிபதி உத்தரவு பிறப்பித்தார்.

உக்ரைனின் ஆயுதப்படையில் மொத்தம் ஒரு இலட்சத்து 30 ஆயிரம் வீரர்கள் உள்ளனர். இருப்பு வீரர்களையும் சேர்த்து இந்த எண்ணிக்கை 10 இலட்சமாக கணக்கிடப்படுகின்றது.


இவற்றுடன் மேற்கத்திய ஆதரவும் இருப்பினும் அரசு அதிகாரிகளால் நிலைமையை சமாளிக்க முடியாததால் இந்த புதிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதியின் அறிக்கை தெரிவித்துள்ளது.

முன்னாள் சோவியத் ரஷ்யாவிலிருந்து பிரிந்து தனித்து செயற்பட்டுவந்த உக்ரைன் பொருளாதார மேம்பாட்டிற்காக கடந்த ஆண்டு இறுதியில் ஐரோப்பிய ஒன்றியத்துடன் இணைய முடிவெடுத்தது.

இந்தத் திட்டம் ரஷ்ய சார்பு ஜனாதிபதி விக்டர் யனுகோவிச்சால் தடைபட அவரது அரசு கலைந்து இடைக்கால ஜனாதிபதியாக ஒலெக் சாண்டர் டுர்ச்சினோவ் நியமிக்கப்பட்டார்.

இம்மாதம் 25 ஆம் திகதி அங்கு பொதுத் தேர்தல் நடத்துவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுவரும் வேளையில் உக்ரைனின் கிழக்குப் பகுதியில் ரஷ்யாவுடன் இணைவதற்கான போராட்டங்கள் அதிகரிக்கத் தொடங்கியுள்ளன.

கிழக்குப் பகுதியில் உள்ள பன்னிரெண்டுக்கும் மேற்பட்ட நகரங்களில் ரஷ்ய சார்பு ஆர்ப்பாட்டக்காரர்கள் அரசு அலுவலகங்களைக் கைப்பற்றிக் கொண்டு ரஷ்யாவுடன் இணைய வாக்கெடுப்பு நடைபெற வேண்டும் என்ற தங்களின் கோரிக்கையினை வலியுறுத்தி வருகின்றனர்.



ரஷ்யாவே இந்தத் திட்டத்தின் பின்னணியாக செயற்பட்டு வருவதாகக் கருதும் அமெரிக்கா உள்ளிட்ட மேற்கத்திய நாடுகள் உக்ரைனுக்கு ஆதரவாக பாதுகாப்பு, பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன. ரஷ்யா மீதும் இந்நாடுகள் பல பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளன.




துருக்கியின் அங்காரா நகரில் நடைபெற்ற மே தினக் கொண்டாட்டத்தில் கலந்துகொண்டவர்களுக்கும் மற்றும் பொலிசாருக்கும் இடையே கடும் மோதல் நிகழ்ந்தது. கலவரக்காரர்களை ஒடுக்க பொலிசார் தண்ணீர் பாய்ச்சியடித்தும் மற்றும் புகைக்குண்டுகளை வீசியும் கலைப்பதனை படத்தில் காணலாம்.

## சிரியாவில் விமானத் தாக்குதல்

### 33 பேர் உயிரிழப்பு!

(டமாஸ்கஸ்)

விரைவில் ஜனாதிபதி தேர்தலை எதிர்நோக்கியுள்ள சிரியாவில் தேர்தலை சீர்குலைக்கும் நோக்கில் போராளிகள் அதிரடி தாக்குதலில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்களை தடுக்கும் நோக்கத்தில் அரசுப் படைகள் ஆங்காங்கே போர் விமானங்கள் மூலம் குண்டு மழை பொழிந்து தாக்குதல் நடத்துவதில் பல அப்பாவி மக்களும் கொல்லப்பட்டு வருகின்றனர்.



இந்நிலையில், போராளிகளின் கட்டுப்பாட்டில் இருக்கும் அலெப்போவின் வடகிழக்கு பகுதியில் உள்ள ஹலக் சந்தைக்கு மேலே நேற்றுமுன்தினம் பறந்த போர் விமானங்கள் நடத்திய ஏவுகணை தாக்குதல்களில் 33 பேர் கொல்லப்பட்டனர்.

நூற்றுக்கும் அதிகமானவர்கள் படுகாயங்களுடன் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

போராளி குழுக்களுடன் சிரிய அரசு ஜெனீவாவில் நடத்திய 2 சுற்று சமாதானப் பேச்சுவார்த்தை எவ்வித முன்னேற்றமும் இன்றி தோல்வியில் முடிந்ததையடுத்து, அங்கு தீவிரவாதிகளை களையெடுக்க அரசுப் படைகளும், அரசுப் படைகளை பழிவாங்க போராளிக் குழுவினரும் மாறி, மாறி தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

## சிரியாவில் விஷக்குண்டு தாக்குதல் ஒருவர் பலி; எழுபது பேர் காயம்!



(டமாஸ்கஸ்)

சிரியாவில் ஜனாதிபதி பஷர் அல் ஆசாத்துக்கு எதிராக கடந்த 3 ஆண்டுகளாக உள்நாட்டு போர் நடைபெறுகிறது.

அரசுக்கு எதிராக போராடும் கிளர்ச்சி படை வசம் சில நகரங்கள் உள்ளன.

அவற்றை கையகப்படுத்தும் நடவடிக்கையில் இராணுவம் ஈடுபட்டுள்ளது.

அதற்காக அந்நகரங்கள் மீது விஷ குண்டுகளை இராணுவம் வீசி தாக்குதல் நடத்தி வருகிறது.

சமீபத்தில் இட்லிப், ஹமா மாகாணங்களில் இது போன்று தாக்குதல் நடத்தியது. அதில் பலர் பலியானார்கள்.

இதற்கு ஐ.நா.உள்ளிட்ட சர்வதேச நாடுகள் கண்டனம் தெரிவித்தன.

ஆனால் அதை சிரியா மறுத்துள்ளது. இந்த நிலையில் மீண்டும் விஷகுண்டு தாக்குதல் நடத்தியுள்ளது. வீடியோ மூலம் அம்பலமாகியுள்ளது.

கிளர்ச்சியாளர்கள் பிடியில் உள்ள இட்லிப் மாகாணத்தில் அல் தமனாக் நகரின் மீது ஹெலிகொப்டர் 2 விஷகுண்டுகளை வீசியது. அவை குளோரின் காசை வெளியேற்றியது.

இத்தாக்குதலில் ஒருவர் பலியானார். 70 பேர் காயம் அடைந்தனர். அந்த வீடியோ காட்சிகள் சமீபத்தில் வெளியிடப்பட்டன. அதே நேரத்தில் ரஷ்ய வெளியுறவு அமைச்சகம் ஒரு அறிக்கை வெளியிட்டுள்ளது.

இதற்கு முன்பு கப்ரா ஷதா மற்றும் தல் மைனானங் கிராமங்களில் அல் கொய்தா தீவிரவாதிகள் விஷகுண்டு தாக்குதல் நடத்தியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அமெ. இராணுவ இருப்பை அதிகரிக்க அழைப்பு விடுக்கிறது ருமேனியா

(புகாரெஸ்ட்)

முன்னாள் கம்யூனிச நாடான ருமேனியா கடந்த 2007 ஆம் ஆண்டில் ஐரோப்பிய ஒன்றியத்துடன் இணைந்தது. மேலும், பத்து வருடங்களுக்கு முன்னர் இந்நாடும் இதன் தெற்குப் பகுதியில் உள்ள பல்கேரியாவும் நேட்டோ அமைப்பிலும் இணைந்து செயற்பட்டு வருகின்றன.

ஈராக் மற்றும் ஆப்கானிஸ்தானில் தற்போது நிலைநிறுத்தப்பட்டுள்ள நேட்டோ துருப்புகளில் அமெரிக்க இராணுவத்தின் கீழ் இவ்விரு நாடுகளின் வீரர்களும் பாதுகாப்பு நடவடிக்கைகளில் செயலாற்றி வருகின்றன. உக்ரைனின் ஒரு பகுதியான கிரிமியாவை அமெரிக்கா உள்ளிட்ட மேற்கத்திய நாடுகளின் பலத்த எதிர்ப்பிற்கிடையே ரஷ்யா தன்னுடன் இணைத்துக்கொண்டது.

இதற்கான பொருளாதாரத் தடைகளை மேற்கத்திய நாடுகள் விதித்தபோது அவற்றில் ருமேனியாவும் துடிப்புடன் செயற்பட்டது.



ரஷ்யாவின் கருங்கடல் பகுதியிலான இராணுவ நடவடிக்கைகள் அதிகரித்துவருவது தங்களுடைய அண்டை நாடான ரஷ்ய மொழி பேசும் சிறுபான்மையினர் வசிக்கும் மால்டோவாவை ரஷ்யா குறிவைக்கக்கூடும் என்ற கருத்தை ருமேனியாவிடம் ஏற்படுத்தியுள்ளது.

ஏற்கனவே அமெரிக்கா நடத்தும் கருங்கடல் பகுதி இராணுவ ஒத்திகையில் இணைந்து பயிற்சிகளைப் பெறும் ருமேனியா அந்தப் பகுதிக்கான அமெரிக்காவின் இராணுவ இருப்பை அதிகரிக்குமாறு கோரியுள்ளது. ருமேனியாவின் ஜனாதிபதி டிரையன் பசெஸ்கு ரஷ்யாவின் இராணுவ நடவடிக்கைகளை முன்னிட்டு நேட்டோவின் இராணுவ வளங்களை மீண்டும் நிலைப்படுத்துமாறு கடந்த சில மாதங்களாக அழைப்பு விடுத்து வருகின்றார்.

மேலும், கடந்த திங்கட்கிழமை அன்று நடைபெற்ற பாராளுமன்றக் கூட்டம் ஒன்றில் அந்நாட்டின் பிரதமர் விக்டர் போன்டா நாட்டின் பாதுகாப்பிற்கான இந்த ஆண்டின் பட்ஜெட் தொகை அந்நாட்டுப் பண மதிப்பில் 700 மில்லியனாக உயர்த்தப்படும் என்று அறிவித்துள்ளார்.

இது அந்நாட்டின் மொத்த தேசிய உற்பத்தியில் 0.2 சதவிகிதமாகும். இதனைத் தொடர்ந்து நேற்றுமுன்தினம் வெளியுறவுத்துறை அமைச்சர் டைடஸ் கார்லயன் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில், கருங்கடல் பகுதியில் ஒரு மேம்பட்ட நீண்டகால அமெரிக்க இராணுவ இருப்பின் முக்கியத்துவத்தை வலியுறுத்தியுள்ளார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மினி சூறாவளி அழிவுக்கான இழப்பீடுகள் விரைவில்



(மன்னார்)

மன்னார் சின்னப்பண்டி விரிச்சான் பகுதியில் மினி சூறாவளி அழிவுகளுக்கான இழப்பீடுகளை விரைவாக வழங்க நடவடிக்கை எடுக்குமாறு வட மாகாண போக்குவரத்து அமைச்சர் டெனீஸ்வரன், பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் வலியுறுத்தியுள்ளனர்.

குறித்த பகுதியில் கடந்த ஏப்ரல் மாதம் 29 ஆம் திகதி வீசிய மினி சூறாவளியினால் மக்களின் வீட்டுக்கூரைகள், வாழைத்தோட்டங்கள் என்பன சேதமடைந்தன. இந்நிலையில் மக்கள் சேதமடைந்த வீடுகளிலேயே வசித்து வந்தனர்.

எனினும் சேதம் தொடர்பில் அனர்த்த முகாமைத்துவ அதிகாரிகளோ, அரச அதிகாரிகளோ எவ்வித அக்கறையும் காட்டவில்லை.

இதையடுத்து இப்பகுதி மக்களால் வடமாகாண போக்குவரத்து அமைச்சருக்கு தகவல் வழங்கப்பட்டது.

இதன்பின்னர் குறித்த பகுதிக்கு சென்ற அமைச்சரும், பாராளுமன்ற உறுப்பினரும் அழிவுகளைப் பார்வையிட்டதுடன் விரைவாக இழப்பீடுகளை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அரச அதிகாரிகளுக்கு தெரிவித்துள்ளனர். (9-4-6)

# வரட்சியால் சிறுபோகம் முற்றாக கைவிடப்பட்டது

(பூநகரி)

பூநகரி சின்ன பல்லவராயன் கட்டுக்குள நீர்ப்பாசன திட்டத்தின் கீழ் இவ் வருடத்திற்கான சிறுபோகச் செய்கை முற்றாக கைவிடப்படுவதாக நேற்று இடம்பெற்ற கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேற்குறித்த குளத்தின் கீழ் சிறுபோகத்தை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கான கூட்டம் நேற்றைய தினம் கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் செ.ஸ்ரீநிவாசன் தலைமையில் முக்கொம்பன் பொது நோக்கு மண்டபத்தில் நடைபெற்ற போதே இவ்வருடசிறுபோகம் கைவிடப்படுவதாக தெரிவிக்கப்பட்டது.

எனினும் சிறுபோகச்செய்கை நிறுத்தப்படும் அதேவேளை சிறு தானியச்செய்கை மட்டுப்படுத்தப்பட்டளவில் மேற்கொள்ளப்படவுள்ளது.

இந்நிலையில், சிறு தானியச் செய்கைக்கு தலா 1/2 ஏக்கர் வீதம் நிரந்தரமாகவுள்ள 48 விவசாயிகளுக்கு மட்டுமே நீர் வழங்கப்படவுள்ளது.

சிறுதானியச் செய்கைக்கான கௌபி, பயறு, உழுந்து முதலான தானியங்களை அரச சார்பற்ற நிறுவனங்கள் வழங்கவுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டது.

இக்கூட்டத்தில் நீர்ப்பாசன பொறியிலாளர், கமநலசேவை அலுவலர், கிராம சேவையாளர்கள், கமக்கார அமைப்புக்கள் எனப்பலர் கலந்து கொண்டனர்.

பூநகரி சின்ன பல்லவராயன் கட்டுகுள நீர்ப்பாசன திட்டத்தினூடாக கடந்த வருடம் 450 ஏக்கர் சிறுபோக நெற் செய்கை மேற்கொள்ளப்பட்ட நிலையில் இவ்வருடம் ஏற்பட்ட கடும் வரட்சியினால் சிறு போகம் கைவிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (9-84)

## மஹோற்சவம்

(பூநகரி)

பூநகரிசிட்டிகுறிச்சிதிகிரிவிநாயகர் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் நாளை மறுதினம் திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

பத்து நாட்கள் இடம்பெறவுள்ள மஹோற்சவத்தில் 13 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் புதன்கிழமை தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறவுள்ளதாக ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (9-84)

## விசுவமடு மத்திய நூலகத்தில் இரவல் வழங்கும் சேவை ஆரம்பம்

(கண்டாவளை)

விசுவமடு மத்திய நூல் நிலையத்தில் நூல்கள் இரவல் வழங்கும் சேவை இவ்வருடம் முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

யுத்தத்தினால் முற்றாக அழிவடைந்த குறித்த நூலகம் பின்னர் 2011 ஆம் ஆண்டு முதல் புனரமைக்கப்பட்டு இயங்கி வருகிறது. இந்நிலையில் இவ்வருடம் முதல் நூல்களை இரவல் வழங்கும் சேவையை ஆரம்பித்துள்ளது.

இதனூடாக கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள உழவனூர், பிரமந்தனாறு, கண்ணகிநகர், குமாரசுவாமிபுரம், கல்லாறு போன்ற கிராமங்களும் முல்லை.மாவட்டத்திலுள்ள நெத்தலி ஆறு, விசுவமடு, றெட்பானா, வள்ளுவர்புரம் போன்ற கிராமங்களும் பயனடைந்து வருகின்றன. (9-263)






தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் கிளிநொச்சி மாவட்டத்திற்கான மே தின நிகழ்வு அக்கராயன் ஸ்கந்தபுரம் பிரதேச சபை வளாகத்தில் இடம்பெற்ற போது... (படங்கள்:சிவநகர் செய்தியாளர்)

# கிளிநொச்சி மாவட்டத்தில் யுத்தத்தினால் 5646 பேர் கணவனை இழந்துள்ளனர்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் யுத்தத்தினால் கணவனை இழந்த பெண்கள் 5 ஆயிரத்து 646 பேர் உள்ளதாக மாவட்ட செயலர் றூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அத்தோடு இம்மாவட்டத்தில் ஆயிரத்து 888 பெண்கள் கணவனால் கைவிடப்பட்ட நிலையில் காணப்படுகின்றனர்.

இவ்வாறாகவுள்ள பெண்களின் குடும்ப வாழ்வாதாரத்தினை உயர்த்தும் பொருட்டு ஆடைத்தொழிற்சாலைகளிலும், தொழிற்பயிற்சி நிறுவனங்களிலும், கண்ணி வெடி அகற்றும்நிறுவனங்களிலும்இவர்கள் வேலைக்காக சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

தன்னார்வ தொண்டு நிறுவனங்களினால் வழங்கப்பட்ட சுயதொழில் உதவிகள், கடன் திட்டங்கள் ஊடாக தற்போது சுயதொழில்களை மேற்கொண்டு வருகின்றனர்.

யுத்தத்தின் பின்னர் கிளிநொச்சி மாவட்டத்தில் மீள்குடியேறியுள்ள ஒரு இலட்சத்து 32 ஆயிரத்து 513 பேரில் 12 ஆயிரத்து 756 பேர் முதியோர்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (9-4)

# ஆபத்தாகவுள்ள கட்டடத்தை அகற்ற நடவடிக்கை எடுக்குக

(கண்டாவளை)

தர்மபுரம் பொதுச்சந்தை வளாகத்தினுள் ஆபத்தான நிலையிலுள்ள பழைய கட்டடத்தை அகற்றுமாறு வியாபாரிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கரைச்சி பிரதேச சபையின் ஆளுகையின் கீழுள்ள இப்பொதுச்சந்தையின் வளாகத்தினுள் 35 வருடகால பழைமை வாய்ந்த கட்டடம் ஒன்று சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றது. இக்கட்டடம் ஆரம்ப காலத்தில் மரக்கறி சந்தையாக பயன்பட்டுள்ளது. எனினும் யுத்தத்தின் போது சந்தை சேதமடைந்தமையினால் தற்போது புதிதாக கடைத்தொகுதிகளுடன் கூடிய பொதுச்சந்தை அமைத்து மக்கள் பாவனைக்கு விடப்பட்டுள்ளது.

ஆயினும் சந்தை வளாகத்தினுள் சேதமடைந்த கூரை மற்றும் தூண்களுடன் இடிந்து விழக்கூடிய அபாய நிலையிலுள்ள இப் பழைய கட்டிடம் அகற்றப்படவில்லை.

இதனையடுத்து சந்தை வியாபாரிகளினால் குறித்த கட்டடத்தை அகற்றி தருமாறு சம்பந்தப்பட்டோரிடம் தெரியப்படுத்தியும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

எனவே ஆபத்தான நிலையிலுள்ள குறித்த கட்டடத்தை அகற்றுமாறு வியாபாரிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (9-263)

# தண்ணீரூற்று பொதுச்சந்தை இவ்வருட இறுதிக்குள் புனரமைப்பு



(முல்லைத்தீவு)

தண்ணீரூற்று பொதுச் சந்தைக்கான மீள்கட்டுமானப் பணிகள் இவ்வருட இறுதிக்குள் ஆரம்பிக்கப்படுமென கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுதியளித்துள்ளது.

இச்சந்தை நீண்ட காலமாக புனரமைக்கப்படவில்லையென மக்களினால் வடமாகாண சபை உறுப்பினர் ரவிகரனிடம் முறையிடப்பட்டது.

இதையடுத்து, இச்சந்தையின் புனரமைப்பு தொடர்பில் உறுப்பினர் பிரதேச சபையிடம் கேட்ட போதே இவ்வருட இறுதிக்குள் பொதுச் சந்தை கட்டுமானப் பணிகள் ஆரம்பமாகும் என உறுதியளிக்கப்பட்டது.

அத்தோடு, கடந்த மாதம் திறப்பு விழா செய்யப்பட்டு மக்கள் பாவனைக்கு விடப்பட்டுள்ள முள்ளியவளை சந்தையில் சிறிய கடைகள் அமைத்தல், மீன் சந்தையின் சிறிய வேலைகள், வேலி அமைத்தல் போன்ற வேலைகள் பிரதேச சபையினரால் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. (9-6-250)

## நன்கொடைப் பணம்

பூநகரி பிரதேச சபையின் எல்லைக்குள் சிறப்பாக இயங்கும் சனசமூக நிலையங்களுக்கு பல வருடங்களாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வருடாந்த நன்கொடை கொடுப்பனவு மீண்டும் வழங்குவதற்கான நடவடிக்கையை பூநகரி பிரதேச சனசமூக நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் மேற்கொண்டுள்ளார்.

சிறந்த முறையில் இயங்கும் சனசமூக நிலையங்கள் கூட்டறிக்கைகளையும் வங்கி புத்தக போட்டோ பிரதியையும் கடந்த வருடங்களில் நன்கொடை வழங்கப்படாமையை உறுதிப்படுத்தும் கடிதத்தினையும் சனசமூக நிலைய நிர்வாகிகள் சன சமூக நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தருக்கு அனுப்பி வைக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (9-84)

## கால்நடை வைத்தியத்திற்கு கள உதவியாளர்கள் நியமிப்பு

(கண்டாவளை)

கண்டாவளை பிரதேச கால்நடை வைத்திய நிலையத்தின் சேவைகளை மேம்படுத்தும் நோக்கோடு 7 கள உதவியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இக்கள உதவியாளர்கள் வேல்ட் விசன் நிறுவனத்தினூடாக 2 வருட கால சேவைக்கென நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான கிராமங்கள் பிரிக்கப்பட்டு ஆயிரம் குடும்பங்களுக்கு ஒரு கள உதவியாளர் என்ற அடிப்படையில் 7 கள உதவியாளர்கள் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

இந்நியமனம் ஊடாக கால்நடை வைத்தியத்தைமேம்படுத்தல், செயற்கை முறை சினைப்படுத்தல் ஆகியவை மேற்கொள்ளப்படவுள்ளன. (9-263)

## குடிநீர் விநியோகம்

(கண்டாவளை)

கண்டாவளை பிரதேச செயலகத்தினூடாக வரட்சி நிலவும் இடங்களில் குடிநீர் விநியோகிக்கப்படவுள்ளது.

குடிநீர் விநியோகத்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்காக நீர் பாதுகாப்புகுழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

அத்தோடு வரட்சி நிலவுகின்ற தர்மபுரம், பிரமந்தனாறு, கல்லாறு, கண்ணகிநகர் போன்ற பல கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டு நீர்க் கொள்கலன்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் நாளை மறு தினம் திங்கட்கிழமை முதல் குடிநீர் விநியோகம் இடம் பெறவுள்ளது. (9-263)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

குறை யாருடையதாக இருந்தாலும் பொறுப்பு நம்முடையது.
~ ஸ்ரீ அரவிந்தர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## அந்தப் பசு மணியடித்தது இந்தப் பசு உயிர் துறந்தது

யாழ்ப்பாணம் கட்டைப்பிராய் எனும் இடத்தில் மின்சாரம் தாக்கி பசுவும் கன்றும் உயிரிழந்த செய்தி இதயம் உள்ள எவரையும் இரங்க வைக்கும். அந்தளவிற்கு பரிதாபகரமான உயிரிழப்பு அது.

மின்சாரத்தின் தாக்குதலுக்கு உள்ளான கன்று அம்மா என்று அலறியது. தன் பிள்ளையின் அழுகுரல் கேட்ட தாய்ப் பசு தன்பிள்ளைக்கு ஏதோ ஆபத்து என்றுணர்ந்து தன் கன்று இருக்கும் இடம் நோக்கி ஓடுகிறது.

பிள்ளையைக் காப்பாற்ற ஏக்கம் கொண்ட மூச்சுடன் ஓடிவரும் தாயின் வரவைக் காணாது உயிர் துறக்கிறது கன்று.

தாய்ப் பாசம் விடுமா என்ன? தன்பிள்ளைக்கு அருகில் ஓடிச் செல்கிறது பசு. அந்தோ! வல்வினை பசுவின் உயிரையும் பறிக்கிறது.

கன்றும் இறந்து பிள்ளையைக் காப்பாற்றச் சென்ற பசுவும் இறந்து போன செய்தி நெஞ்சத்தைப் பிளக்கிறது.

அம்மா என்று அழும் தன்பிள்ளையின் குரல் கேட்டால், தானும் அம்மா என்று கதறுவது தானே மாட்டினத்தின் மரபு.

ஆனால் இந்தப் பசு, அம்மா என்று அலறிய தன் பிள்ளையை நோக்கி ஓடியது ஏன்? இங்கு தான் பசுவின் பகுத்தறிவு பளிச்சிடுகிறது.

ஓ! இது யாழ்ப்பாணம். ஒரு பிள்ளை அம்மா என்று அலறினால் அது கடத்தலாக, துப்பாக்கிச் சூடாக, இனம் தெரியாதவர்களின் தாக்குதலாக இருக்கும்.

அதன்பின் அந்தப் பிள்ளையின் தாய், அழு கண்ணீராய் அலைவதுதான் விதியாகும். இதை வீதிகளில், மேய்ச்சல் நிலங்களில் நின்று பார்த்து நொந்து கொண்ட அந்தத் தாய்ப்பசு; தன் பிள்ளை அம்மா என்று கதறிய போது எப்படி நிம்மதியாக நின்று, பதிலுக்குத் தானும் அம்மா என்று குரல் கொடுக்க முடியும்.

அதனால்தான் தன் பிள்ளையின் அழுகுரல் கேட்கும் இடம் நோக்கி ஓடியது.

என் செய்வோம்! பொறுப்பற்ற செயல் பிள்ளையையும் தாயையும் காவு கொண்டது.

அன்று வீதிவிடங்கனின் தேர் மோதி உயிர் இழந்த தன் கன்றுக்காக தாய்ப்பசு மனுநீதிச் சோழ மன்னனின் மனை நோக்கிச் சென்று; தன் கொம்பினால் ஆராய்ச்சி மணியை இழுத்து அடித்து, மனுநீதிச் சோழனிடம் துயர் கூறி, நீதி கேட்டது.

நீதி கிடைக்கும் என்று தெரிந்ததால் அந்தப் பசு அப்படி நடந்து கொண்டது.

ஆனால் இந்தப் பசு எங்கு போய் மணி அடிக்கும்? யாரிடம் நீதி கேட்கும்? நீதிக்காக நீதியே ஏங்கி நிற்கும் எங்கள் நாட்டில் மணி அடித்து நீதிகேட்கப் போய் மாட்டிறைச்சிக் கடையில் தலைகீழாய்த் தொங்கும் பரிதாபநிலை எதற்கு?

ஆகையால் என் பிள்ளையை காப்பாற்றுவேன். இல்லையேல் நானும் உயிர் துறப்பேன் என்று உயிர் நீத்த கோமாதாவை அதன் பிள்ளையை தொட்டு வணங்கி எங்கள் ஆறறிவை நினைத்து அழுது முடிக்கின்றோம்.

தன் பிள்ளையைக் காப்பாற்றச் சென்று உயிர் நீத்த அந்தப் பசுவின் பண்பறிவு கண்டேனும் மாட்டிறைச்சிக் கடைக்கு மூடு விழாச் செய்யோமோ!

முடிந்தால் செய்யுங்கள்; எங்களுக்கும் இறைவன் விடிவு தருவான்.

# தமிழின அழிப்பை சர்வதேசத்திடம் கூட்டமைப்பு எடுத்துக் கூறியுள்ளது

## பொய்யுரைகளை நம்பாதீர்கள் என்கிறார் சுமந்திரன்

(யாழ்ப்பாணம்)

தமிழினம் திட்டமிட்டு அழிக்கப்பட்டுள்ளது என்பதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பலமுறை எடுத்துக் கூறியுள்ளது. பாராளுமன்றத்திலும் சரி சர்வதேச நாடுகளின் பிரதிநிதிகளைச் சந்திக்கும் போதும்சரி இதனை எடுத்து கூறியுள்ளது. இந்நிலையில் ஐ.நாவிடமும், அமெரிக்காவிடமும் இதனை நாம் வலியுறுத்தவில்லை என்று பொய்ப் பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றனர். ஐ.நா ஆணையாளர் அலுவலகத்தினால் இலங்கையில் நடைபெற்ற மனித உரிமை மீறல் தொடர்பாக விசாரணை இடம்பெறும் போது இங்கு நடந்தது என்ன என்பது வெளிப்படும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்று நண்பகல் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் இடம்பெற்ற போரின் போது தமிழினத்திற்கு எதிராக இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு சர்வதேச விசாரணை நடத்தப்படவேண்டும் என்பதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் மாற்றுக்கருத்தில்லை. ஆனால் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கூட்டத் தொடரில் தீர்மானம் கொண்டு வரப்படும் போது அதனை நாம் கோருவதில் சிக்கல் உள்ளது. ஏன் என்றால் மனித உரிமை ஆணையாளரின் அலுவலகத்தினால் மனித உரிமைகள் தொடர்பாகத்தான் விசாரணை நடத்த முடியும். ஆணையாளரின் அலுவலகத்தினால் விசாரணை நடத்தப்படும் போது இங்கு நடந்தது என்ன என்பது வெளிப்படும்.

மனித உரிமைப்பேரவையானது மனித உரிமைகளை மட்டும் தான் விசாரணை செய்ய முடியும். அந்தப் பேரவையின் வரைபை வரைந்தவர்கள் அவ்வாறு தான் வரைவிலக்கணப்படுத்தியுள்ளனர். எனவே ஆணையாளரின் அலுவலகத்தினால் விசாரணை நடத்தப்படும் போது அதனை ஒத்த விடயங்கள் பற்றி ஆராயப்படும். இதன் போது இங்கு நடந்த விடயங்கள் வெளிப்படும். தமிழினம் திட்டமிட்டு அழிக்கப்பட்டதற்கு சர்வதேச் போர்க் குற்ற விசாரணை நடத்தப்பட வேண்டும் என்பது அப்போது உலக நாடுகளுக்கு தெரியவர வாய்ப்புள்ளது.

இதனைவிட ஐ.நா தீர்மானத்தை எடுத்த எடுப்பில் எதிர்க்கின்றனர். துரதிர்ஷ்டவசமாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் உள்ள ஒரு சிலரும் மனித உரிமைப்பேரவை பற்றி முழுமையாக அறிந்திருக்காமல் தீர்மானத்தை எதிர்க்கின்றனர். இதனால் சர்வதேச நாடுகள் மத்தியில் குழப்பநிலை ஏற்பட்டுள்ளது.

காரணம், மனித உரிமைப்பேரவையின் தீர்மானத்தை இலங்கை அரசாங்கமும் எதிர்க்கின்றது, ஈழத்திலுள்ள தமிழ்த்தரப்பும் எதிர்க்கின்றது அப்படியிருக்கும் போது ஏன் தீர்மானம் கொண்டு வரப்படவேண்டும் என்று நினைக்கின்றனர்.

மனித உரிமைப்பேரவையும்ஆணையாளர் அலுவலகமும் விசாரணை நடத்தும் போது உண்மைகள் வெளி வரும் என்பதைப் புரிந்து கொள்ளாமல் சட்ட நுணுக்கம், சட்ட வரைவுகள் குறித்த அறிவற்றவர்கள் இவ்வாறு செயற்படுவது இலங்கை அரசிற்கு சாதமானதாகவுள்ளது. அதேவேளை இவர்களுக்கும் அரசிற்கும் இடையில் நெருங்கிய தொடர்புள்ளதாகவே எண்ணத் தோன்றுகின்றது.

மேலும் இந்தியாவை புறம்தள்ளி விட்டு தமிழர்கள் தீர்வைக்காண முடியாது. இந்தியாவுடன் இணைந்து தான் நாம் செயற்படவேண்டியுள்ளது. அதேவேளை ஐ.நா தீர்மானத்தின் வாககளிப்பின் போது நடுநிலை வகித்த நாடுகளுடன் நாம் பகைமை கொள்ளக்கூடாது. அந்நாடுகள் எடுத்த முடிவு குறித்து விமர்சனங்களை முன்வைக்கும் போது மிகவும் கவனமாக முன்வைக்க வேண்டும்.

அதேவேளை ஒரு நாட்டுக்கு எதிராக குற்றம் சாட்டித்தீர்மானம் கொண்டு வரப்படும் போது அதனை சில நாடுகள் புறக்கணிப்பதை மரபாக கொண்டுள்ளன. எனவே தீர்மானத்தின் வாக்கெடுப்பின்போது நடுநிலைவகித்துள்ளன.

அதேவேளை பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் முடிவினை இதுவரை நான் எடுக்கவில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் நேற்று கரவெட்டியில் இடம்பெற்ற மே தின நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பற்றியும் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் பற்றியும் கடுமையாக குற்றம்சாட்டப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் நடக்கும் அரச செயற்பாடுகள் இனப்படுகொலை நிகழ்ச்சி நிரலே. ஆனால் இதனை சர்வதேச விசாரணையுடன் தொடர்புபடுத்துவதில் சட்ட ரீதியான சிக்கல்கள் உள்ளன. இலங்கைப்பாராளுமன்றத்திலேயே இங்கு நடப்பது இனப்படுகொலையே என்பதை நானும் மற்றைய நாடாளுமன்ற உறுப்பினரான சுரேஸ் பிரேமச்சந்திரனும் பேசியிருந்தோம்.

ஐ.நா பிரேரணையில் இனப்படுகொலை பற்றி பிரஸ்தாபித்திருந்தால் நிரூபிக்க வேண்டும். இதற்கு நல்ல உதாரணமாக தென்சூடானை எடுத்துக் கொள்ளலாம். அங்கு நடந்தது இனப்படுகொலையென பிரஸ்தாபிக்கப்பட்டு விசாரணை நடைபெற்ற போதும் அது உறுதிப்படுத்தப்படவில்லை. அவ்வாறான அரசியல் ரீதியான தோல்வி எமக்கும் வந்தால் அதிலிருந்து மீண்டெழுவது கடினம். இதனைத்தான் இங்குள்ள சில தமிழ் அரசியல்வாதிகள் விரும்புகின்றனரா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

மேலும், திருகோணமலையில் இடம்பெற்ற கூட்டமைப்பின் கூட்டத்தில் வடக்கு மாகாணசபை உறுப்பினர் திருமதி அனந்தி சசிதரனை நான் எதுவும் பேசவில்லை அவர் அழுததாக வெளியான தகவல்களில் எந்தவிதமான உண்மையும் இல்லை. நான்பேசும் போது கூட்டத்தில் அவர் இருந்திருக்கவில்லை அவர் பேசும் போது நான் இருந்திருக்கவில்லை என்றும் நாடாளு மன்ற உறுப்பினர்சுமந்திரன்தெரிவித்தார். (செ-6)

## வங்கியாளர்களுக்கான இருநாள் கருத்தமர்வு

(யாழ்ப்பாணம்)

வணிகத்துடன் தொடர்புடைய எழுது திறன்களும் வினைத்திறன் மிக்க தொடர்பாடல் திறன்களும் என்ற தலைப்பிலான இரு நாள் கருத்தரங்கு யாழ்.கிறின் கிறாஸ் ஹோட்டலில் இன்றும் நாளையும் காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை நடைபெறவுள்ளது.

சர்வதேச கீர்த்தி பெற்ற ஊடகத் துறை ஆலோசகர் அஜிதா கதிர்காமர் வளவாளராக கலந்து கொள்ளும் இக் கருத்தரங்கு சுன்னாகம் துர்க்கா தலைமைத்துவத்திற்கான பயிற்சிகள் அபிவிருத்தி நிலைய முகாமையாளர் ஜனனி புஷ்பநாதன் தலைமையில் நடைபெறும்.

யாழ்.மாவட்ட உயர்தர வங்கியாளர்கள் கலந்து கொள்ளும் இக் கருத்தரங்கில் வங்கியாளர்களை கலந்து பயன் பெறுமாறும் கேட்கப்பட்டுள்ளது. (அ)

## ஸ்ரீ அம்மா பகவானின் மகா வாக்கியங்கள்



உலகளந்த பெருமானாகிய ஸ்ரீமத் நாராயணனுக்கு மிகவும் உகந்தது துளசி. இந்தத் துளசியானது சர்வரோக நிவாரணியும் ஆகும். துளசிச் செடி வீட்டில் இருந்தாலும் அதனை வழிபாடு செய்தாலும் நமது உடலுக்கும் மனதி ற்கும் ஆரோக்கியம் வளர்கின்றது. என்பது ஆராய்ச் சியாளர் கண்ட உண்மை.

ஸ்ரீ மஹாலஷ்மியே இந்தத் துளசிச் செடியாய் மாறி ஸ்ரீமஹா விஷ்ணுவிற்கு மிகவும் விருப்பமுள்ள மலராக விளங்குகிறாள்.


துளசி இல்லாத பூஜையை ஸ்ரீமத்நாராயணர் ஏற்றுக் கொள்வதில்லை.

துளசியால் மஹாவிஷ்ணுவைப் பூஜிப்பவர்கள், 1000 பாற்குடங்களால் அபிஷேகம் செய்த மன மகிழ்ச்சியை ஸ்ரீ மஹாவிஷ்ணு அடைகிறார் என்பது நம்பிக்கை.

துளசியினால் ஸ்ரீ மஹாதேவனையும் அர்ச்சிக்கலாம். ஏனெனில் அவர் சங்கர நாராயணராகவும் இருக்கிறார்.

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

### பொறுமையைக் கடைப்பிடி



- வாழ்வில் மேல் நோக்கி உயர்த்துவது அனைத்தும் நன்மை. முன்னேற்றத்தை தடுத்து கீழே தள்ளி வீழ்ச்சிக்கு உள்ளாக்குவது தீமை.
- நல்லொழுக்கம் என்பதில் சிறிதளவும் சுயநலம் இருப்பது கூடாது. எந்நிலையிலும் பொதுநலத்துடன் இருக்கப் பழகுங்கள்.
- இறைவனே ஏழையின் வடிவில் நம் முன் நிற்கிறான். அந்த ஏழையின் துன்பம் துடைப்பது நம் அனைவரின் கடமை.
- இறந்த உடலில் உயிர் மீண்டும் புகுவதில்லை. அதுபோல, இறந்த காலமும் மீண்டும் வரப்போவதுஇல்லை. நிகழ்காலமான இன்று வாழ்வதே முக்கியம்.
- பூமிதேவியைப் போல பொறுமையைக் கடைப்பிடியுங்கள். பொறுமையுடன் இருப்பவன் காலடியில் உலகமே கிடக்கும்.
- ஒற்றுமையுடன் இணைந்து பாடுபட்டு வளர்ச்சிப்பாதையில் முன்னேறுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்.பல்கலைக்கழகம் நடத்தும்

# மட்டுப்படுத்தப்பட்ட கிரிக்கெட் இறுதிப்போட்டி; யாழ்.பல்கலை, யாழ்.மத்தி இன்று பலப்பரீட்சை



யாழ்ப்பாண பல்கலைக் கழக அணி



யாழ்ப்பாண மத்திய கல்லூரி

யாழ்ப்பாண பல்கலைக்கழகம் நடத்தும் மட்டுப்படுத்தப்பட்ட கிரிக்கெட் போட்டியின் இறுதிப் போட்டி இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாண பல்கலைக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது. இறுதிப் போட்டியில் யாழ்ப்பாண பல்கலைக் கழக அணியும் யாழ்ப்பாண மத்திய கல்லூரி விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளது. (க)

## ஜே.பி.எல் இருபது - 20 கிரிக்கெட் போட்டி ஆரம்பம்

ஜே.பி.எல் என்று அழைக்கப்படும் யாழ்ப்பாணம் பிறிமியர் லீக் இருபது - 20 கிரிக்கெட் சுற்றுப்போட்டி எதிர்வரும் மே மாதம் 10 ஆம் திகதி முதல் யாழ்ப்பாணம் இந்து கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

யுவ பிரண்ட் பவுண்டேஷன் நிறுவனத்தின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இந்த இருபது - 20 சுற்றுப்போட்டியில் யாழ். மாவட்டத்தினைச் சேர்ந்த 18 துடுப்பாட்ட அணிகள் பங்குபற்றவுள்ளதுடன், அவை நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு போட்டிகள் நடைபெறவுள்ளன.

அதன்படி ஏ பிரிவில் கொக்குவில் மத்திய சனசமூக நிலையம், ஸ்ரான்லி, ஸ்கந்தா ஸ்ரார்ஸ், ஸ்ரீ காமாட்சி, மானிப்பாய் பரிஷ் ஆகிய அணிகளும், பி பிரிவில் ஜொலிஸ் ரார்ஸ், கிறாஸ்கோப்பர்ஸ், மூளாய் விக்டோரி, திருநெல்வேலி, யூனியன் ஆகிய அணிகளும், சி பிரிவில் சென்றலைட்ஸ், ஜொனியன்ஸ், நியூ ஸ்ரார்ஸ், அரியாலை மத்தி ஆகிய அணிகளும், டி பிரிவில் சென்றல், பற்றீசியன், திருநெல்வேலி வை.எம்.எச்.ஏ, யங்ஸ்ரார்ஸ் ஆகிய அணிகளும் மோதவுள்ளன.

முதல் சுற்றுப் போட்டிகள் லீக் முறையில் நடைபெற்று தொடர்ந்து காலிறுதி மற்றும் அரையிறுதிப் போட்டிகள் நடைபெறும் ஜூன் மாதம் 29 ஆம் திகதி இறுதிப்போட்டி இடம்பெறவுள்ளதாக போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (க)



இலங்கை தேசிய சோட்டோக்கான் கராத்தே சுற்றுப் போட்டியில் 11 வயதுப் பிரிவில் சென்.ஜோன்ஸ் கல்லூரி மாணவன் வி.நிவேதன் மண்ணிறப்பட்டிப் பிரிவில் காட்டா. ருமித்தே போட்டியில் 2 தங்கப் பதக்கம் பெற்று சாதனை படைத்துள்ளார். அவர்களை படத்தில் காணலாம்.

அரச அதிபர் வெற்றிக்கிண்ணம்

## பெண்களுக்கான கயிறிழுத்தல்; கோப்பாய் பி.செயலகம் சம்பியன்



யாழ்.மாவட்ட செயலக நலன்புரிக் கழகம் நடத்திய அரச அதிபர் வெற்றிக்கிண்ண 2013 ஆம் ஆண்டுக்கான போட்டிகளின் இறுதி நிகழ்வும் பரிசளிப்பும் அண்மையில் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் இடம் பெற்றது.

யாழ்.மாவட்ட செயலக நலன்புரிக் கழகம் நடத்திய அரச அதிபர் வெற்றிக்கிண்ண 2013 ஆம் ஆண்டுக்கான பெண்களுக்கான கயிறிழுத்தல் போட்டியில் சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணியை வீழ்த்தி கோப்பாய் பிரதேச செயலக அணி சம்பியனாகியது. (க-23)

## இன்றைய போட்டி


இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தினால் வருடாந்தம் நடத்தப்படும் 40 வயதிற்கு மேற்பட்ட அணிகளுக்கிடையிலான Master Over 40 Years உதைபந்தாட்டப் போட்டிகள் இடம்பெறவுள்ளன.

இதன் ஒரு அங்கமாக வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழகமும் வவுனியா சீனியர் ஸ்ரார் அணியும் போட்டியொன்றில் மோதவுள்ளன.

இப் போட்டி இன்று சனிக்கிழமை மாலை 4.30இற்கு கொலின்ஸ் மைதானத்தில் இடம்பெறவுள்ளது. (க-23)








புத்தாண்டை முன்னிட்டு இளவாலை பொலிசார், [illegible] செயலகம் மற்றும் இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கம் ஆகியன இணைந்து நடத்தும் சித்திரை பெருவிழா கோலா[illegible] மைதானத்தில் இடம்பெற்றபோது... (23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சென்னை வெற்றி



கொல்கத்தாவுக்கு எதிரான போட்டியில் சென்னை அணி 34 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. ஐ.பி.எல் சீசன் 7-ல் நேற்று கொல்கத்தா மற்றும் சென்னை அணிகள் மோதின. மழை காரணமாக போட்டி 17 ஓவர்களாக குறைக்கப்பட்டது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற சென்னை அணி நிர்ணயிக்கப்பட்ட 17 ஓவர்களில் 3 விக்கெட் இழப்பிற்கு 148 ஓட்டங்கள் எடுத்தது. 149 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்று களமிறங்கிய கொல்கத்தா அணி சென்னை அணியின் பந்துவீச்சை சமாளிக்க முடியாமல் தடுமாறியது. கொல்கத்தா அணி நிர்ணயிக்கப்பட்ட 17 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 114 ஓட்டங்கள் எடுத்து 34 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. இப் போட்டியின் ஆட்ட நாயகனாக சென்னை அணியின் ஜடேஜா தெரிவானார். (க)

## ஐ.தே.க. அம்பா...

துப்பாக்கியை காட்டி கொலை அச்சுறுத்தல் விடுத்த சம்பவம் தொடர்பில் இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை.

இதனைக் கண்டித்து ஐக்கிய தேசியக் கட்சி அம்பாந்தோட்டை பொலிஸ் நிலையத்திற்கு எதிரில் சத்தியாக்கிரகப் போராட்டம் ஒன்றை நடத்த உள்ளது.

இதில் ஐக்கிய தேசியக் கட்சியின நாடாளுமன்ற உறுப்பினர்கள், தென். மேல் மாகாண சபை உறுப்பினர்களும் கலந்து கொள்ள உள்ளனர்.(செ-11)

## படை வீரர்...

யூன் 02 ஆம் திகதி வரை அனுஷ்டிக்கப்படும்.

கடந்த வருடம் அனுஷ்டிக்கப்பட்ட இராணுவ வீரர்கள் நினைவு மாதத்தின் போது கொடி விற்பனையில் பெறப்பட்ட இலாப விபரங்கள் மாகாண ஆளுநர்களினால் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டன.

இந்த நிதி படைவீரர்களின் நலன்புரி நடவடிக்கைகளுக்கு செலவிடப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து 2014 ஆம் ஆண்டு விற்கப்படவேண்டிய கொடிகளை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மாகாண ஆளுநர்களிடம் கையளித்தார்.

பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவான படை வீரர்களின் பிள்ளைகளுக்கு ஜனாதிபதியினால் நேற்றுப் புலமைப் பரிசில்களும் வழங்கப்பட்டன. (செ-11)

## அப்பனுக்கு..


டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரின் அலுவலகம் தெரிவித்தது.

விடுதலைப் புலிகள் அமைப்பை மீள ஒருங்கிணைக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டதாக குற்றம் சுமத்தப்பட்ட கோபி, தேவியன், அப்பன் ஆகியோர் அண்மையில் சுட்டுக் கொல்லப்பட்டதாக அரசாங்கம் அறிவித்தது.

இந்த நிலையில் இவர்களுக்கு தங்குமிட வசதிகளை வழங்கிய குற்றச்சாட்டில் மேற்படி நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் அநுராதபுரம் தேவநம்பியதிஸ்ஸ மாவத்தையை சேர்ந்த தபால் ஊழியர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேக நபர் தொடர்பில் அநுராதபுரம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(செ-11)




## வன்னிப் போர் நேற்று ஆரம்பம்

வன்னியின் பெரும் போர் என அழைக்கப்படும் கிளி-முல்லை நட்புக் கிண்ணம் நேற்று நண்பகல் 12 மணிக்கு கிளிநொச்சி மகா வித்தியாலய மைதானத்தில் ஆரம்பமானது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற கிளிநொச்சி மகா வித்தியாலய அணி முதலில் களத்தடுப்பை தெரிவு செய்தது.

முதலாவது இன்னிங்சில் துடுப்பெடுத்தாடிய புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி அணி 44.4 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 77 ஓட்டங்களை மட்டும் பெறறது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கிளிநொச்சி மகா வித்தியாலய அணி 17 ஓவர்களில் 39 ஓட்டங்களைப் பெற்ற வேளையில் முதலாம் நாள் ஆட்டம் நிறைவு பெற்றது. (க)

## நண்பர்களின் பெரும் போர் இரு கல்லூரியும் சிறப்பாட்டம்

முல்லையில் நேற்று ஆரம்பமான முல்லைத்தீவு வித்தியானந்தா கல்லூரிக்கும் யாழ்ப்பாணம் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்திற்கும் இடையிலான நண்பர்கள் போர் என அழைக்கப்படும் கிரிக்கெட் போட்டியில் இரு கல்லூரியும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியுள்ளன.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற வித்தியானந்தா கல்லூரி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதன் படி முதலில் துடுப்பெடுத்தாடிய கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம் 46 ஓவர்களில் அனைத்து விக்கெட்டினையும் இழந்து 136 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

துடுப்பாட்டத்தில் விதுன் 37, உதய சபேசன் 27 ஓட்டங்களை பெற்றனர். பந்து வீச்சில் தனஞ்சன் 18 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டினையும் அருண் 3 விக்கெட்டினையும் கைப்பற்றினர்.

பின்னர் தனது முதலாவது இன்னிங்சுக்காக துடுப்பெடுத்தாடிய வித்தியானந்தா கல்லூரி 12 ஓவர்களில் ஒரு விக்கெட் இழப்பிற்கு 55 ஓட்டங்களை பெற்றது. போட்டியின் இரண்டாம் நாள் ஆட்டம் இன்றாகும். (க)

## ராஜபக்ஷ...

குமார திஸாநாயக்கவுடன் முன்னாள் கட்சித் தலைவர் சோமவன்ச அமரசிங்க, பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா மற்றும் கட்சியின் எம்.பிக்கள் உட்பட பல பிரதிநிதிகள் கலந்துகொண்டிருந்ததுடன் பல்லாயிரக்கணக்கான மககளும் கலந்துகொண்டிருந்தனர்.

அங்கு உரையாற்றிய அனுர குமார திஸாநாயக்க தொடர்ந்து கூறுகையில்,

மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சியாலோ மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியாலோ முடியாது. இந் நிலையில் தற்போதைய அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு எதிராக மக்கள் பொங்கியெழும்போது, அதனைத் 'தடுக்க ஒவ்வொரு கதைகளை தயாரிக்கும் செயற்பாடுகள் இடம்பெறுகின்றன.

இதன்படி சிங்களவர்களிடம் முஸ்லிம்கள் தொடர்பாகக் கூறியும் முஸ்லிம்களிடம் சிங்களவர்களே உங்களின் எதிரியெனக் கூறியும் முரண்பாடுகளைத் தோற்றுவிக்கும் முயற்சிகள் இடம்பெறுகின்றன. அதேபோல் வடக்கு மக்களிடம் சென்று உங்களின் எதிரி சிங்களவர்கள் எனக் கூறி சகல இனத்தவர்களையும் பிரித்து வைக்கும் செயற்பாடுகள் நடக்கின்றன.

ஜே.ஆர். ஜெயவர்தன காலத்திலும் இவ்வாறு நடைபெற்றது. இதன்படி 83 கறுப்பு யூலை சம்பவம் இடம்பெற்றது. இதனால் வெளிநாடுகளுக்குச் சென்ற தமிழர்களே இன்று புலம்பெயர் தமிழர்களாக செயற்படுகின்றனர்.

இந்நிலையில் இந்த நாட்டில் ஜே.வி.பி. அரசியலில் இருக்கும் வரை இனவாத மோதல்கள் இடம்பெறுவதற்கு இடமளிக்கப் போவதில்லையென உறுதியாகக் கூறுகின்றோம்.

நாட்டில் இனவாதம் தூண்டப்படும் இவ்வேளையில் அமைச்சரவையில் ஜனாதிபதியுடன் டக்ளஸ் தேவானந்தா, ரவூப் ஹக்கீம், சம்பிக்க ரணவக்க, வீரவன்ச, தொண்டமான் என சகலரும் இருககின்றனர். இவர்கள் ஒவ்வொரு தீர்மானத்தின் போதும் கைதூக்கி ஒற்றுமையாக இருந்துகொண்டு மக்களை சண்டையிட்டுக் கொள்ளுமாறு கூறுகின்றனர்.

இதேவேளை, நாட்டில் இனவாதத்தைத் தடுத்து இன ஐக்கியத்தை ஏற்படுத்த வேண்டும். அதற்கு ஒரு மொழி, ஒரு மதம் மற்றும் கலாசாரத்தை மாத்திரம் உயர்வாகப் பார்ப்பதனை நிறுத்தி சகல மொழி, சகல மதம் மற்றும் கலாசாரங்களையும் சமமாகப் பார்க்க வேண்டும்.

இதனைச் செய்யாது ராஜபக்ஷக்கள் தொடர்ந்தும் இவ்வாறு செயற்பட்டால் நாமும் எமது பிள்ளைகளும் யுத்தம் செய்வதைத் தடுக்க முடியாது. இந்த நாட்டில் இன ஐக்கியம் வேண்டும். அதனை எம்மால் மட்டுமே ஏற்படுத்த முடியும் என்றார். (செ-11)

## கஷ்ட பிரதேச...

என்றும் அவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்திலுள்ள மாகாண கல்வி அமைச்சின் செயலாளரின் அலுவலகத்தில் நேற்று மாலை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

மாகாணத்தின் கல்வியில் தேவைகள் குறைபாடுகள் மற்றும் பற்றாக்குறை என்பன தொடர்பில் மாகாண கல்வி அதிகாரிகள் வலயக் கல்வி அதிகாரிகளுடன் இன்று (நேற்று) கலந்துரையாடப்பட்டுள்ளது. இதன்போது மாகாண கலவியின் வளர்ச்சியையும் அதன் மேம்பாட்டிற்கும் அமைவாக பல முடிவுகளும் எடுக்கப்பட்டிருக்கின்றது.

இதில் குறிப்பாக ஆசிரியர் கலாசாலைகளிலிருந்து வெளியேறுகின்ற ஆசிரியர்கள் மற்றும் கல்வியற் கல்லூரிகளிலிருந்து வெளியேறுகின்ற ஆசிரியர்களை பாடசாலைகளின் தேவைகளுக்கமைவாக நியமிப்பதுடன் இங்கு தேவையுடைய ஏனைய பாடசாலைகளுக்கும் ஆசிரியர்களை நியமிப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதில் யாழ்ப்பாணம், தென்மராட்சி, வடமராட்சி, வலிகாமம் ஆகிய வலயங்களினைச் சேர்ந்த ஆசிரியர்களில் இதுவரை காலமும் கஷ்டரபிரதேச பாடசாலைகளில் கடமைகளை பூர்த்தி செய்யாத ஆசிரியர்களை ஆசிரிய தேவையுடைய க்ஷ்ட பிரதேசங்களிலுள்ள பாடசாலைகளுக்கு நிபந்தனை அடிப்படையில் நியமிப்பது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய மேற்படி வலயங்களில் கடமையாற்றுகின்ற ஆசிரியர்களில் கஷ்டப்பட்ட பிரதேசங்களில் கடமைகளை பூர்த்தி செய்யாத ஆசிரியர்களின் விபரங்கள் வலயக்கல்வி அலுவலகத்தின் ஊடாக திரட்டப்படவுள்ளது. இவ்வாறு திரட்டப்படுகின்ற விபரங்களுக்கமைவாக ஆசிரிய இடமாற்றங்கள் யூன் மாதம் முதல் நடைமுறைக்கு வரும் வகையில் வழங்க நடவடிக்கை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தார்.

மேலும், மாகாணத்தின் தற்போதைய கல்வி நிலை தொடர்பிலும் கடந்த மூன்று ஆண்டுகள் ஒப்பிடும் போது இதன் முன்னேற்றங்கள் குறித்தும் ஆராய்ந்து வருகின்றோம். இதில் குறிப்பாக க.பொ.த.சாதாரண தரப் பரீட்சையின் பெறுபேறுகளில் ஏற்பட்டிருக்கின்ற மாற்றங்கள் அதாவது பாட ரீதியிலான மாற்றங்கள் குறித்தே கவனம் செலுத்தியுள்ளோம்.

இதற்கமைய தற்போது கஷ்ட பிரதேசங்களிற்கு வழங்கப்படவுள்ள ஆசிரிய இடமாற்றங்களில் பாடரீதியான தேவைகளுக்கே முன்னுரிமை கொடுத்து ஆசிரியர்கள் நியமிக்கப்படவுள்ளனர் என்றும் கூறினார்.

வடக்கு மாகாணத்தில் கடமையாற்றுகின்ற ஆசிரியர்களுக்கு இனிமேல் தற்காலிக இணைப்புக்கள் வழங்குவதில்லை என்று வடக்கு மாகாண கல்வி ஆலோசனைக்குழு தீர்மானித்துள்ளதாகவும் இவ்வாறு பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டிருந்த தற்காலிக ஆசிரிய இணைப்புக்கள் அனைத்தும் இம் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னதாக முடிவுறுத்தப்பட உள்ளதாகவும் தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்தின் கல்வி அபிவிருத்தி முன்னேற்றத்திற்காக மாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் கல்வி அதிகாரிகளை உள்ளடக்கியதாக மாகாண கல்வி ஆலோசனைக் குழுவொன்று நியமிக்கப்பட்டிருந்தது.

இந்தக் குழு அண்மையில் ஒன்று கூடி பல்வேறு விடயங்கள் தொடர்பில் ஆராய்ந்துள்ளதுடன் பல தீர்மானங்களை நிறைவேற்றியிருக்கின்றது. இதில் குறிப்பாக ஆசிரியர்கள் தொடர்பிலான பிரச்சினைகளே அதிகளவில் ஆராயப்பட்டு முடிவுகளும் எட்டப்பட்டிருக்கின்றன.

அதாவது மாகாணத்தில் கடமையாற்றுகின்ற ஆசிரியர்களிற்கு கடந்த காலத்தில் அவர்களின் தேவைகள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பில் விடுக்கப்படுகின்ற கோரிக்கைகளுக்கமைய தற்காலிக இடமாற்றங்கள் வழங்கப்பட்டிருந்தன. ஆனால் தற்போது இந்த இடமாற்றங்கள் இரத்துச் செய்யப்படுவதுடன் இனிமேல் வழங்குவதில்லை என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது, அதேவேளை ஆசிரியர்களுக்கு பாதகமான முடிவுகள் எடுக்கப்பட மாட்டாது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (செ-11)

## கலாசார...

காரிகள் எனப் பலரும் கலந்து கொண்டார்கள்.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு முதலமைச்சர் ஆற்றிய உரையின் வடிவம் வருமாறு,

இன்று எம்மக்கள் தம்மைத் தாமே வலுவூட்டி வாழ்க்கைத் தரத்தை வளம் பெறச்செய்ய ஆக்கபூர்வமான நடவடிக்கைகளில் இறங்க முன்வரவேண்டும். எல்லா விதமாகவும் எமது இயல்பு வாழ்க்கையையும் முன்னேற்றத்தையும் தடைசெய்யுமாறான ஒருசூழ்நிலையே தற்போது விளங்குகின்றது.

இன்றுதான் வடகிழக்கு மாகாண சபைகளில் எந்தளவுக்கு அரசாங்கம முட்டுக் கட்டைகளை முன்வைத்து எமது முன்னேற்றத்தைத் தடைப்படுத்தி வந்துள்ளது என்பது பற்றி ஒரு சிங்கள ஊடகவியலாளர் கலாநிதி ஜெகான் பெரேரா எழுதியிருந்த ஆராய்ச்சிக் கட்டுரையைக் கண்ணுற்றேன்.

அதாவது எழக்கு இன்று நடப்பது போல்த்தான் முன்னரும் நடந்து வந்துள்ளது என்பதை அவரின் கட்டுரை ஆராய்ச்சி பூரணமாக எடுத்துக் காட்டுகின்றது. அரசாங்கம் திட்டமிட்டு இதனைச் செய்வது புலனாகின்றது. எனவேதான் எங்கள் மக்களின் நலனைப் பாதுகாக்க ஆக்கபூர்வமான நடவடிக்கைகளில் நாம் இறங்க வேண்டியுள்ளது.

அண்மையில் எமது புதிய வட மாகாண படைத்தளபதி இராணுவத்தினால் பலாலியில் பயிரிட்டு, அறுவடை செய்து, கொண்டு வரப்பட்ட மரக்கறிகளை திருநெல்வேலிச் சந்தையில் விற்பனைக்கு விடப்படாது என்று ஆணையிட்டதால் ஓரளவுக்கு உள்ளூர் மக்களின் மரக்கறி விற்பனைகள் வழமைக்குத் திரும்பியுள்ளன. அவருக்கு நாம் நன்றி கூறுகின்றோம்.

ஆனால் இதுகாலும் நடந்து வந்த அந்த இராணுவ விற்பனை முறைமை எதிர்காலத்தில் மீண்டும் தொடக்கப்படாது என்பது என்ன நிச்சயம்?

அதனால்தான் நான் நேற்று முன்தினம் மே தினக் கூட்டத்தில் படையினர் வெளியேற வேண்டிய அவசியத்தைக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

எமது சகல சமூகச் சீரழிவுகளுக்கும் பின்னால் வெளியார் உள்ளீடல்களே காரணமாக இருக்கின்றன.

சுயநல காரணங்களுக்காக உள்ளூர்வாசிகள் இப்பேர்ப்பட்ட வெளியார் உள்ளீடல்களுக்குத் துணை போகின்றார்கள்.

தாம் இங்கு தொடர்ந்து இருப்பது உள்ளூர் மக்களுக்கு எரிச்சலையும் கவலையையும் ஏற்படுதது கின்றது என்பதை வெளியார் உணர்ந்தால் அவர்களை வெளியனுப்புவது இலகுவாகிவிடும்.

ஆனால் எமது உள்ளூர் மக்கள் "வேண்டாம் வேண்டாம்! போகாதீர்கள் வெளியாளர்களே" என்று கூற முன்வந்தால் எமது வருங்காலம் இருளடைந்ததாகவே இருக்கும் என்பதை எமது மக்கள் உணர்ந்து திருந்த வேண்டும் என்று கூறி என்னை இந்த சந்தை திறப்பு விழாவில் பங்குபற்ற அழைத்தமைக்கு என் நன்றியறிதல்களைக் கூறி என் சிற்றுரையை இத்துடன் முடித்துக் கொள்கின்றேன். (செ-11)

## சட்ட விரோத...

வர்கள் மற்றும் 30 ஆண்கள் அடங்குவதாகவும் அவர் கூறியுள்ளார்.

திருகோணமலைக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ள புகலிட கோரிக்கையாளர்கள் மேலதிக விசாரணைகளுக்காக குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் கடற்படைப் பேச்சாளர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (செ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Study in Latvia

(Schengen Country - Student gets the Visa for 25 Countries)

September intake

SPOT ADMISSION

2nd Time in Jaffna

13,14th of May,2014

விசா 100% உத்தரவாதம்

அனுமதிகள் முற்றிலும் இலவசம்

Why Study in LATVIA?

- All Programs are in English Language
- Student can work 20 Hrs per week part time.
- Paid Internships in EUROPE
- All universities are Govt. or Govt approved
- one day old funds also acceptable
- Programmes available in all fields like engineering , Business , Medical , MBBS , Hotel Management etc.
- IELTS கட்டாயமானது ஒன்றில்லை

LATVIA கல்லூரி அதிபர்களை நேரடியாக சந்தித்து அனுமதியினை பெற்றுக் கொள்ளக்கூடிய அரிய சந்தர்ப்பம்

க.பொ.த (உ/த) பரீட்சையில் கட்டாயம் 3 பாடங்களிலும் சித்தியடைந்திருத்தல் வேண்டும்

021 7200 989

0779265447

WORLD EDUCATION CONSULTANCY

No:377, Sangaththanai, Chavakachcheri.



# இலவச விசா ஆலோசனைகள்

- ஐக்கிய அமெரிக்கா
- கனடா
- அவுஸ்ரேலியா
- நியூஸ்லாந்து
- ஐரோப்பிய நாடுகள் (UK, France, Italy, Swiss, Germany, Poland, Latvia)
- ஆசிய நாடுகள் (Singapore, Malaysia, India, China, Russia )

Family Visa Student Visa Work Permits

# Entry with G.C.E O/L # IELTS Not required

# Free Accommodation # Very low Course fee

# Financial Sponsorships # Full Scholarships

(C-7245)

வெளிநாட்டில் படிக்க, உழைக்க எமது இலவச சட்ட ஆலோசனை மூலம் பலர் பயன் பெற்றுள்ளனர் ......

iCS Study Overseas

77, மணிக்கூட்டு கோபுரவீதி, யாழ்ப்பாணம்

107-B 1/1,Galle Road, Colombo - 06

021 4926222 , 077 3013060


## இலங்கை...

இது தொடர்பில் அவர் சர்வதேச ஊடக வியலாளர்களிடம் மேலும் தெரிவிக்கை யில்,

நல்லிணக்கத்தை ஏறபடுத்தும் முனைப் புக்களில் அரசாங் கத்தின் நடவடிக்கை கள் கவலையளிக் கும்வகையில்அமைந் துள்ளன.

இலங்கையில் ஜனநாயகத்தை வலுப்படுத்திக்கொள்ள அமெரிக்கா உதவி களை வழங்கும்.

ஜனாதிபதி ஒபாமா ஆட்சியில் ஆசிய மீதான அமெரிக்கா வின் கவனம் இரட் டிப்பாகியுள்ளது.

2009ஆம்ஆண்டு இலங்கையில் போர் முடிவடைந்த போதும அந்நாட்டில் நல்லி ணக்க செயற்பாடு கள் இன்னும் வலு வற்ற நிலையிலேயே இருக்கின்றது.

அத்துடன் கடந்த நான்கு ஆண்டு காலத் தில் இலங்கை அர சாங்கம் பொறுப்புக் கூறல் மற்றும் நல்லி ணக்க செயற்பாடு களில் அர்த்தமுள்ள நடவடிக்கைகளை ஏற்படுத்த தவறியுள் ளமை ஏமாற்றத்தை ஏற்படுத்துகிறது.

அமெரிக்கா, இலங்கை மக்களு டன் நீடித்த சமாதா னத்தையும் ஜன நாயகத்தையும் ஏற்படுத்தும் நடவடிக் கைகளில் இணை ந்து பணியாற்றி வருகிறது எனவும் பிஸ்வால் கூறியுள் ளார். (செ-11)


15 வருடங்களுக்கு மேற்பட்ட விசா சேவை வல்லுனர்களின் வழிகாட்டலின் கீழ் உத்தரவாதமான Student Visa - Work Permit - Skilled Migration & PR

ஏப்ரல் 30இல் 7 பேருக்கு UK, Australia, New Zealand & Malaysia விசா அனுமதிக் கடிதங்கள் வழங்கப்பட்டன!

இவ்வார Special

O/L இல்லாமலும் Student Visa & Work Permit ஏற்பாடு

O/L சித்தியிருந்தால் UK க்கு 4 வருட விசா

A/L 3S உடன் 26 நாடுகளுக்கான செங்கன் விசா

China MBBS & German Engineering with Scholarship

Australia/New Zealand/Canada Skilled Migration

Dubai, Qatar உடனடி கௌவரமான வேலைவாய்ப்புக்கள்

அனைத்துச் சேவைகளுக்கும் 3 வருட சேவை உத்தரவாதம்

சிகரம் Sikaram Gateway to Education & Employment

TakeOff your dreams கனவுகளுக்கு இறக்கை கட்டுவோம்

மேலதிக விபரங்களுக்கு:

www.sikaram.lk

முற்பதிவு: 077 36 16 798

(C-7253)

சிகரம் கல்வி-தொழில் வழிகாட்டி, இல.153, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்



# திருமுருகன் கொம் நெற்

மிகக் குறைந்த கட்டணத்தில் 220ற்கும் மேற்பட்ட நாடுகளுக்கான

## துரித தபால்கள், பொதிகள் சேவை

அன்பளிப்பு பொருட்கள், உணவுப் பண்டங்களை வீட்டில் இருந்தவாறே அனுப்ப முடியும்

3 -5 நாட்களில் உரிய முகவரியில் ஒப்படைக்கப்படும்

* அனைத்து நாடுகளுக்குமான விமானப் பயணச்சீட்டு, அதற்கான ஆலோசனைகள்.
* கனடா, லண்டன், இந்தியாவுக்கான Online Visa விண்ணப்ப சேவை.

WESTERN UNION | MMBL Money Master

வெளிநாடுகளில் இருந்து மிக விரைவாக பணத்தினைப் பெற்றுக்கொள்ள

இல. 271 A. கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம். (ஆன் சிலோனிந்து முன்பாக)

தொ.பே: 021 222 7835

(5945)

பிரதான கிளைகள் :

இல. 18,பிரதான வீதி நெல்லியடி.

இல.46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.

பிரதான வீதி, சங்கானை.

இல.30, கனகபுரம் வீதி, கிளிநொச்சி.



# விற்பனைக்கு

TATA-BATA (ACEEX2)

(6288)

✠New Face ✠Full Body உடன்

✠NP PW -XXXX ✠ லீசிங் வசதியுடன்

தொடர்பு: 0779766683


# நெல்லண்டையான் வெளியீட்டுக் கழகம் நடத்தும் சிவஸ்ரீ தியாக சோமாஸ்கந்தராஜாக் குருக்கள் அவர்களின் பொன் விழாவும் சோமாஸ்கந்த ராஜ தரிசனம் - 1 மலர் வெளியீடும்



தலைவர்

ஸ்ரீமான் உயர்திரு. சிவபாதம் நந்தகுமார் அவர்கள்

(வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர்)

இடம் :- யா/தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலய மண்டபம்

காலம் :- 04.05.2014

ஞாயிற்றுக்கிழமை

பகல் 10.30

கௌரவ. த.குருகுலராஜா அவர்கள்

(வட. மாகாண கல்வியமைச்சர்)

## சிறப்பு விருந்தினர்

உயர்திரு.சி.சத்தியசீலன் அவர்கள்

(செயலாளர், கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சு, வட. மாகாணம்)

## கௌரவ விருந்தினர்

ஸ்ரீமதி அருள்நங்கை சண்முகநாதன் அவர்கள்

(அதிபர், புதிய உயர்கல்லூரி, ஆரியகுளம் சந்தி முதுநிலை விரிவுரையாளர் இந்து நாகரிகம்)

## மங்கல விளக்கேற்றல்

## வேதபாராயணம்

## தமிழ்த்தாய் வாழ்த்து

## தமிழ் மொழி வாழ்த்து

இசைத்துறை ஆசிரியை

கௌசிகன் ஜெயபாரதி அவர்கள்

(யா/அம்பன் அ.மி.த.க. பாடசாலை ஆசிரியை)

## ஆசியுரை

சிவஸ்ரீ சோமாஸ்கந்த தண்டபாணிக தேசிகர்

(வல்வை முத்துமாரியம்மன் தேவஸ்தான பிரதமகுரு)

அருட்தந்தை சூ.டேமியன் அடிகளார்

(சீர்மியர் அஞ்சலியகம்)

## வரவேற்புரை

திரு.கி.நவநீதன் அவர்கள்

(ஆசிரியர், யா / அம்பன் அ.மி.த.க. பாடசாலை)

## தலைமையுரை

## அறிமுகவுரை

திரு.வேல்.நந்தகுமார் அவர்கள்

(ஆசிரிய ஆலோசகர் தமிழ், துணுக்காய் நெல்லண்டையான் வெளியீட்டுக்கழக செயலாளர்)

## மதிப்புரைகள்

*சோமஸ்கந்தராஜ தரிசனம் - 1*

*கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்* அவர்கள்

(வருகை விரிவுரையாளர் கச்சுவில் பல்கலைக்கழகம் யப்பான்)

*அருள் நங்கை -1*

*பேராசிரியர் S.சிவலிங்கராஜா அவர்கள்*

(முன்னாள் தலைவர், தமிழ்த்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

*அக்கினி காரியம் (தமிழ், சமஸ்கிருதம்)*

சக்தி உபாசகர் கும்பாபிஷேக வேத வாருதி

*சிவஸ்ரீ.பா.பாலகிருஷ்ணக்குருக்கள் அவர்கள்*

(கொம்மாந்துறை மனோன்மணி தேவஸ்தானம்)

## வாழ்த்துரைகள்

பேராசரியர் கலாநிதி அருணாச்சலம் சண்முகதாஸ் அவர்கள்

(வாழ்நாட் பேராசிரியர்)

உயர்திரு. S.திரவியராசா அவர்கள்

(கோட்டக்கல்வி அதிகாரி, மருதங்கேணி)

உயர்திரு. வே.பரமேஸ்வரன் அவர்கள்

(அதிபர், யா/அம்பன் அ.மி.த.க. பாடசாலை)

உயர்திரு. Dr.K.K.யோகநாதன் அவர்கள்

(அதிபர், யா/தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்)

உயர்திரு. பொ.அரவிந்தன்

(அதிபர். யா/கற்கோவளம் மெ.மி.த.க.பாடசாலை)

## கௌரவ விருந்தினர் உரை

## சிறப்பு விருந்தினர் உரை

## பிரதம விருந்தினர் உரை

## நூல்வெளியீட்டுரை

உயர்திரு. கலாநிதி த.கலாமணி அவர்கள்

(சட்டத்துறைத் தலைவர். யாழ்.பல்கலைக்கழகம்)

## நூல்கள் மூன்று

1. சோமாஸ்கந்தராஜா தரிசனம் -1
2. அருள்நங்கை - 1
3. அக்கினிகாரியம் சமஸ்கிருதம், தமிழ்

## முதற்பிரதி வழங்கல்

## சிறப்புபிரதி வழங்கல்

சாதனையாளர் விருதுவழங்கல்

Dr.K.K.யோகநாதன் அவர்கள்

Dr.S.கணேசு அவர்கள்

Dr.சின்னையா வேலும்மயிலும் அவர்கள்

ஸ்ரீமதி அருள்நங்கை சண்முகநாதன் அவர்கள்

சிவஸ்ரீ பா.பாலகிருஷ்ணக்குருக்கள் அவர்கள்

ஏற்புரை:

விழா நாயகன் சிவஸ்ரீ தியாக. சோமாஸ்கந்த ராஜாக் குருக்கள் அவர்கள்

நன்றியுரை

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நெல்லண்டையான் வெளியீட்டுக் கழகம், தும்பளை, பருத்தித்துறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.05.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.